# சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை - 13

# உறுப்பாலும் சிறப்பாலும் பெயர்பெற்றோர்



கழக வெளியீடு : எ00

சங்கத் தமிழ்ப்புலவர் வரிசை — கரு

# உறுப்பாலும் சிறப்பாலும் பெயர்பெற்றோர்

புலவர் கா கோவிந்தன் எம் ஏ
எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.
1965

காங்க முதலியார் கோவிந்தன் (1917)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Mar 1954
Reprint: Jan 1965

O31,IAw
K5

URUPPALUM CHIRAPPALUM
PEYARPETTRORE

Paari Achakam, Madras-1.

# பதிப்புரை

தமிழணங்கின் அரும்பெறற் புலவர்கள், சங்க காலத்து வாழ்ந்த மேதகையோராவர். இவர்களின் பெயர்கள் சிறப்பினாலும் உறுப்பு முதலியவைகளினாலும் நாட்டில் மக்களால் பெயராகக்கொண்டு வழங்கலாயின. இதில், உறுப்பாலும் சிறப்பாலும் பெயர் பெற்ற புலவர் பெருமக்கள் இருபத்தறுவர் வரலாறுகள் கோத்துரைக்கப் பெற்றுள்ளன.

இதனையும், புலவர், திரு. கா. கோவிந்தன் அவர்கள் தம் சீரிய கூரிய புலமை நலத்தால் ஆக்கி உதவியுள்ளார்கள். இவ்வரிய நூலினை 'உறுப்பாலும் சிறப்பாலும் பெயர்பெற்றோர்' எனப் பெயர் புனைந்து, சங்கத் தமிழ்ப்புலவர் வரிசையில் கஙு - ஆவதாக அழகிய முறையில் வெளியிட்டுள்ளோம்.

தமிழ் மாநிலமக்கள் இதனையும் இதைத் தொடர்ந்து அடுத்தடுத்து வெளியாகும் இஃதொத்த சங்கத் தமிழ்ப் புலவர் வரலாறுகளையும் வாங்கிக் கற்றும் கேட்டும் கற்பித்தும் அறிவுத்திறன் எய்துவார்களென நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | தோற்றுவாய் | 1 |
| ௧. | அடைநெடுங் கல்வியார் | 3 |
| ௨. | இரும்பிடர்த் தலையார் | 5 |
| ௩. | ஊட்டியார் | 8 |
| ௪. | ஊன்பொதி பசுங்குடையார் | 11 |
| ௫. | ஐயூர் முடவனார் | 17 |
| ௬. | கழைதின் யானையார் | 26 |
| ௭. | கோடைபாடிய பெரும்பூதனார் | 31 |
| ௮. | செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன் | 33 |
| ௯. | திப்புத் தோளார் | 34 |
| ௧௦. | நரிவெரூஉத் தலையார் | 36 |
| ௧௧. | நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் | 43 |
| ௧௨. | நெடும்பல்லியத்தனார் | 44 |
| ௧௩. | நெட்டிமையார் | 47 |
| ௧௪. | நெய்தல் தத்தனார் | 52 |
| ௧௫. | நோய் பாடியார் | 53 |
| ௧௬. | பரூஉமோவாய்ப்பதுமன் | 54 |
| ௧௭. | பாரதம்பாடிய பெருந்தேவனார் | 55 |
| ௧௮. | பாலைக்கோதமனார் | 58 |
| ௧௯. | பெருஞ்சித்திரனார் | 70 |
| ௨௦. | பெருந்தலைச் சாத்தனார் | 86 |
| ௨௧. | பெருந்தோட் குறுஞ்சாத்தன் | 97 |
| ௨௨. | பேரெயில் முறுவலார் | 98 |
| ௨௩. | மடல்பாடிய மாதங்கீரனார் | 102 |
| ௨௪. | மலையனார் | 104 |
| ௨௫. | வண்ணப்புறக் கந்தரத்தனார் | 105 |
| ௨௬. | விழிக்கண் பேதைப் பெருங்கண்ணனார் | 108 |

# உறுப்பாலும் சிறப்பாலும்

# – – – பெயர்பெற்றோர்

---

## தோற்றுவாய்

பெற்றோர்கள், தம் மக்களுக்கு, அவர் குழவிப் பருவத்தே பெயரிடுகின்றனர்; அவ்வாறு பெயரிடுங்கால் தம் தாய் தந்தையர் பெயரையே தம் மக்களுக்கு இடுவதும், தாம் வழிபடு கடவுளரின் பெயர்களை வைப்பதும், மக்கள் பிறந்த நாள்மீனால் பெயரிடுவதும் ஆகப் பல முறைகளைப் பின்பற்றக் காண்கின்றோம்; ஆனால், இவ்வாறு பெற்றோர் வைத்த பெயரையே, தம் வாழ்நாள்வரையும் வைத்து வாழ்பவர் உலகில் மிகச் சிலராவர்; பெற்றோர் இட்ட பெயர் மறைய, பல்வேறு காரணங்களால் வந்த புதுப் பெயரைக்கொண்டு வாழ மக்கள் விரும்பலாயினர்; பெற்றோர் இட்ட பெயரைத் தாம் விரும்பாமல், தாம் விரும்பிய பெயரைத் தாமாகவே வைத்துக்கொள்வோரும் உளர்; பெற்றோர் இட்ட பெயர், இவ் வகையால் மாறுவதினும், அவர் நிறம், வடிவம், தொழில், குணம் ஆய இவை கருதி, அவரோடு வாழ்பவர் வைக்க மாறுவதே பெரும்பான்மையவாம். இவ் வகையால், பெற்றோர் இட்ட இயற்பெயர் மறைய, பிற்காலத்தினர் இட்ட காரணப்பெயர்களோடு வாழ்பவரை, இக் காலத்தில்மட்டும் காண்கிறோம் என்றல் பொருந்தாது; அத்தகைய பெயர் பெற்றோர் பண்டைக் காலத்திலும் இருந்தனர்.

பழந் தமிழ்ச்செய்யுள் பாடிய புலவர்களின் பெயர்களுள் பல, இவ்வாறு வந்தனவே; தாம் வாழ்ந்த ஊரால்

பெயர் பெற்றோரும், தாம் மேற்கொண்ட தொழிலால் பெயர் பெற்றோரும், தாம் பாடிய பாவினத்தின் பெயரால் பெயர் பெற்றோரும், தாம் பாடிய பாக்களுள் தாம் எடுத்தாண்ட உவமைகளால் பெயர் பெற்றோரும், அப் பாக்களில் அவர் எடுத்தாண்ட அரிய தொடர், சொல் இவற்றால் பெயர் பெற்றோரும், தம் நிறத்தாலும், தம் வடிவாலும் பெயர் பெற்றோரும் ஆய பலரையும் காண்கிறோம். இவர்களுள், தம் உடல் உறுப்புக்களின் அமைப்புக் கருதியும் தாம் பெற்றுள்ள சிறப்புக் கருதியும் பிறர் வைத்த பெயருடைய புலவர்களை, உறுப்பாலும், சிறப்பாலும் பெயர் பெற்றோர் என வகைப்படுத்தி, அவர்கள் வரலாற்றைக் கூறுவதே இந்நூல்.

இவர்களுள், ஐயூர் முடவனார், திப்புத் தோளார், நரிவெரூஉத் தலையார், நெட்டிமையார், பரூஉமோவாய்ப் பதுமன், பெருந்தலைச் சாத்தனார், பெருந்தோட் குறுஞ்சாத்தன், பேரெயில் முறுவலார் என்ற இவர்கள் எண்மரும் உறுப்பாற் பெயர் பெற்றோராவர்; அடைநெடுங் கல்வியார், இரும்பிடர்த் தலையார், ஊட்டியார், ஊன்பொதி பசுங்குடையார், கழைதின்யானையார், கோடை பாடிய பெரும்பூதனார், செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன், நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார், நெடும்பல் லியத்தனார், நெய்தல் தத்தனார், நோய்பாடியார், பாரதம் பாடிய பெருந்தேவனார், பாலைக்கோதமனார், பெருஞ்சித்திரனார், மடல் பாடிய மாதங்கீரனார், மலையனார், வண்ணப்புறக் கந்தரத்தனார், விழிக்கண்பேதைப் பெருங்கண்ணனார் என்ற இவர்கள் பதினெண்மரும் சிறப்பால் பெயர் பெற்றோராவர். இவ்விருவேறு வகையினர் வரலாறுகளையும் அகரவரிசையிற் கோத்துச் சேர்த்து ஆய்ந்து காட்டியுள்ளோம்.

## க. அடைநெடுங் கல்வியார்

இவர், ஆசிரியர் ஒருவரை யடுத்து அரிதிற் பெறுதற்குரிய கல்வியை எளிதிற்பெற்று, புகழ்பரவ வாழ்ந்தமையால் அடைநெடுங் கல்வியார் என அழைக்கப்பெற்றார் என்ப. இவர் பெயர் அண்டர் நடுங்கல்லினார் எனவும் காணப்படும்; பகைவர் கைப்பற்றிய தம் ஆனிரைகளைப் போரிட்டு மீட்டுக் கொணர்ந்த போரில் புண்பட்டு இறந்த வீரன் ஒருவனுக்குக் கல் நாட்டி ஆயர் சிறப்புச் செய்ய, அவ்வாறு நடப்பட்ட கல்லை அண்டர் நடுங்கல் எனப் பாராட்டிய சிறப்பால் இவர் அண்டர் நடுங்கல்லினார் என அழைக்கப் பெற்றார் என்ப; ஆனால், இப்போது கிடைத்துள்ள அவர் பாக்களில் அத்தகைய தொடர் எதுவும் காணப்பெறவில்லை. அடைநெடுங் கல்வியார் என்றும், அடைநெடுங் கல்லினார் என்றும், அண்டர் நெடுங்கல்லியார் என்றும் இவர் பெயர் மாறுபட எழுதப்பட்டுளது.

அரும் போராற்றி அமரிடை வீழ்ந்த பெரு வீரர்க்குப் பாணர், யாழிசைத்துப் பாடித் தம் கடன் கழித்த துறையாகிய பாண் பாட்டைப் பாடிய புலவர் அடைநெடுங் கல்வியார். பகைவர் எறிந்த வேல்கள் பலவும் தன் மார்பில் தைத்து ஊடுருவப்பெற்று வீழ்ந்துகிடக்கும் வீரன் ஒருவனுக்கு, ஆரக்கால்கள், சூழச் செருகப்பட்ட வண்டியின் குடத்தை உவமை கூறியிருப்பது மிகவும் அழகாக உளது.

"பாங்கற்கு
ஆர்சூழ் குறட்டின் வேல் நிறத்து இயங்க." (புறம்: உஅங)

மறவர் குடிவந்த ஆடவர், களம் புகுந்து போராற்றுவர் என்றால், அக் குடிவந்த மகளிர், தங்கள் வீரர்க்காம் தும்பைப்பூத் தரும் செடியினைப் பேணி வளர்ப்பர் என்று கூறி மறக்குடி மாண்பினைப் புலப்படுத்தியுள்ளார்:

"மென்தோள் மகளிர் நன்று புரப்ப,
இமிழ்ப்புற நீண்ட பாசிலைக்
கமழ்பூந் தும்பை நுதல்அசைத் தோனே." (புறம்: உஅ௩)

"இளமையும், வனப்பும், இல்லொடு வரவும், வளமையும், தறுகணும், வரம்பில் கல்வியும் தேசத் தமைதியும், மாசில் சூழ்ச்சியோடு எண்வகை நிறைந்த நன்மகற் கல்லது மகட்கொடை நேரா" நம் பண்டையோர் மாண்பினை, அடைநெடுங் கல்வியார், இரு பாக்களில் விளக்கிக் கூறியுள்ளார். மகள்வேண்டிவந்த வேந்தர், நால்வகைப் படையும் கொண்டுவந்து நிற்கின்றனர் என்பதை, அறிந்தும், அவர்கள் நிறைபொருள் தருகின்றனர் என்பதைத் தெரிந்தும், அவர்கள் தங்கள் குடிமுதலாம் பண்புகளோடு பொருந்தாராதல் கண்டு தம் மகளைக் கொடுக்க மறுக்கும் மறவர் மாண்பினைப் பாராட்டிப் பாடியுள்ளார்:

"தன்னை மாரே
செல்வம் வேண்டார்; செருப்புகல் வேண்டி
நிரலல் லோர்க்குத் தரலோ இல்." (புறம்: ௩௪௫)

தன் பகைவன்மீது படை கொண்டு செலவாற்றுன் அரசன், அப்பகைவன் படைவீரரைத் தன் ஆண்மையெலாம் காட்டி அழித்து வென்று மீளுதல் வீரமுடைமையாம்; அவ்வாறு அவரை அழிப்பதோடு அமையாது, அப்பகைவன் நாட்டு ஊர்களை எரியூட்டி அழித்தல் ஆண்மையாகாது; அது பண்புடைவீரர்க்குப் பெருமையளிப்பதாகாது என உணர்ந்த புலவர், அவ்வாறு பாழ் செயும் செயலைப் "பண்பில் ஆண்மை" எனப் பெயர்சூட்டிப் பழித்தல் பாராட்டற் குரித்து:

"புகைபடு கூரெரி பரப்பிப் பகைசெய்து
பண்பில் ஆண்மை தருதல் ஒன்றோ." (புறம்: ௧௬௪)

# உ. இரும்பிடர்த்தலையார்

இரும்பிடர்த்தலையார், கருங்கையொள்வாட் பெரும் பெயர் வழுதி என்ற பாண்டிய மன்னனைப் பாடிய புலவர்; இவர், அவனைப் பாடிய பாட்டில், யானையின் பெரிய கழுத்தை, இரும்பிடர்த்தலை என்ற தொடரால் சிறப்பித்தமையால், இரும்பிடர்த்தலையார் என்ற பெயர் பெற்றார். இரும்பிடர்த் தலையார் வரலாறாக அறிவது இத்துணையே. திருமாவளவன் என்ற கரிகாற் பெருவளத்தானின் அம்மானும் சிறப்புடையார் இரும்பிடர்த்தலையார் என்றும், அவன் பகைவர் கையகப்பட்டுச் சிறையிருந்தவழி, பகை அழித்து வெளியேறி வெற்றிபெற அவனுக்குத் துணை புரிந்தவர் இரும்பிடர்த்தலையாரே என்றும் ஒரு வரலாறு உரைத்து,

> ''சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
> பிடர்த்தலைப் பேரானைப் பெற்றுக்—கடைக்கால்
> செயிரறு செங்கோல் செலீஇயினான்; இல்லை
> உயிருடையார் எய்தா வினை'' (பழமொழி : உ௩௧)

என்ற பழமொழிச் செய்யுளைச் சான்று காட்டுவர்.

இந்த வரலாற்றினை உண்மையென ஏற்றுக்கொள்வதற்கு எத்தனையோ தடைகள் உள; காரிகாலன் பகைவர் காவலை அழித்து வெளியேறிய நிகழ்ச்சியைக் கூறும் பட்டினப்பாலை, அவன் தன் வாள்துணை ஒன்றைக் கொண்டே வெளியேறினான் என்று கூறுகிறது; இரும்பிடர்த்தலையார் துணைபற்றி ஏதும் உரைத்திலது; கரிகாலன் வரலாறு உணரத் துணைபுரியும் சங்கநூல் எதுவும், இரும்பிடர்த்தலையார் கரிகாலன் அம்மான் எனக்கூறவில்லை; கரிகாலனுக்கும், இரும்பிடர்த் தலையார்க்கும் உறவுகூறும் பழமொழி மிக மிகப் பிற்பட்ட நூல்; பிடர்த்தலையார் துணைபெற்று வெளியேறினான் கரிகாலன் என உரைக்கும் அவ் வெண்பா, அவர், அவன் மாமன் என உணர்த்தவில்லை; கரிகாலன் அம்மான் எனக் கூறப்படும் இரும்பிடர்த் தலையார், கரிகாலன் பகைவராகிய பாண்டியர் வழி

வந்தவரைப் பாடியுள்ளார்; ஆனல், அக்கால அரசரெல்லாரும் போற்ற வாழ்ந்த தன் மருமான் கரிகாலனைப் பாடினுரல்லர். இரும்பிடர்த்தலையார் வரலாறு அறிய முன்வருவோர் இத் தடைகளை மனதிற்கொண்டு ஆராய்ந்து முடிவு காண்பார்களாக.

பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதியைப் பாராட்டிய புலவர் இரும்பிடர்த்தலையார், அவன் குடி, கொற்றமும் கொடையும் சிறந்த பழங்குடி; ஏம முரசம் இழுமென முழங்க நேமியுய்த்த நேஎ நெஞ்சின் தவிரா ஈகைக் கவுரியர் மருக!—என்று பாண்டியர் குடிச் சிறப்பையும், வழுதி, கற்பிலும் பொற்பிலும் சிறந்தாளைப் பாண்டிமாதேவியாகப் பெற்றவன்— செயிர்தீர் கற்பிற் சேயிழை கணவ!— என அவன் மனைவியின் மாட்சியினையும், அணுகுதற்கரிய ஆற்றலும், மணநாறும் மதமும், பெரிய கையும், கொம்பையே படையாகக்கொண்டு பகைவர் மதிலைப் பாழாக்கும் ஆற்றலும் உடைய யானை— துன்னருந்திறல், கமழ் கடாஅத்து, எயிறு படையாக எயிற்கதவிடா......பெருங்கை யானை— என அவன் படைப் பெருமையினையும், கூற்றுவனுக்கும் இளையாத கொலைத்தொழிலையும், வலிய கைகளையும் பெரிய வாளையும் உடையவன்— மருந்தில் கூற்றத்து அருந்தொழில் சாயாக் கருங்கை யோள்வாள்— என்று அவன் ஆற்றலையும்— எடுத்துக் காட்டி,— நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்— என்று அறிவுரை கூறி, இடையில் ஊர்களே இல்லாதன, இயங்குதற்கு அரியன, உண்ணுநீர் அற்றன, நீண்டவழி யுடையன, ஆறலை கள்வரால் அலைப்புண்டு வீழ்ந்த வழிப்போவார் உடல்களைப் பருந்திருந் துண்ணும் கொடுமையுடையன,

> "ஊரில்ல, உயவரிய,
> நீரில்ல, நீளிடைய
> ......வன் கணுடைவர்
> அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கைத்
> திருந்துசிறை வளைவாய்ப் பருந்திருந் துயவும்
> உன்ன மரத்த துன்னருங் கவலை" (புறம்: ௩)

என்று வழியின் கொடுமையை எடுத்துக் காட்டி, தம் வறுமையின் கொடுமையால், வழியின் கொடுமை பாராது வருவர் இரவலர் என இரவலர் தம் வறுமையினை விளங்கக் காட்டி, அவர்கள் அவ்வாறு வருதல், அவர் தம் உள்ள விருப்பத்தை அவர் உரைக்காமலே உணர்ந்து கொடுக்கும் நின் கொடை நோக்கியே,

"நின்னசை வேட்கையின் இரவலர் வருவர்அது
முன்னம் முகத்தின் உணர்ந்து அவர்
இன்மை தீர்த்தல் வன்மை யானே" (புறம் : ந)

என்று அவன் கொடைச் சிறப்பினையும் உணர்த்தியமுறை, இரும்பிடர்த்தலையார், ஓர் உயர் தமிழ்ப் புலவராவர் என்பதை உறுதி செய்வதாம்.

"பெருங்கை யானை இரும்பிடர்த் தலைஇருந்து
மருந்தில் கூற்றத்து அருந்தொழில் சாவாக்
கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி !
நிலம் பெயரினும் நின்சொல் பெயரல்"

என்ற அடிகளில், பாடிய தம் பெயரும், பாடப்பெற்ற பாண்டியன் பெயரும் அமையப் பாடி, வரலாறு உணரும் விருப்பம் உடையார்க்குப் பெருந்துணை புரிந்துள்ளமை உணர்க.

## ௩. ஊட்டியார்

இயல்பாகவே செந்நிறம் பெற்றிருக்கும் அசோகின் தளிரைச் செவ்வாக்குப் பூசினாற்போலும் செந்தளிர் "ஊட்டி அன்ன ஒண்தளிர்ச் செயலை" என்றும் இயல்பாகவே செந்நிறம் பெற்றிருக்கும் முருகவேள் கை அம்பினைச் செந்நிறம் ஏற்றினாற்போலும் அம்பு "ஊட்டி யன்ன ஊன்புரள் அம்பு," என்றும் கூறிச் செய்யாத நிறத்தைச் செய்ததுபோலப் பாடிய நயம் கருதி, அக்கால அறிஞர்கள், இவர்க்கு ஊட்டியார் எனப் பெயரிட்டு அழைத்தனர்; மை பூசிய கண்ணை, மையுண் கண் என்றும், உண்கண் என்றும் கூறும் வழக்காறு உண்மையால், உண்ணுதல் என்ற சொல் நிறம் பெறுதல் என்றும், ஊட்டுதல் என்ற சொல் நிறம் ஏற்றுதல் என்றும் பொருள்படுமாறு காண்க.

இரவில், உண்டு உறங்கச் செல்வதற்கு முன்னர், ஒருவர் கதைகூற,, ஒருவர் அக் கதையினைக் கேட்பது சிற்றூர்களில் இன்றும் காணப்படும் வழக்கம். அவ்வாறு கதை கூறுவோர் தம் கதையினைக் கூறிக்கொண்டே வர கதை கேட்பவர், இடையிடையே 'உம்' கொடுத்துக் கொண்டே இருப்பர்; கதை கேட்பவரிடமிருந்து, அவ் 'உம்' வாராதுபோனால், கேட்பவர் உறங்கிவிட்டார் என உணர்ந்து, கதை கூறுவோரும், கதை கூறுவதொழிந்து உறங்கச் செல்வர்.

தாய் உறங்கினாலன்றித் தலைவனைக் குறியிடத்தே சென்று காணுதல் இயலாது என உணர்ந்த தோழி, தாய் உறங்கிவிட்டாள் என்பதை உறுதியாக உணர்ந்துகொள்வதற்காக, அவள் படுத்திருக்கும் இடத்தருகே தானும் படுத்து, அவளுக்குக் கதை கூறத் தொடங்குவாள்போல் "அன்னாய்! நம் தோட்டத்தில் ஓடும் அருவி, ஆங்குள்ள பள்ளங்களில் வளர்ந்திருக்கும் சிறிய கூதளஞ்செடிகளின் தலைமீது வீழ்ந்து ஓடுவதால் உண்டாகும் ஓசை நினக்

குக் கேட்கிறதா?" என்றும், "அன்னாய்! நம் தோட்டத்தில் உள்ள அசோக மரத்தில், நாங்கள் ஊசலாடக் கட்டித் தொங்கவிட்ட கயிற்றினைப் பாம்பு என்று கருதி, அது கட்டியுள்ள அம் மரம் அடியோடு முறிந்துபோமாறு வீழ்ந்த இடியோசை நினக்குக் கேட்கிறதா?" என்றும் கூறிக்கொண்டே வந்து, கேட்டதற் கெல்லாம் 'உம்' கொடுத்து விடை யளித்துவந்த தாய், இறுதியில் கேட்டதற்கு விடை யளியாது போனமையான், அவள் நன்கு உறங்கிவிட்டாள் என உணர்ந்தாள் என்று பாடிச், சிற்றூர் மக்களின் இயல்பினையும், தோழியின் அறிவுடைமையினையும் ஒருங்கே உணர்த்தினர் ஊட்டியார் :

"அன்னாய்! வாழி! வேண்டு; அன்னை! நம் படப்பைத்
தண் அயத்து அமன்ற கூதளம் குழைய
இன்னிசை அருவிப் பாடும் என்னதூஉம்
கேட்டியோ? வாழி! வேண்டு; அன்னை! நம் படப்பை
ஊட்டி அன்ன ஒண் தளிர்ச் செயலை
ஓங்குசினைத் தொடுத்த ஊசல், பாம்பெனா
முழுமுதல் துமிய உருமெறிந் தன்றே
பின்னும் கேட்டியோ?' எனவும், அஃது அறியாள்;
அன்னையும் கனைதுயில் மடிந்தனள்." (அகம் : கூஅ)

தலைவன் விரைவில் வரைந்து கொள்ளாமையால் வருந்துகிறாள் தலைவி; தன் மகள் வருத்தத்திற்காம் காரணம் அறியமாட்டாத தாய், அவள் நோய் நீங்க முருகனை அழைத்து வெறியாட்டெடுக்க எண்ணுகிறாள்; இதனால், தன் துயர் மேலும் மிகுமே என அஞ்சிநிற்கும் தலைவியின் வீட்டின் புறத்தே, அவளைக் கண்டு மகிழ்ந்து செல்ல வந்து நிற்கிறான் தலைமகன்; தன் நிலையினை அவனுக்கு உணர்த்த விரும்பும் தலைமகள், "தோழி! அன்னை அழைத்துவந்த வேலன், வெறியாட்டின்போது, 'முருகன் தந்தது இந்நோய்; இதைப் போக்குமாறும் யான் அறிவேன்,' என்று கூறுவனாயின், 'வெறியாடும் வேல! உன் தலைவனாகிய முருகன், யானைகளின் உடலினுள் உருவிச் சென்று, செந்நிறம் பெற்ற அம்பைக் கையிலேந்தி, காட்டு

விலங்குகளின் பின் சென்று வேட்டை யாடவும் தெரி யுமோ?' என்று கேட்பதால் கேடொன்றும் இராதே?" என்று தோழியிடம் கூறுவாள்போல், அவன் கேட்கக் கூறினாள் என்று பாடி நகைச்சுவை ஊட்டிச் செல்லும் ஊட்டியாரின் உரைத்திறம் வியக்கத் தக்கதாமன்றோ?

"அன்னை தந்த முதுவாய் வேலன்,
எம்மிறை அணங்கலின் வந்தன்று இந்நோய்
தணி மருந்து அறிவல் ; என்னு மாயின்,
வினவின் எவனோ? மற்றே! கனல் சின
மையல் வேழம் மெய்யுளம் போக
ஊட்டி அன்ன ஊன்புரள் அம்பொடு
காட்டுமான் அடிவழி ஒற்றி
வேட்டம் செல்லுமோ நும்மிறை? எனவே."

(அகம் : ௩அஅ)

## ௪. ஊன்பொதி பசுங்குடையார்

பனை ஓலையால், உண்ணும் கலம்போல் உட்குடை உடையதாகச் செய்யப்படுவது பனங்குடை; இத்தகைய பனங்குடைகளில் உணவு உண்பதும், பூப்பறித்து வைப்பதும், வழிப்போவார் சோறு கொண்டு போவதும் வழக்கம்.

"பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை
இரும்பனங் குடையின் மிசையும்" (புறம் : 177)

என்றும்,

"அவல் வகுத்த பசுங்குடையால்
புதல் முல்லைப் பூப்பறிக்குந்து" (புறம் : 352)

என்றும்,

"ஆறுசெல் மாக்கள் சோறுபொதி வெண்குடை."
(அகம் : 121)

என்றும் வருவது காண்க. இத்தகைய பனங்குடையில், ஊன்கொண்டு செல்வதை வியந்து "ஊன்பொதி பசுங் குடை" என்று கூறிய சிறப்பால் இவர், ஊன்பொதி பசுங் குடையார் என்ற பெயர் பெற்றார்.

ஊன்பொதி பசுங்குடையார், இளஞ்சேட்சென்னி என்ற சோழ அரசன் ஒருவனைப் பாராட்டியுள்ளார்; இளஞ்சேட்சென்னி, நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்றும், சேரமான் பாமுளூர் எறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னி என்றும், செருப்பாழி எறிந்த இளஞ் சேட்சென்னி என்றும் அழைக்கப்பெறுவன். இடையன் சேந்தங்கொற்றனார் என்ற புலவரால், அகநானூற்றில், இளம்பெருஞ்சென்னி என அழைக்கப்பெறுவோனும் இவனே. இளம்பெருஞ்சென்னி எனவும், இளஞ்சேட் சென்னி எனவும் அழைக்கப்பெறும் இவனே, கரிகாற் பெருவளத்தான் தந்தையாகிய உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியாவன்.

இளஞ்சேட்சென்னி, நெய்தலங்கானல் என்ற கடற்கரை நகரை உரிமையாகப் பெற்றிருந்தான்; சேரமானுக்குரிய பாமுளூரை வென்று கைக்கொண்டிருந்தான்; இவன், தன் காலத்தே, தென்னாட்டுக் கடற்கரைப் பகுதிகளைத் தம் வாழ்விடமாகக்கொண்டு, தமிழ்ப் பேரரசுகளுக்கு இடையூறு விளைத்து வந்த பரதவர் என்ற நாடோடி வீரர் குழுவினை அழித்து, அமைதியை நிலைநாட்டியிருந்தான்; தென்திசைக் கண்ணராகிய பரதவரைப் பாழ்செய்த இவன், வடக்கிலிருந்து தன் அரசிற்குக் கேடுவிளைத்திருந்த வடுகர் என்பவரையும் வென்று அழித்தான்; சேர நாட்டை அடுத்துப் பாழி என்றொரு பேரூர் இருந்தது; அது அரிய அரண் அமைந்து இருந்தமையால், பெரும்பொருளைக் கொண்டிருந்தது; பாழி, நன்னன் என்பவனுக்கும் ஒரு காலத்தில் உரியதாய் இருந்தது; இப்பாழி நகரில், வேளிர், தாம் அரிதின் முயன்று தேடிய பொருளை வைத்துக் காத்திருந்தனர்; இவ்வாறு சிறப்புற்ற பாழியைத் தமக்குரியதாக ஆக்கிக் கொள்வதில், சேரரும், சோழரும், சில குறுநில மன்னர்களும், கருத்துடையராய்ப் போர் பல ஆற்றியுள்ளனர்; வடக்கேயிருந்து வந்து தமிழகத்திற்குக் கேடு விளைக்கும் வடுகரும் இதைக் கைப்பற்றி யிருந்தனர்; வடுகரை வென்ற இளஞ்சேட்சென்னி, அவரை முற்றும் அழித்தல்வேண்டும் என்ற எண்ணத்தாலும், தம் சோழர் குடிவந்தோரால், நீண்டகாலமாகவே கைப்பற்றப் பெறுமல் இருந்த பாழிநகரைக் கைப்பற்றி, அக்குறையினைப் போக்குதல் குடிக்கடனும் என்று கருதிய எண்ணத்தாலும், பாழிநகர்மீது படையெடுத்துச் சென்று, ஆங்கு வாழ்ந்திருந்த வடுகர்களையும் அழித்து, அப்பாழி நகரையும் கைக்கொண்டான். இளஞ்சேட்சென்னியின் வெற்றிச் சிறப்புக்களைப் பொதுவகையால் போற்றிக் கூறிய புலவர், ஊன்பொதிபசுங்குடையார், அவன் வடுகரையும், பரதவரையும் வென்ற நிகழ்ச்சிகளை மட்டும் எடுத்துக்கூறிப் பாராட்டியுள்ளார்:

"தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாளோட்டிய." (புறம்: ௩௭௮)

இளஞ்சேட்சென்னியின் பேராற்றலை விளக்க வந்த ஆசிரியர், அவன், பகைவருடைய, கைப்பற்றுதற்கரிய காவலமைந்த கோட்டை அப்பகைவரிடம் இருக்கும் போதே, இதோ, இந்தக் கோட்டையினை நீ பெற்றுக் கொள்வாயாக எனத் தன்னைப் பாடிவரும் பாணனுக்கு அளிக்கும் அத்துணைத் துணிவும், அக்கோட்டையை அவ்வாறே வென்று அளிக்கும் ஆற்றலும் வாய்ந்தவனவன் என்று கூறிப் புகழ்வர்.

> "ஒன்னார், ஆரெயில் அவர்கட் டாகவும், : நுமது' என,
> பாண்கடன் இறுக்கும் வள்ளியோய்." (புறம் : ௨0௩)

உழவர், நெல்லடித்துத் தொகுத்த நெற்களத்திற்குச் சென்று பாடி, நெல்பெற்று மகிழும் பொருநர், அரசர்கள், போர்செய்து வென்ற போர்க்களத்திற்கும் சென்று, அவர் புகழ்பாடி, போரில் அவர் கைப்பற்றிய யானை முதலாயின வற்றைப் பெற்று மீள்வதும் உண்டு. அவ்வாறு போர்க்களம் பாடும் அவர்கள், அரசனை உழவனாக உருவகம் செய்து, அவன ஆங்குச் செய்த செயல்களை உழவர் செயல்களோடு இயைபுடையதாக்கிப் பாடுவதும் செய்வர். இவ்வாறு களம்பாடுவதை ஏர்க்கள உருவகம் என்று கூறுவர் இலக்கண நூலாசிரியர்கள்; அத்தகைய ஏர்க் கள உருவகம் ஒன்றால், இளஞ்சேட்சென்னியின் போர்க்களச் சிறப்பினைப் போற்றிப் புகழ்ந்துள்ளார் நம்புலவர், ஊன் பொதி பசுங்குடையாரும்.

இவ்வாறு இளஞ்சேட்சென்னியின் வெற்றிச் சிறப்புக் களை விளங்கப் பாடிய புலவர், அவன் கொடைப்புகழைப் போற்றிக் கூறத் தொடங்கி, அவனைப் பாடிவரும் இரவலர் களின் வறுமை நிலையினையும், அவ்வாறு பாடி வருவார்க்கு அவன் அணிகள் பல அளித்தலையும், அவ்வணிகளை, அணிய அறியாது அவர்கள் திகைப்பதையும், அவர்களின் அறி யாமை கண்டு அவன் நகைப்பதையும், நகைச்சுவை தோன்றப் பாடியுள்ளார்.

இளஞ்சேட்சென்னி தன்பால் வந்து இரந்து நின்ற இரவன்மாக்களுக்குத் தான் போரிற் கைப்பற்றிய அணிகள்

பலவற்றையும் அளித்தான். அவ்வணிகளின் வகையினையும், அவற்றை எங்கெங்கே அணிந்து கொள்வது என்பதையும் அறியமாட்டாத அவர்கள், விரலில் அணிய வேண்டுவனவற்றைச் செவியிலும், செவியில் அணிய வேண்டுவனவற்றை விரலிலும், அரைக்குரியவற்றைக் கழுத்திலும், கழுத்தணிகளை இடையிலும் அணிந்து, காண்பார் கைகொட்டி நகைக்குமாறு விளங்கினர்; அவர் செய்கை, பண்டு இராமனுடன் காடு சென்ற சீதையை இராவணன் தூக்கிச் சென்றபோது, அவள் கழற்றி எறிந்த அவள் அணிகளைக்கொண்ட குரங்கினம், அவற்றை எவ்வாறு அணிவது என அறியமாட்டாமல், அணிந்து நின்ற காட்சியினை ஒத்துளது என்று கூறியுள்ள புலவரின் செய்யுட் பொருளறிந்து மகிழ்வோமாக!

"மேம்படு சிறப்பின் அருங்கல வெறுக்கை
தாங்காது பொழிதந் தோனே; அதுகண்டு
இலம்பா டுழந்தஎன் இரும்பே ரொக்கல்,
விரற்செறி மரபின செவித்தொடக் குநரும்,
செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்,
அரைக்கமை மரபின மிடற்றியாக் குநரும்,
மிடற்றமை மரபின அரைக்கியாக் குநரும்,
கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தாஅங்கு
அறாஅ வருநகை இனிது பெற்றிகும்." (புறம்: ௩௭௮)

இவ்வாறு பாணர் உவப்பப் பலகலன் அளிக்கும் பண்புடையோனாகிய இளஞ்சேட்சென்னி, அப் பண்பில் என்றும் குன்ருது வாழ்தலை விரும்பிய புலவர் ஊன்பொதி பசுங்குடையார், இளஞ்சேட்சென்னியை அடைந்து, "அரசே! வேண்டுமளவு முன்னரே பெய்துவிட்டோம், மேலும் பெய்தல் வேண்டுவதில்லை என்று மழை பெய்யாது பொய்ப்பினும், முன்னெல்லாம் நிறைய விளைந்தோம், இனி விளைதல் வேண்டுவதின்று என நிலம் விளைவதை

மறுப்பினும், அம்மழை நீரையும், அந்நிலத்து விளைபொருளையும் எதிர்நோக்கி வாழும் உயிர்கள் வாழ வழியின்றி மடிந்து மறைந்துபோய்விடும்; அதுபோல், எம்போலும் இரவலர், நின்பால் வந்து இன்னும் சிறிது கொடுப்பாயாக என வேண்டி நிற்பாராயின், அவர்க்கு 'முன்னரே நிறையக் கொடுத்துவிட்டேன்' என்று கூறி மறுத்து விட்டால், அவர் வாழ்வு வளமற்றுப்போய்விடும்; ஆதலின் இரவலரைப் பேணிப்புரப்பதை நீ வாழ்வின் கடன் எனக் கொள்வாயாக'' என்று கூறி வாழ்த்தினர். இரந்து வாழ்வார் தம் வாழ்வின் நிலையற்ற தன்மையினைப் புலவர் எத்துணை நுணுக்கமாக அறிந்து கூறியுள்ளார்! என்னே அவர் அறிவின் திறம்!

''கழிந்தது பொழிந்து என வான்கண் மாறினும்,
தொல்லது விளைந்தென நிலம்வளம் கரப்பினும்,
எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை;
இன்னும் தம்மென எம்மனோர் இரப்பின்,
முன்னும் கொண்டிர் என நும்மனோர் மறுத்தல்
இன்றது அம்ம! இயல்தேர் அண்ணல்!
.............................................
பூண்கடன் எந்தை! நீ இரவலர் புரவே.'' (புறம்: உ0௩)

இளஞ்சேட்சென்னிபால் கொண்ட பேரன்பினால், அவன் வெற்றிச் சிறப்பையும், கொடையின் பெருமையையும் பாராட்டுவதோடு நில்லாது, அவன் புகழ் என்றும் நின்று நிலைபெறுதற்காம் அறவுரைகள் பலவற்றையும் எடுத்துக்கூறிய புலவர், அவன்பால் தாம் கண்ட அருங்குணங்களை எடுத்துக்காட்டிப் போற்றிப் புகழ்வாராயினர்.

''இளம்சேட்சென்னி, தன்னை வழிபட்டுப் பணிந்து வாழ்வாரைத் தழுவி அன்புகாட்டும் அருட்குணம் உடையான்; பிறர் குற்றம் கூறுவதே தொழிலாகக்கொண்டார் கூறுவனவற்றை ஏற்றுக்கொள்ளான்; ஒருவன்பால் குற்றம் உண்டு என, அறிவானும், நூலானும் துணிந்தானாயின்,

அக்குற்றம் செய்தார்க்கு அக்குற்றத்திற்கேற்பத் தண்டம் அளிக்கத் தவருன்; அக்குற்றம் செய்தார் தன் தாளிற் பணிந்து பிழைபொறுக்க வேண்டின், அப்பிழை பொறுத்து அவர் தண்டனையை நீக்குவதோடு அருளும் செய்வன்; அமிழ்தினும் சிறந்த உணவை வருவார் அனை வர்க்கும் வரையாது வழங்குவன்; மகளிர் அன்பிற்கன்றிப் பகைவர் படைக்குத் தளராது அவன் மார்பு; எற்றென்று இரங்குவ என்றும் செய்யான்; அவன்பால் காணலாம் இப்பண்புகளால் அவன் புகழ், சேயபல நாடுகளிலும் சென்று பரவும்.'' இவை, இளஞ்சேட்சென்னிக்கு ஊன் பொதி பசுங்குடையார் அளித்த பாராட்டுரைகள். இவை அவனைப் பாராட்டக் கூறப்பட்டனவேனும், உலக மக்களை நோக்கிக், "கூறிய இக்குணங்களைக்கொண்டு உயர்வீராக" எனக் கூறுவதுபோல் அமைந்துள்ள அருமையினை அறிந்து மகிழ்வோமாக!

"வழிபடுவோரை வல்லறி தீயே;
பிறர்பழி கூறுவோர் மொழிதேறலையே;
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி;
வந்து,அடி பொருந்தி, முந்தை நிற்பின்,
தண்டமும் தணிதி,நீ பண்டையிற் பெரிதே;
அமிழ்துஅட்டு ஆனுக் கமழ்குய் அடிசில்
வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை
மகளிர் மலைத்தல் அல்லது, மள்ளர்
மலைத்தல் போகிய சிலைத்தார் மார்ப!
செய்துஇரங் காவினைச் சேண்விளங் கும்புகழ்
நெய்தலங் கானல் நெடியோய்!
எய்தவந் தனம்யாம்; ஏத்துகம் பலவே."

(புறம்: ௧0)

## ரு. ஐயூர் முடவனார்

ஐயூர் முடவனார், கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியைப் பாடியிருத்தலின், பாண்டிநாட்டினராவர் என்று கொண்டு, இவர் பிறந்த ஐயூர் பாண்டிநாட்டில் உள்ள சிற்றையூர், பேரையூர் என்ற ஊர்களுள் யாதேனும் ஒன்றாம் என்று கூறுவர் சிலர்; முடவனார் பாராட்டைப் பெற்றோருள், தாமன் தோன்றிக்கோனும் ஒருவன்; திண்டுக்கல்லுக்கு மேற்கே, பதினைந்து கல் தொலைவில் தான்றிக்குடி என்ற பெயருடைய ஊர் ஒன்று மலைகளுக்கிடையே உளது; ஆதலின் தாமன் தோன்றிக்கோனுக்குரிய மலை, ஆங்குள்ள தோன்றிமலையே என்பர் சிலர். கருவூர்க்கண்மையில் தான்தோன்றி மலை என்றொரு குன்று உளது; தான்தோன்றி மலை என்ற பெயர், தாமன் தோன்றி மலை என்பதன் திரிபே ஆதலின், தாமன்தோன்றிக் கோனுக்குரிய தோன்றிமலை இதுவே என்பர் மற்றும் சிலர்; பிற்கூறிய கருத்தினை ஏற்றுக்கொண்டு முடவனார் பிறந்த ஐயூர், கருவூரை யடுத்துள்ளதும், திருச்சிராப்பள்ளிக்குத் தெற்கே குளத்தூரைச் சார்ந்துள்ளதுமாய ஐயூரே என்று கொள்வாரும் உளர்.

ஐயூர் முடவனார் கால் முடம் பட்டவராவர்; யாண்டேனும் செல்லவேண்டுமாயின் எருதுகள் ஈர்க்க வண்டியூர்ந்தே செல்வர். தோன்றிக்கோனைப் பாடிய செய்யுளில் "என்னுடைய பெரியவண்டி சேற்றில் அழுந்தியவிடத்தும் தளராது இழுத்துச்செல்லும் வலிய எருதுகளையே நின்பால் வேண்டுகின்றேன்,"

"கடுந்தேர் அள்ளற்கு அசாவா நோன்சுவற்
பகட்டே யத்தை யான்வேண்டி வந்தது" (புறம் : ௩௯௯)

என்று அவரே கூறுவதால் இது தெளிவாதல் காண்க.

ஐயூர் முடவனார் பெயர், சில ஏடுகளில் ஐயூர் மூவனார் என்றும், உறையூர் முடவனார் என்றும் உளது. இவர் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, குள

முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், தாமான் தோன்றிக் கோன், செல்லூர்க்கோமான் ஆதன் எழினி ஆகியோரைப் பாராட்டியுள்ளார்.

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி ஆற்றல் மிக்க அரசனுவன்; வடபுல மன்னரை வெற்றி கொண்ட வீறுடையவன்; இவனைப் பாடிய புலவர் இரு வரும், இவன் போர்வன்மையினையே எடுத்துக் கூறிப் போற்றியுள்ளனர்; புலவர் ஐயூர் முடவனர், "தமிழகம், அரசர்க் கெல்லாம் பொதுவாகும்; அதை உரிமை கொண்டாடல் அரசர் அனைவருக்கும் பொருந்தும் என்ற சொல் கேட்கவும் பொறுதவன்; அவன் தமிழகம் அனைத் தினையும் தன் ஒரு குடைக்கீழ் வைத்துத், தான் ஒருவ னுகவே ஆளுதல்வேண்டும் என்ற பேராசையும், அப் பேராசையினைக் குறைவற நிறைவேற்றுதற்காம் பேராற்ற லும் உடையவன்; அவன் எண்ணம் அறிந்து, 'திறை யிடுக' என அவன் கேட்பதற்குமுன்னரே கொண்டுபோய்க் கொடுக்கும் அரசர்களே உயிர்பெற்றுப் பிழைப்பர்; கொடாதார் நிலை, அந்தோ! மிக மிக இரங்கத் தக்கதாம். அவன் ஆணைக்கு அடங்காது ஒருநாள் வாழ்தலும் இய லாது; காலமெல்லாம் அரிதின் முயன்று தேடிப் பெற்ற பேரரசை, அவனுக்கு அடங்காமையால், ஒரு நாள் அள வும் ஆண்டு மகிழாமல், இழந்து அழிவர்; அத்துணை ஆற்றல் உடையான்" எனப் பாராட்டுகின்றார்.

வழுதி சினந்தால் வாழார் எவரும்; அவன் வெகு ளியை வென்று அடக்கல் எவர்க்கும் இயலாது என்பதை விளக்க வந்த ஆசிரியர், "கடல்நீர் பொங்கி எழுமாயின், அதைத் தடுத்து நிறுத்தவல்ல அணையினை எங்கும் காணல் இயலாது; அளவின்றிப் பெருகி எழுந்து கொழுந்து விட்டு எரியும் தீயால் அழிவுறுமல் உயிர்களைக் காத்துப் பேணவல்ல இடம் உலகத்தில் எங்கும் இல்லை; பெரு மலை களையும் பெயர்க்கும் ஆற்றல்கொண்டு சுழன்றடிக்கும் காற்றினைத் தடுத்து நிறுத்தவல்ல ஆற்றல், உலகில் எதற் கும் இராது; அதைப்போன்றே வழுதி சினந்தால், அச்

சினத்தைத் தாங்கும் ஆற்றல் எவர்க்கும் உண்டாகாது." என்று கூறினர்.

வழுதி சினம் பெற்ற வேந்தர், உள்ள நாளெல்லாம் உழன்று தேடிய தம் அரசவாழ்வை, ஒருநாள் அளவும் வைத்து வாழப்பெறுமல், இழந்து அழிவதற்கு, கறையான்கள் பலநாள் உழைத்து எடுத்த தம் புற்றினின்றும் வெளிப்போந்து, ஞாயிற்றின் வெம்மையால் தாக்குண்டு, ஒருநாள் வாழவும் கொடுத்துவைக்காது, அப் புற்றையும் இழந்து இறந்துபோதலை ஒப்பிட்டுக் கூறிய உவமைநயம் உள்ளுதொறும் உவகைதரும் உயர்வுடைத்தா மன்றே!

" நீர் மிகின், சிறையும் இல்லை ; தீமிகின்,
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை ;
வளிமிகின், வலியும் இல்லை ; ஒளிமிக்கு
அவற்றோ ரன்ன சினப்போர் வழுதி
தண்டமிழ்பொது' எனப் பொருஅன், போரெதிர்ந்து
கொண்டி வேண்டுவ னாயின், கொள்கெனக்
கொடுத்த மன்னர், நடுக்கற் றனரே ;
அளியரோ ! அளியர் ! அவன் அளி இழந்தோரே;
நுண்பல சிதலை, அரிதுமுயன் றெடுத்த
செம்புற்று ஈயல் போல
ஒருபகல் வாழ்க்கைக்கு உலமரு வோரே." (புறம் : ௫௧)

பாண்டியனைப் பாடி மகிழ்ந்த முடவனார், சோழ நாட்டின் வளத்தையும், அந் நாட்டை ஆளும் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் பெருமையினையும் அறிந்தார் ; அந் நாட்டைக் கண்டு களிக்கவேண்டும் ; அவ் வரசனைப் பாடிப் பாராட்ட வேண்டும் என விரும்பினர் ; உடனே, தம் வண்டியிலமர்ந்து சோழநாடு நோக்கி வரலாயினர்; வண்டியில் பூட்டிய காளைகள், நெடுந்தொலைவு வந்தமையால், நடை மெலிந்து மேலும் நடக்கமாட்டா வாயின ; என் செய்வார் பாவம்! இடைவழியிலேயே இருந்துவிட்டார் ; சோழநாடு சென்று, இனிய மாங்கனியாலாய புளிக்குழம்பும், வராலும், சுறுவும் போன்ற மீன் இறைச்சியும், வள்ளைக் கீரையும், பாகற்கறியும் உண்டு மகிழ எண்ணிவந்த அவர்,

உண்ணுதற்குக் கிடைக்கும் ஒரு பிடி சோற்றினையும் உரிய காலத்தே பெறமாட்டாது வருந்தினர்; "ஈண்டிருந்து மேலும் செல்வதாயின் வேறு புதிய காளைகள் வேண்டுமே! அவற்றை அளிப்பார் எவரோ?" என்று எண்ணி ஏங்கி இருந்தார். இந் நிலையில் அவரைக் கண்ட சிலர், "ஐய! அண்மையில் தாமான் தோன்றிக் கோன் ஒருவன் உளன்; அவன் அறவோர்களிற் சிறந்த அறவோன்; வீரருட் சிறந்த வீரன்; உழவருட் சிறந்த உழவன்;

"அறவர் அறவன்; மறவர் மறவன்;
மள்ளர் மள்ளன்; தொல்லோர் மருகன்" (புறம்: ௩௯௯)

அத்தகையான், தங்கள் புகழ்கேட்டுத் தங்களைக் காணும் ஆர்வமும் உடையன்; அவன்பால் செல்லின், தீரும் நும் துயர்," என்று கூறினர். அவர் கூறியன கேட்ட முடவனார் அவன்பால் சென்றார்; சோழநாடு செல்லும் தம் விருப்பத்தினை யுரைத்து, அதற்குத் துணைபுரியுமாறு, சேற்றுநிலம் புகினும் தளராது செல்லவல்ல காளைகள் அளிக்குமாறு வேண்டினார். அவர் வேண்டுவன கேட்ட தோன்றிக்கோன், அவர்வேண்டிய காளைகளோடு, ஆனிரை பலவும் அளித்து, அன்பு பாராட்டி அனுப்பினான்:

"கடுந்தேர் அள்ளற்கு அசாவா நோன்சுவல்
பகடே யத்தை, யான் வேண்டி வந்தது; என
ஒன்று யான் பெட்டா அளவை, அன்றே
ஆன்று விட்டன னத்தை, விசும்பின்
மீன்பூத் தன்ன உருவப் பன்னிரை
ஊர்தியொடு நல்கி யோனே." (புறம்: ௩௯௯)

தோன்றிக் கோன் தந்த பகடு பூட்டிய வண்டியேறி உறையூர் வந்துசேர்ந்தார்; ஆனால், அந்தோ! அவர் எவனைக் காணவேண்டும் எவனைப் பாடிப் பாராட்ட வேண்டும் என்று எண்ணி வந்தாரோ, அவன் இறந்து விட்டான்; அவன் பூதவுடல் மறைந்து விட்டது; அதைத் தாழியிலிட்டுப் புதைத்துவிட்டனர் அவன் சுற்றத்தார் என

அறிந்தார்; என்றாலும், அவன் பூத உடலைக் காணமாட்டாப் புலவர் தமிழகமெங்கும் சென்று, ஆண்டுள்ளாரெல்லாம் தம் ஆற்றல் உணருமாறு வெற்றிகொண்ட அவன் தானைப் பெருமையும், புலவர் போற்ற வாழ்ந்த அவன் ஆட்சிப் பெருமையும், உலகெலாம் பரவி விளங்கும் ஞாயிற்றின் ஒளியேபோல், இவ்வுலகைத் தாண்டிச் சென்றும் தோன்றி விளங்குவதைக் கண்டார்; அளக்கலாகாப் பெருமையுடையது அவன் புகழுடல்; அதை அழித்தலோ, அல்லது தாழியிலிட்டுப் புதைத்தலோ இயலாது; உலகம் உள்ள வரை அது அழியாது; உலகம் அழிந்துமுடியவிடத்திலேயே அது அழியும் என்று எண்ணினார்; அத்தகையான் பிரிவு, அவரைப் பெரிதும் துன்புறுத்திற்று; தம் துன்பத்தின் கொடுமை தோன்றுமாறு, இறந்தார் உடலை இட்டுப் புதைக்கும் தாழிகள் புனைந்து தரும் ஊர்க்குயவனை விளித்து, "கலம் செய்யும் வேட்கோவே! இதுகாறும் இறந்தார் தமக்கெல்லாம் தாழி தந்து நின் கடமையினைத் தவறாது ஆற்றியுள்ளனை; ஆனால், அந்தோ! கிள்ளிவளவற்கு வேண்டும் நல்ல தாழியினை வனைந்து தருதல் நின்னால் ஒண்ணாது; அவன் தாழி, ஏனையோர் தாழிபோன்றதன்றே! அவனுக்கு ஏற்ற தாழி புனைதல் வேண்டுமாயின், உலகின் பெருமலைகளையே மண்ணாகவும், உலகையே உருளும் சக்கரமாகவும்கொண்டு செய்யவேண்டுமே; அது எங்கே நின்னால் இயலும்? அதைச் செய்யமாட்டா நின் நிலைகண்டு மிகவும் இரங்குகின்றேன்," என்று அழுவாராயினர். போற்றிப் பேணும் புரவலர் பொன்றினர் என்றால், அது கேட்கப் புலவர் உள்ளம் பொறுக்குமோ!

"கலம்செய் கோவே! கலம்செய் கோவே!

.......................................

அளியை நீயே; யாங்கா குவைகொல்!
நிலவரை சூட்டிய நீள்நெடுந் தானைப்
புலவர் புகழ்ந்த பொய்யா நல்லிசை
விரிகதிர் ஞாயிறு விசும்பு இவர்ந் தன்ன

சேண்விளங்கு சிறப்பின் செ பியர் மருகன்,
கொடி நுடங்கு யானை, நெடுமா வளவன்
தேவர் உலகம் எய்தினனாதலின்,
அன்றோற் கவிக்கும் கண்ணகன் தாழி
வனைதல் வேட்டனை யாயின், எனையதூஉம்,
இருநிலம் திகிரியாப், பெருமலை
மண்ணா வனைதல் ஒல்லுமோ நினக்கே.''

(புறம்: உஉஅ)

பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியையும், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனையும், தாமான் தோன்றிக்கோனையும் போற்றிப் புகழ்ந்த புலவர் ஐயூர் முடவனார், தாம் பாடிய அகநானூற்றுச் செய்யுளொன்றில், கோசர் வழிவந்த இளஞ்சிறார்கள், பலர் ஒன்று கூடிச் சென்று, கடலாடி மகிழும் மகளிர் கொய்து வந்துகொடுத்த புலிநகக் கொன்றைப்பூவினையும், கழனிகளில் உழவர் பறித்துத்தந்த குவளைப்பூவினையும், காவற்காடு சூழ்ந்த முல்லை நிலத்தில் மலர்ந்த முல்லைமலர்களோடு கலந்து, தம் தலைக்கு வேண்டும் மாலையாகக் கட்டி மகிழ்ந்து விளையாடும் வளம்நிறைந்த செல்லூரையும், அச்செல்லூர்த் தலைவனாகிய ஆதன் எழினியையும், எதிர்நின்று போரிடுவார்மீது எறிந்தவிடத்துச் சுரை சிதையாது சென்று தாக்கவல்ல அவன் வேற்படையினையும் யானைகள் மார்பிற் புண் பெற்று வருந்தி வாடி ஓடி மறையுமாறு, அவற்றின் மீது வேலோச்சும் அவன் போர்வன்மையினையும் எடுத்துக் கூறிச் சிறப்பித்துள்ளார்.

''கடலாடு மகளிர் கொய்த ஞாழலும்,
கழனி உழவர் குற்ற குவளையும்,
கடிமிளைப் புறவில் பூத்த முல்லையொடு
பல்இளங் கோசர் கண்ணி அயரும்
மல்லல் யாணர்ச் செல்விக் கோமான்
எறிவிடத்து உலையாச் செறிசுரை வெள்வேல்
ஆதன் எழினி அருநிறத்து அழுத்திய
பெருங்களிற்று எவ்வம்.''

(அகம்: உகசு)

புலவர் ஐயூர் முடவனார், தாம் பாடிய அகத்துறைப் பாடல்கள் பலவற்றுள், ஒரு பாட்டில், கரிய விரலும், சிவந்த முகமும் கொண்ட குரங்குக்கூட்டம் ஒன்றையும், அக் கூட்டத்தைத் தலைமை தாங்கி அழைத்துச் செல்லும் ஒரு பெண் குரங்கையும், பெரிய மலையினின்றும் வீழ்ந்து ஓடி வரும் அருவி நீரில் ஆடியும், அவ்வருவி அருகே வளர்ந் துள்ள நீண்ட பெரிய மூங்கிலில் ஏறி, அதன் நுனியில் அமர்ந்து ஊசலாடியும், அடுத்துள்ள மலைமீது ஏறி, வேங்கைமரத்தின் மலர்கள், அதன் கீழுள்ள சுனைநீரில் உதிர்ந்து படியுமாறு அம்மரக் கிளைகளில் குதித்து ஆடியும் மகிழ்ந்து செல்லும் அக்குரங்குகளின் ஆடல்களையும் எடுத்துக் காட்டும் அழகிய ஓவியமொன்றைத் தீட்டித் தந்துள்ளார் :

"கருவிரல் மந்திச் செம்முகப் பெருங்கிளை
பெருவரை அடுக்கத்து அருவி ஆடி,
ஓங்குகழை ஊசல் தூங்கி, வேங்கை
வெற்புஅணி நறுவீ கற்சுனை உறைப்பக்
கலையொடு திளைக்கும்." (நற் : ௩௩௪)

மற்றொரு செய்யுளில், தந்தை கள் குடித்த மயக்கத் தால், கடமை மறந்து கவலையற்றுக் கிடந்தானாக, கயிறு தொங்கும் தூண்டிற்கோலுடன் சென்று, புனலருகே அமர்ந்து, வரால்மீனை வலித்துக்கொணர்ந்து, அதை வஞ்சி மரத்து விறகால் சுட்டு, உண்ணும் பதமாக்கி, உறங்கிக் கிடக்கும் தந்தை எழுந்து தானே உண்ணமாட்டாமை யறிந்து, அவன் வாயிலிட்டு ஊட்டும், பாண்குலப் பெண் ஒருத்தியின் அன்புவாழ்க்கையினை வகுத்துக் காட்டி யுள்ளார் :

"நாண்கொள் நுண்கோலின், மீன்கொள் பாண்மகள்
தான்புனல் அடைகரைப் படுத்த வராஅல்
நாரரி நறவுண் டிருந்த தந்தைக்கு
வஞ்சி விறகில் சுட்டு வாயுறுக்கும்." (அகம் : ௨௧௬)

"பழகிய பகையும் பிரிவு இன்னாது" என்ப. எவரை யும் பழக்கத்தால் நம்மவராக்கலாம்; எவரும் பழக்கத்தால்

தம் இயல்பில் மாறுதல் கூடும்; இவ்வுண்மையினை விளக்க விரும்பிய ஐயூர் முடவனார், மக்களோடு பழகியறியாக் காட்டுப்பசுவின் கன்று, வேடர்கள் விரட்டியதால் அஞ்சித், தன் தாயையும், இனத்தையும் விட்டுப் பிரிந்து, பல காவதம் ஓடி, இறுதியில், அக்காட்டை அடுத்துள்ள அவ் வேடர்தம் ஊருட் புகுந்து, அவர் கையகப் பட்டு, வேட்டு வச் சிறுவர்களின் அன்பு வளர்ப்பால், தனக்கு இயல்பான காட்டு வாழ்வை மறந்து, வெறுத்து, அவ்வேடர்களோடு வாழும் நாட்டுவாழ்க்கையில் விருப்பம் கொள்வதை எடுத் துக்காட்டியுள்ளார் :

"அமர்க்கண் ஆமான் அஞ்செவிக் குழவி,
கானவர் எடுப்ப வெரீஇ, இனம்தீர்ந்து
கானம் நண்ணிய சிறுகுடிப் பட்டென
இளையர் ஓம்ப மரீஇ, அவண் நயந்து
மனையுறை வாழ்க்கை வல்லி யாங்கு
மருவின் இனியவும் உளவோ?" (குறுந் : ௩௨௨)

காதலுற்றார் இருவரும் கலந்து வாழப்பெற்றால், அக் காதல் நன்றாம்; இன்பம் தருவதொன்றாம்; அத்தகைய கலந்துறை வாழ்வு இன்றாயின், அங்ஙிலையில் காதலுற்றார், அக்காதலை மறவாது மேற்கொண்டு வாழ்தல் மிகவும் அரிதாம்; துன்பம் நிறைந்ததாம். காதலின் இவ்வியல் பினை விளக்க விரும்பிய ஆசிரியர், பெண்ணொருத்திபால் காதல் கொண்ட இளைஞனொருவன், அவள் காதலை முழுக்கப் பெறமாட்டாமையால் வருந்தி, தன் வாட்டம் கண்டு, "ஆண்மகன் அறிவிழந்து துயருறல் அழகன்று," என்று இடித்துக் கூறிய தன் நண்பர்கட்கு, "நண்பர்காள்! காதலின் இயல்பறியாதவர்கள் நீங்கள்; காதல், தன்னைக் கொண்டாரை வருத்தத் தொடங்கியவிடத்து அக்காத லால் துயருறுவோர், அதனோடு கூடிவாழ்தல் மிகவும் துயர் தருவதொன்றாம்; என்னால் காதலிக்கப்பட்டவள், கொடிய வளும் அல்லள்; அவள் சொற்கள் அமிழ்தம்போல் இனிக்கும்; அத்துணை இனியள் அவள்; அவள் புறத்தால் மட்டுமே அத்தன்மையள் என்று எண்ணாதீர்கள்! குணத்

தாலும் நல்லவள்; இத்தகைய சிறந்தவள்பால் கொண்ட காதலே, நீங்கள் இடித்துக் கூறுமாறு என்னை அறிவிழக்கச் செய்து துயர்தருமாயின், காதலின் கொடுமையினைக் கூறலும் இயலுமோ? ஆதலின் அறிவறிந்த என் நண்பர்காள்! காதலை நெருங்கவும் செய்யாதீர்கள்!" என்று கூறினனாகப் பாடிக்காட்டியுள்ளார்:

"அமிழ்தத் தன்ன அந்தீங் கிளவி;
அன்ன இனியோள்; குணனும் இன்ன;
இன்னா அரும்படர் செய்யு மாயின்,
உடன்உறைவு அரிதே காமம்;
குறுகல் ஓம்புமின்; அறிவுடை யீரே!" (குறுந்: உ0௬)

பண்டைத் தமிழகத்தில், அரசர், படையாளர் எனத் தனியாகச் சிலரைத் தேர்ந்து வைத்துப் பேணிவந்தாரல்லர்; அக்கால மக்கள் எல்லோரும் படைப்பயிற்சி பெற்றிருந்தனர்; போர் உண்டாயின், அரசர் செய்ய வேண்டுவதெல்லாம், போர் வந்துற்றது என்பதை ஊரார்க்கு அறிவிக்க வேண்டுவதொன்றே; அடுத்த கணமே, ஆங்குப் பெரும்படையொன்று திரண்டுவிடும்; ஊரில் உள்ளார் ஒவ்வொருவரும், தம்தம் வீட்டில் உள்ள படைக்கலங்களை ஏந்திக்கொண்டு களஞ் சென்றுவிடுவர்; ஊர்க்குடிகளோடு ஒருவனாய் வாழ்ந்து, ஊர்காக்கும் போர் வந்துற்றவுடனே, ஊரைத் தாக்கவரும் பகைவர் படையினைத் தடுத்து நிறுத்த எல்லாரினும் முன்சென்று நிற்கும் வீரன் ஒருவனைப் புகழ்வார் போல், படையாளரின் பண்டைக்கால அமைப்பு முறையினை விளக்கி யுள்ளார் புலவர்:

"சீறூர்க் குடியு மன்னும் தானே; கொடிஎடுத்து.
நிறையழிந்து எழுதரு தானைக்குச்
சிறையுந்தானே தன் இறை விழு முறினே."
(புறம்: ௱௪௪)

## ௬. கழைதின்யானையார்

கழைதின்யானையார் என்ற இப்பெயர் புலவர்க்கு ஏன் வந்தது என்பதை அறிந்து கொள்வதற்கில்லை; தாம் பாடிய பாட்டில், யானையொன்றைக் கூறுங்கால், கழைதின் யானை என்று சிறப்பித்துக் கூறினமையால் இப்பெயர் பெற்றார்போலும். ஈவார், ஏற்பார் இருவர்க்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை இவர் எடுத்துக்கூறும் முறை மிகமிக நன்று. இவர் பாராட்டைப்பெற்ற பேறுடையான் வல்வில் ஓரி என்னும் வள்ளலாவன்.

கடையெழு வள்ளல்களுள் ஓரியும் ஒருவனாவன்; இவன் விற்போரில் வல்லனாதல் அறிந்து இவனை வல்வில் ஓரி என வழங்குவர்: மேற்குத் தொடர்ச்சிமலையைச் சேர்ந்த கொல்லிமலை இவனுக்கு உரியது; கொல்லிமலை பழங்கள் நிறைந்த பலாமரங்கள் பலவற்றைப் பெற்றுளது; அக்கொல்லியைச் சூழ உள்ள, ஓரிக்காடு, மணம் மிக்க மலர்களால் சிறப்புற்றது; கொல்லிமலையில் அழகே உருவெனத் திரண்ட பாவையொன்றுண்டு. ஓரி, மலையமான் திருமுடிக்காரியொடு போரிட்டு இறந்தான்; அதன்பின், ஓரியின் கொல்லிமலையும், காரியின் நண்பராம் சேர வேந்தர்க்கு உரிமை உடையதாயிற்று; ஓரியைக் கொன்ற காரி, அவன் கொல்லிநகரில் வெற்றி ஊர்வலம் வந்து விழாக்கொண்டாடினன். ஓரி மாரிபோல் வழங்கும் வள்ளலாவன்.

ஓரியைப் பாடி, அவன் கொடைச் சிறப்பினைப் பாராட்டிய புலவர் கழைதின்யானையார், வேண்டும் இடம் இது; வேண்டா இடம் இது என்னும் வரையறையின்றி, நீர் வற்றிய குளத்திலும், நெல்விளை நிலத்திலும் பெய்வதே போல், ஒன்றும் விளையா உவர்நிலத்திலும் பெய்யும் மழையைப் போன்றே, ஓரியும் தன்பால் வரும் இரவலர்களுள் இவர் வல்லார்; இவர் மாட்டார்; இவர் பழையர்; இவர் புதியர் என்று வேறுபாடு கண்டு வரைந்து வழங்காது, வந்தார் அனைவர்க்கும் வரையாதே வழங்கும்

இயல்புடையனாதலின், அவன்பால் பரிசில் பெறவந்து, அது பெறமாட்டாது வருந்தினர் எவரேனும் உளராயின், அவர், தாம் புறப்பட்டு வந்த காலத்தின் கொடுமையினை யும், தம் எதிர்வந்த பொல்லாத புள்நிமித்தத்தையும் பழிப்பரே அல்லாமல், ஓரியைப் பழியார் என்று கூறிப் பாராட்டியுள்ளார்:

" புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர் பழியலர்; அதனால்
புலவேன் வாழியர்; ஓரி! விசும்பிற்
கருவி வானம் போல
வரையாது சுரக்கும் வள்ளியோய்! நின்னே." (புறம்: ௨0௪)

ஓரியின் கொடைத்திறம் கண்டு வியந்த புலவர் கழாத்தின்யானையார், அவன் புகழ் மேலும் சிறக்குமாறு விரும்பி, அவனுக்கு அரிய அறவுரைகள் சில அளிக்க எண்ணினர்.

'செல்வத்துப் பயனே ஈதல்' என்ப. இப் பண் புணர்ந்தார்பால் பொருள்சேரின், அது அனைவர்க்கும் பயனளித்துத் தானும் பயனுடையதாகும்; இவ்வுண்மை உணராதார்மாட்டு அச்செல்வம் சேரின், அச்செல்வத்தால் அவரும் பயனுறார்; பிறரும் பயனுறார்; அதுவும் பயனுறாது; உண்ணும் பழம் நிறைந்த மரம், ஊர் நடுவே தோன்றி விடின், மக்களும், விலங்கும், பறவையும், பிறவும் அம் மரத்தை நாடிவந்து கூடிப் பயன்பெறுவர். ஆங்கே ஒன் றிற்கும் உதவா எட்டி மரம்போலும் நச்சு மரம் தோன்றி, மிகப் பழுத்து நிற்பினும், அது நிற்கும் இடத்தை எண் ணிப் பார்ப்பாரும் இரார். அதைப்போல், "ஈதல் இசைபட வாழ்தல், அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்ற கொள்கையானையே மக்கள் தேடிச் செல்வர்; செல்வம் சுருங்கிய காலத்தும், அவன் தருவான் சிறுபொருளாயி னும் என்ற நம்பிக்கை உண்மையால், மக்கள் கூட்டமாய்ச் சென்று அவன் இல்லைச்சூழ்ந்து நிற்கத் தவறுவதிலர். அப் பண்பறியான் ஒருவன், பெருஞ்செல்வம் பெற்றுப் பெருவாழ்வு வாழக் காணினும், அவன் ஈயான் என்பதை

அறிவாராதலின், அவன்பால் எவரும் செல்லார்; தாம் வறுமையுற்று வாடிய காலத்திலும் அவனைப்பற்றி எண்ணவும் செய்யார். ஆதலின் செல்வம் படைத்தோர் பகிர்ந்துண்டு வாழும் பண்பினராதல் வேண்டும்; அது அவர்க்குப் புகழும், பெருமையும் தரும்; நிலையற்ற செல்வத்தால் நிலைபேறுள்ள புகழைப் பெறுதலையே அறிவுடையோர் விரும்புவர்; செல்வம் சேர்த்தும், சேர்ந்தோர்க்கு அளித்து வாழாதார், அச்செல்வத்தாலாய பயனைப் பெறுமையோடு, அச் செல்வத்தைத் தேடிய துன்பத்தோடு பழியினையும் பெற்றவராவர்; இவ்வாறு நிலையில்லாச் செல்வத்தால், நிலைத்து நிற்கும் பழியினைப் பெறுவார் அறிவுடையாராகார்.

சேர்த்தோர் பண்பு, பண்பின்மைகளுக்கேற்பச் சிறப்பும் சிறப்பின்மையும் பெறும் செல்வத்தின் இவ்வியல் புணர்த்த விரும்பிய புலவர், நீர்வேட்கை யுடையார் பெரிய கடலருகே இருப்பினும், அந்நீர் உப்புக் கலந்து உண்டற் பண்பு குறைந்து காண்பதால், அதை உண்ண நினையார்; உண்டற்குரிய நீர்நிற்கும் ஊருணியில், மக்களே அல்லாமல், ஆக்களும், மாக்களும் குடித்தமையால், குறைந்து சேறு பட்டுக் கலங்கிய காலத்தும், அந்நீர் உண்ணவேண்டி வருவாரும் பலராவர்; அவர் அக்குளம் நாடிவரும் வழியும் பலவாம் என்று கூறினார்.

"தெண்ணீர்ப் பரப்பின் இமிழ்திரைப் பெருங்கடல்
உண்ணா ராகுப நீர்வேட் டோரே;
ஆவும், மாவும் சென்றுணக் கலங்கிச்
சேற்றொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கின் அதர்பல வாகும்." (புறம் : ௨௦௪)

செல்வத்தின் சிறப்பும், சிறப்பின்மையும், அதைக் கொண்டோர் பண்பு, பண்பின்மைகளினாலேயே யாம் எனச் செல்வத்தின் இயல்பு கூறிய புலவர், அச்செல்வம் வேண்டி இரப்போரும், இரப்போர்க்கு அச்செல்வத்தை ஈவோரும் ஆய இருவர்க்கும் உண்டாம் உயர்வு தாழ்வுகளையும் உணர்த்தியுள்ளார்.

"ஆவிற்கு நீரென்று இரப்பினும், நாவிற்கு
இரவின் இளிவந்தது இல்" (திருக் : ௧0௬௬)

என்று வள்ளுவப் பெருந்தகையாரும்,

"ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே"

என்று ஆசிரியர் தொல்காப்பியனாரும் கூறுவர். ஒருவர்பால் சென்று, பணிந்து பல்லைக்காட்டி இரந்துநிற்றல் அம்மம்ம! இழிவு! இழிவு!

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (திருக் : அ௧)

ஆதலின், தம்பால் வந்து அவ்வாறு இரந்து நிற்பார்க்கு, அவர் வேண்டும் பொருள் அளித்துப் போற்றாத வாழ்வு வாழ்வாகாது; அத்தகைய வாழ்வு வாழ்வதினும் இறத்தல் மிக மிக நன்றாம்;

"சாதலின் இன்னாதது இல்லை; இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை" (திருக் : ௨௩0)

"ஈதல் இரந்தார்க்கு ஒன்று ஆற்றாது வாழ்தலின்
சாதலும் கூடும்." (கலித்தொகை : ௬௧)

"இடும்பையால் இன்மை உரைத்தார்க்கு
அது நிறைக்க லாற்றாக்கால்
தன்மெய் துறப்பான்" (கலித்தொகை : ௬௩)

என்றெல்லாம் கூறுவர் பெரியோர். ஈதற்காம் பொருள் பெறாதான் இழிவே இதுவாயின், தன்முன் நின்று இரப்பார்க்குத் தன்பால் உள்ளதைக் கொடுத்து உதவாது, 'என்பால் இல்லை' என இயல்வது கரந்து, "ஈயேன் போ" எனச் சொல்லிப் போக்குவோன் இழிவினைக் கூறலும் இயலுமோ? அவன் நிலை, ஈ என இரப்போன் நிலையினும் இழிவுடைத்தாம்.

"அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃது ஒருவன் பெற்றான் பொருள்வைப் புழி" என்ற அறிவுடையாராய்த், தம்பால் உள்ளதை இல்லார்க்கு ஈந்து வாழ்தல் வேண்டும்; அவ்வாறு

கொடுக்கும்பொழுதும், பொருள் இல்லாதவர் தம்பால் வந்து இரந்துநின்று, "யான் வறியேன்; உண்ண உணவில்லேன்," என்று தம்குறை கூறக்கேட்ட பின்னர்க் கொடுத்தனுப்புவதினும், அவர் குறையினை அவர் உரையாமுன், குறிப்பான் அறிந்து, "நீர் வேண்டிவந்த பொருள் இதோ உளது; கொண்டு செல்க" என்று கூறிக் கொடுத்தல் நன்று; அது, கொடுப்போர் நற்குடிப்பண்பை நாட்டார் உணரத் துணைபுரியும். "இலன்என்னும் எவ்வம் உரையாமை ஈதல், குலனுடையான் கண்ணே உள" எனக் கூறுவதையும் காண்க. அவ்வாறு தாம் இரவாமுன், பிறர் கொண்டுவந்து கொடுப்பதை ஏற்றுக்கொள்வதால் இழிவு இல்லையாயினும், அவர் கொடுக்கவந்தக்கால், "ஐய! பொருள் வேண்டும் புன்கண்மை யுடையேனல்லேன்" என்று கூறி, அதைக் 'கொள்ளேன்' என மறுத்து வாழ்வோன், 'கொள்' எனக் கொடுப்போனினும் உயர்ந்தோனவன். "நல்லாறு எனினும் கொளல் தீது", என்பர் பெரியோர். ஏற்போர், ஈவோர் ஆய இருவர் பாலும் அமைய வேண்டிய இப்பண்புகளைப், புலவர் அழகிய சிறு சிறு சொற்றொடர்களால் தெளிய உணர்த்தியுள்ளார்.

"ஈயென இரத்தல், இழிந்தன்று; அதன்எதிர்
ஈயேன் என்றல், அதனினும் இழிந்தன்று;
கொள்எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று."

(புறம்: ௨0௪)

## ௭. கோடை பாடிய பெரும்பூதனர்

கோடைக்கானல் என இப்போது வழங்கும் மலைக்குப் பண்டையோர் வைத்த பெயர் கோடை என்பது : அக் கோடை மலையைப் பாடியோர் பலராயினும், இவர் சான்றோர் பலரும் வியந்து பாராட்டுமாறு பாடிய சிறப்பால் கோடை பாடிய பெரும்பூதனர் என்று அழைக்கப் பெற்றார். இனி, பாலைத்திணையைப் பாடிய பெருங் கடுங்கோ, பாலைபாடிய பெருங்கடுங்கோ எனவும், மடலேறு தலைப் பாடிய மாதங்கீரனார், மடல் பாடிய மாதங்கீரனார் எனவும் அழைக்கப் பெறுதலேபோல், பெரும்பூதனார் கோடைக் காலத்தின் கொடுமைகளை விளங்கப் பாடிய சிறப்பால் கோடைபாடிய பெரும்பூதனார் என அழைக்கப் பெற்றார் என்றும் கொள்ளலாம். ஆனல், இவர் பாடிய பாட்டாக நமக்குக் கிடைத்த செய்யுளில் அவர் கோடை மலையையோ, கோடைக் காலத்தையோ படினார் என்ப தற்கான சான்று ஒன்றும் இல்லை. ஆதலின், அவர் பெயர்க்காம் காரணத்தை அறிந்துகொள்வதற்கில்லை.

உண்ணுதற்காம் உணவோ, செய்தற்காம் தொழிலோ பெறமாட்டாப்பாலைநிலத்தில், அவ்வழிவருவாரை ஆறலைத்து வாழும் மறவர், தம் நிலத்தை அடுத்துள்ள முல்லைநிலத்துட் புகுந்து, அங்குள்ளார்க்குரிய ஆனிரைகளைக் களவாடிச் சென்று விடுவதும், இவ்வாறு பாலைநிலத்து மறவர் தம் ஆனிரைகளைக் கவர்ந்து சென்றனர் என அறிந்த அந்நிலத்து வீரர், விரைந்து சென்று அம் மறவரை மடக்கி வென்று அழித்துத் தம் ஆனிரைகளை மீட்டுக் கொணர்வதும்; அவ் வாறு ஆனிரைகளை வென்று தந்தாரைப் புகழ்ந்து பாராட்டு வதும், அப் போரில் இறந்தாரைக் கல்லெடுத்து வழி படு வதும் அக்கால வழக்கங்களாம். அவற்றுள் ஒருகாட்சி யைப் புலவர் பாராட்டியுள்ளார்.

பகைவர் நாட்டு மறவர்கள் தம்மூருட்புகுந்து தம்நாட்டு ஆனிரைகளைக் கவர்ந்து சென்றுவிட்டனர் என்பதை அந்

நாட்டு மறவர்கள் அறிந்தனர். உடனே, அந்நிரைகளை மீட்டுக் கொணர்தலே கருத்தினராய வீரர்களைத் துணையாகப்பெற்று வீரன் ஒருவன், அவ் ஆனிரைகள் சென்றவழி தேடிப் புறப் படலாயினன். அப்போது ஆங்கு வந்தனர் சில அறிஞர்கள். அவர்கள் வழியில் ஆனேறுகள் செல்லும் காட்சியினையும், அதைக் கவர்ந்து செல்லும் வீரர்களின் இயல்புகளையும், கண்டுவந்தனர். ஆனிரைகளைக் கவர்ந்த பகைவீரர்கள், ஆனிரைகளை மீட்டல் கருதி வீரர்கள் வருவர் என்பதை அறிந்தவராய், அவர்களைத் தடுத்து நிறுத்தும் கருத் தோடு, ஊரைச் சூழவுள்ள காவற் காட்டினுள் தலைமறைந்து இருக்கலாயினர். இந்நிலையில் செல்லும் வீரன் இவர்கள் இருப்பதை அறிந்து அவரோடு போர் மலைந்து வெற்றி கொள்ளாது, ஆனிரைகள் பின் செல்வது அறிவுடைமை யாகாது என அறிந்தவராதலின், அவர்கள் அவ்வீரன்பால் சென்று உண்மையைக்கூறி செய்யவேண்டுவனவற்றை விரித்து உரைத்தனர். இந் நிகழ்ச்சியினைப் பாட்டாக ஆக்கிக்காட்டும் புலவர், பகைவர் விரைந்து ஓட்டுவதால் மிரண்டு துள்ளிக்குதித்து ஓடும் ஆனிரைகள், முருகுஎறத் தெய்வம் வரப்பெற்ற ஆடுமகளிர், அந்நிலையில் வேலேந்தி ஆடுவதைப்போல் காட்சியளித்தன என்றும் கூறியுள்ளார்.

"ஏறுடைப் பெருநிரை பெயர்தரப், பெயராது,
இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந்து இருந்த
வல்வில் மறவர் ஒடுக்கம் காணுய் ;
செல்லல் ; செல்லல் ; சிறக்கநின் உள்ளம் !
முருகு மெய்ப்பட்ட புலைத்தி போலத்
தாவுபு தெறிக்கும் ஆன்மேல்
புடைஇலங்கு ஒள்வாள் புனைகழ லோயே !"

(புறம் ; உ௬௧)

## அ. செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன்

வள்ளுவர் என்பார் திருவிழா திருமணம் போன்ற பெருநிகழ்ச்சிகளை முரசறைந்து நகர மாந்தர்க்கு அறிவிக்கும் பழந்தமிழ்க் குடியினராவர். "திருநாள், படைநாள், கடிநாள், என்று இப்பெருநாட் கல்லது பிறநாட்கு அறையாச் செல்வச்சேனை வள்ளுவ முதுமகன்," என்று இவர்கள் பாராட்டப்பெறுவர். அக்குடியிற் பிறந்து, பெருஞ்சாத்தன் என இயற்பெயர்பூண்டு அரசியல் செய்திகளை அறிவிக்கும் தொழில் மேற்கொண்டு வாழ்ந்தமையால் இப்புலவர் செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன் என அழைக்கப்பெற்றார்.

"என் காதலர் சேய்நாடு சென்று வாழ்பவராயினும் அவர் உள்ளத்தே யானும், என் உள்ளத்தே அவரும் என்றும் பிரியாது உறைவதால், அவர் சேய்மைக்கண் வாழ்வதாகவே எண்ணுவதிலன்," என்று தன் அன்புடைமையினை உணர்த்திய ஒரு பெண், "அவர் சென்ற நாட்டிற்கும் எம் ஊருக்கும் இடையே ஒரு பெருங்கடல் உளது எனினும், அவர் நாட்டினின்றும் புறப்பட்ட அலைகள் ஒவ்வொன்றும் எம் வீட்டின் முன்னிடத்தே உள்ள கடற்கரையைத் தழுவாமல் மீள்வதில்லை. அவ் அலைகளைக் காண்பதை அவரைக் காண்பதாகவே கருதுகின்றேன் ஆதலின் அவர் பிரிவால் துயர்கொள்வதிலேன்," என்றும் கூறினாள் எனப் பாடி அக்கால மகளிரின் மனப்பண்பினைக் காட்டியுள்ளார் புலவர்:

"கானல் நண்ணிய சிறுகுடி முன்றில்
திரைவந்து பெயரும் என்ப; நத்துறந்து
நெடும் சேண் நாட்டா ராயினும்,
நெஞ்சிற்கு அணியர்; தண்கடல் நாட்டே."
(குறுந் : உஉஅ)

# ௯. திப்புத் தோளார்

உறுப்பாற் பெயர்பெற்ற புலவர்களுள் இவரும் ஒருவர். இவர் தோளைச் சிறப்பித்து நிற்கும் திப்பு என்ற அடை வந்ததற்கான காரணத்தை அறிந்துகொள்வதற் கில்லை. இவர் பாடிய பாட்டு குறுந்தொகையில் முதற் பாட்டாகத் தொகுத்துப் பாராட்டப்பெற்றுளது எனின் இவர் பெருமையினை என்னென்பது! இறைவன் பாடிய பாட்டு எனப் போற்றப்பெறும் பெருமைவாய்ந்த "கொங்கு தேர் வாழ்க்கை" என்ற செய்யுட்கும் முன்வைத்துச் சிறப் பிக்கப்பெற்றுள்ளது அப்பாட்டு.

நான்கடியாலாய அப்பாட்டில் செங்களம், செங்கோல், செங்கோடு, சேய் என நான்கிடங்களில் செம்மைப் பண்பு தோன்றப் பாடியுள்ள புலமை பாராட்டற்குரியது. முருகன், போர்க்களம் பகைவர் உடலினின்றும் ஒழுகிய செந்நீரால் செந்நிறம் பெறுமாறு பெரும்போர் ஆற்றி னமையால், பகைவர் இரத்தக்கறை படிந்து சிவப்பேறிய அம்புடையன்; சிவப்பேறிய கோடுகளையுடைய பிணி முகம் என்ற யானையுடையன்; அவ்வெற்றிச் சிறப்பால் பெற்ற வீரக்கழல் உடையன்; அவன் விரும்பி உறையும் இடம் குன்று. அவன் அமர்ந்துறையும் அக்குன்று செங் காந்தள்மலர் நிறைந்து மணம் நாறும் மாண்புடையது என முருகனையும் அவனுறை குன்றையும் பாராட்டியுள்ளார் புலவர்.

இப்பாடலின் அருமை பெருமையுணர்ந்த உரையாசி ரியர் பலரும், அதைப் பல்வேறு அகத்துறைகட்கு எடுத்துக் காட்டாக எடுத்தாண்டுள்ளனர்.

தோழியின் துணைபெற்றுத் தலைவியின் உறவினைப் பெற விரும்பிய தலைமகன், தோழிபால் காந்தட்பூவைக் கையுறையாகத் தந்து தன் குறைகூறிய வழி, அதை ஏற்க மறுக்கும் தோழி, "ஐய! எங்கள் முருகன் உறை குன்றி லும் காந்தள்மலர் உண்டு; ஆகவே இது வேண்டேம்,"

எனக் கூறி அக்கையுறையினை மறுத்தாள் எனப் பொருள் கூறுவர் சில உரையாசிரியர்.

தலைமகனுக்குக் குறை நேர்ந்த தோழி அவனைக் காந்தள் மலர் நிறைந்த குன்றிடத்தே நிறுத்திவிட்டுத் தலைமகள்பால் சென்று அவளை, அவன்பால் செல்லுமாறு கூறுவாள், "தலைவன் ஆண்டுளன்; அவன்பாற் செல்க," எனக் கூறல் தகுதியன்று என எண்ணி, "குன்று காந்தள்மலர்களால் கவினுற்று விளங்குகிறது; அதைக் கண்டு களித்து வருவாயாக," எனக் கூறினள் எனப் பொருள் கூறுவர் வேறு சிலர்.

தலைமகளைக் குறியிடத்தே கொண்டு நிறுத்திய தோழி அவளைவிட்டுப் பிரியுங்கால், "தோழி! யான் சென்று காந்தள்மலர் கொய்துவருவல்; அம்மலர் நிறை குன்று, முருகன் உறையும் இடமாம்; ஆண்டு நீ வரின் அம்முருகனால் அணங்குறுவை; ஆதலின், என்னோடு ஆங்கு நீ வருதல் ஆகாது. யான் வருங்காறும் ஈண்டே உறைக," எனக் கூறிப் பிரிந்தாள் எனப்பொருள் கூறுவர் மற்றும் சிலர்.

இவ்வாறு கூறப்பெறும் எல்லாப் பொருளும் ஏற்குமாறு பாடிய புலமை நிறைந்தது அப்பாட்டு என்பதறிந்து மகிழ்வோமாக.

"செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த
செங்கோல் அம்பின், செங்கோட்டு யானைக்,
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே." (குறுந்:க)

# ௪௦. நரிவெரூஉத் தலையார்

நரிவெரூஉத் தலையார் என்ற இப் பெயரை இவர்க்கு இட்டார் யார்? அப் பெயர் இட்டது ஏன்? என்பன குறித்து எத்தகைய விளக்கத்தையும் அறிந்து கொள்வதற்கில்லை; இவர் உடல்நலமும், தோற்றமும் யாது காரணத்தாலோ வேறுபட்டுத் தோன்றின எனக் கூறுகின்றனர். அவ்வாறு வேறுபட்ட அவர் தோற்றம், எவ் வுருவைக் கண்டும் அச்சம் கொள்ளா இயல்பினதாய நரிக்கும், அச்சம் தருவதாய் அமைந்திருப்பக் கண்டு இப்பெயர் இட்டனர்போலும்! நரியும் வெரூஉம் தலையார், நரி வெரூஉத் தலையார். இவ்வாறு, வேறுபட்ட உடல் தோற்றமுடைய இவர்பால், அன்புடையார் சிலர், "சேரமான் கரு ஊர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும்பொறையைக் காணின் நின் நல்லுடல் பெறுவாய்" எனக் கூறக் கேட்டுச் சென்று, அவனைக் கண்டு, எவரும் வெறுக்கும் தோற்றமிழந்து தம் பண்டைய வடிவினைப் பெற்றார் என்ற ஒரு வரலாறும் வழங்குகிறது. இவ் வரலாறு அறியத் துணைபுரிவன, "சேரமான் கருவூர் ஏறிய ஒள்வாட் கோப் பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்ட ஞான்று நின்னுடம்பு பெறுவாயாகென, அவனைச் சென்று கண்டு தம்முடம்பு பெற்று நின்ற நரிவெரூஉத் தலையார் பாடியது" என்ற கொளுவும் (புறம் : ரு), "நரிவெரூஉத் தலையார், தம் முடம்பு பெற்று வியந்து கூறிய பாட்டு" என்ற பேராசிரியர் உரையுமாம் (தொல். பொருள் : உ௯ரு). நரி வெரூஉத் தலையாரின் உடல் வேறுபட்டுத் தோன்றிற்று என்று கூறுவதன் பொருள் யாது? அவ் வேறுபாடு எவ்வாறு உண்டாயிற்று; சேரவேந்தனைக் கண்டு, தம் முடம்பு பெற்றார் எனக் கூறுவதன் பொருள் யாது? நரிவெரூ உத்தலையார், தன்னைக் கண்டவுடனே, அவர், தம் நல்லுடம்பு பெறுமாறு செய்யச் சேரமான் பெற்றிருந்த ஆற்றலோ, அருமருந்தோ யாது? என்பனபற்றி எவரும் விளக்கம் தந்தாரல்லர்.

நரிவெரூஉத் தலையார், நல்ல அறவுணர்வுடைய ஆன்றோராவர்; நன்றி மறவா நன் மாண்புடையராவர்; தாம் பெற்றிருந்த பழியுடம்பு நீங்கிப் புகழுடம்பு பெறுதற்குக் காரணமாய சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப் பெருஞ் சேரல் இரும்பொறை, நல் வாழ்வு பெற்று நல்லோர் போற்ற வாழ்வதை விரும்பி வாழ்த்திய அவர் வாழ்த்துரை, நரிவெரூஉத் தலையார்தம் நன்றி உள்ளத்தை நாட்டார் அறிய உணர்த்திநிற்றல் காண்க. நரி வெரூஉத் தலையார், சேரமான் ஒருவன் மட்டும் நன்கு வாழ்ந்தால் போதும் என எண்ணுமல், நாட்டார் அனைவரும் நல்வாழ்வு வாழ விரும்பும் நல் உள்ளம் உடையவராவர்.

கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரல் இரும்பொறை, சேரர்களுள், இரும்பொறை என்ற மரபில் வந்தோனுவன்; இவ் விரும்பொறை மரபினர், தொண்டி, மாந்தைபோன்ற ஊர்களால் சிறப்புற்ற கடற்கரை நாட்டினை ஆண்டிருந்தவராவர்; அவர் வழிவந்த இவன், தனக்குரிய நாட்டோடு அமையாதுக், கொங்கு நாட்டில் உள்ளதும், சேரருள் மற்றொரு கிளையினர்க்கு உரியதுமாய கருவூரையும் கைப்பற்றி ஆண்டிருந்தான்; வாட்போரில் வல்லவன்; பெருஞ் சேரல் எனப் பெருமை செய்யப் பெற்றோனுவன்.

இவன் பெருமையினையும், நரிவெரூஉத் தலையாரின் உடல்நலக் குறைவினையும் உணர்ந்த சிலர், நரிவெரூஉத் தலையார்பால், "பெருஞ் சேரல் இரும்பொறையினைக் காணின், நின் உடற்குறை தீரும்" என்று கூறி, அவன் யாண்டுளன்? அவன் இயல்பு யாது? என்பனவற்றையும் அறிவிக்கத் தொடங்கி, "எருமைகளுக்கு இடை இடையே கலந்து மேயும் ஆனிரைகளைபோல், கரிய பாறைகளுக்கு இடை இடையே உலாவும் யானைகள் நிறைந்த காட்டு நாட்டில் வாழ்பவனுவன் அவன்," என்றும் கூறியிருந்தனர்; அவர்கள் கூறியவாறே, நரிவெரூஉத் தலையார், சேரநாடு சென்று பெருஞ் சேரலாதனைக் கண்டனர்.

கண்டவுடனே, அவர் நோய் நீங்கிற்று; அதனால், புலவர்கள் கூறிய காட்டு நாட்டானாகிய பெருஞ்சேர லிரும்பொறை அவனே என அறிந்துகொண்டார்.

பிறர்பால் உள்ள பெருந் துயர்போக்கும் பெருமையுடையோனாகிய பெருஞ் சேரல், நாள் பல வாழ்ந்து, மேலும் பலரின் பிணி போக்கவும் துணைபுரிதல் வேண்டும் எனவும், அதற்காம் அரசாள்பண்பு அவனிடத்தில் அமைதல்வேண்டும் எனவும் விரும்பினார். ஆளும் அரசனிடத்தில் அன்பும், அருளும் நீங்காது நிறைவுற்றிருத்தல் வேண்டும்; அவை அவன் மாட்டு இல்லாயின், அவன் ஆட்சி நெடிதுநாள் நிலைபெற்றிராது; அன்பையும், அருளையும் அடிப்படையாகக் கொண்ட ஆட்சியினையே எவரும் விரும்புவர்; அவை இரண்டும் இல்லார், அறநெறி நில்லார்; ஆதலின், அவர் ஆட்சி அழிவதோடு அவரும் பழிபாவங்களுடையராய் மீளாத் துயருறுவர் என்ற உண்மைகளை உணர்ந்தவர் நரிவெரூஉத் தலையாராதலின், தாம் நல்லுடல் பெற்று உயர்வதற்கு உறுதுணை புரிந்த ஓர் அரசன், அவ்வாறு அன்பும், அருளும் இலனாய்ப், பழி பாவங்கள் நிறைந்த பாழ்பட்ட வாழ்வுடையனாதலை விரும்பினாரல்லர்; அதனால், அவனேயன்றி, அவனைச் சேர்ந்து வாழும் அவன் நண்பர்களும் அத்தகைய தீநெறியாளராய் இல்லா திருக்குமாறு வாழ்த்தினார்.

ஒரு நாட்டு மக்கள், தங்கள் அரசன் தீயனல்லன் என்ற ஒன்றினாலேயே, உயர்நிலை பெறுவதோ, பெருமை கொள்வதோ இலர்; அவன், தீயனல்லன் என்பதோடு நல்லனுமாவன் என்பதையே விரும்புவர்; அரசன், குடிகளின் குறையறிந்து ஆளுதல்வேண்டும்; குடிகள், தம் குறையினைக் கூறக் கேட்டபின்னர், அவர்க்குக் குறையுண்டென உணர்ந்து தீர்ப்போன் நல்லரசுடையனாகான்; அவர் குறைகளைக் குறிப்பாலறிந்து போக்குதல்வேண்டும்; குழந்தை பால் உண்ணும் நேரம் இது என்பதை நினைத்திருந்து ஊட்டி வளர்ப்பவளே தாய்; தாய் எனக் கூறத் தக்காள் அவளே; இறையன்பினும், பால் நினைந்தூட்டும்

தாயன்பு சிறந்தது என்பர் மணிவாசகப் பெருந்தகை யாரும். அரசன் குடிகளிடத்தில், அத்தகைய தாயன்பு காட்டி ஆளுதல் வேண்டும். நல்லாட்சியின் இப் பண்பு புணர்ந்த நரிவெரூஉத் தலையார், பெருஞ்சேரலாதனும், அத்தகைய உத்தம அரசனாதலை விரும்பினார்; ஆகவே, அவன்பால் அக் குணங்கள் இருப்பினும், அவற்றை அவன் விடாது மேற்கொண்டிருத்தல் வேண்டும் என்ற வேட்கை யால், "பெருஞ் சேரலாத! நின்பால் பெருஞ் செல்வம் உளது; அச் செல்வத்தோடு, இப் பண்புகளையும் நீ விடாது மேற்கொள்ளின், நின்நிலை மேலும் சிறந்து காணப்படும்; அச் சிறந்தநிலை எளிதில் எய்துதல் இய லாது; அதைப் போற்றிக் காப்பாயாக," என்று வாழ்த் தினார்; நரிவெரூஉத் தலையாரின் நன்றி மறவாப்பண்பு நன்று! நன்று!

"எருமை அன்ன கருங்கல் இடைதோறு
ஆனிற் பரக்கும் யானைய, முன்பின்
கானக நாடனை நீயோ; பெரும!
நீயோ ராகலின், நின்னொன்று மொழிவல்;
அருளும், அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவ ரொடு ஒன்றாது, காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி!
அளிதோ தானே அது; பெறலருங் குரைத்தே.
(புறம் : 5)

அரசன் ஒருவன் வாழ அறவுரை கூறிய நரிவெரூஉத் தலையார், உலக மக்கள் ஒவ்வொருவரும் நல்வாழ்வு வாழ்தற்காம் அறவுரையினையும் கூறியுள்ளார். "தோன்றின் புகழொடு தோன்றுக," என்பர் பெரியோர். மக்களாய்ப் பிறந்தார், உலகிற்கும் தமக்கும் மாண்புதரும் செயலாற்ற லைக் கடமையாக மேற்கொள்ளுதல் வேண்டும். அவர் வாழ்நாள் ஒவ்வொன்றும், நல்லன ஆற்றிய நாளாகக் கழிதல்வேண்டும்; நல்லன ஆற்றாது கழியும்நாள் அவர் வாழ்க்கையில் பயனற்ற நாளாம். பயன் நிறைநாள் பெறாது மூத்தோர் பயனற்றவராவர்; உலகில் பிறந்தார்

ஒவ்வொருவரும் உயர்ந்தோர் போற்றும் உயர்வுடையராதல் வேண்டும் என்ற உணர்வுடையராய நரிவெரூஉத் தலையார், அவர் அவ்வாறு உயர்வதற்காம் ஓர் அரிய அறவுரையினை அளித்துள்ளார்.

மக்களால் மதிக்கப்பெறுதலை விரும்பும் ஒவ்வொருவரும் தம் வாழ்நாளில் நல்ல செயல் ஒன்ருவது ஆற்றுதல் வேண்டும். ஆனல், நல்லது செய்தற்கு இடமும் பொருளும் வாய்த்தல் வேண்டும். இடமும் பொருளும் எல்லார்க்கும் வாய்த்தல் அரிது; இதனல் நல்லது ஆற்றுதல் எல்லார்க்கும் இயலாது. அவ்வாறு அவ்விரண்டும் வாய்க்கப்பெருத காரணத்தால் நல்லது ஆற்ற இயலவில்லையே என வருந்துவார், தம்மால் நல்லது செய்து நாட்டார்க்கு நன்மை செய்ய முடியாத அந்நிலையில் அந் நாட்டார்க்குத் துயர் தரும் தீயசெயல்களைச் செய்யாது இருத்தலை மேற்கொள்வது நன்று. நல்லது செய்தற்கு வேண்டும் பொருளும், பிறவும், தீயன செய்யாது இருத்தற்கு வேண்டுவ இன்று ஆதலின் அதனை அவர் செய்தற்கு எவ்விதத் தடையும் இன்ரும்.

மேலும், மக்கள் மனம் நல்லதைச் செய்வதினும் அல்லதைச் செய்யவே பெரிதும் விரும்பும். உலகச் சூழ்நிலையும் அல்லது செய்யத்தூண்டும் நிலையிலேயே அமைந்துளது. ஆதலின், நல்லது செய்வாரினும் அல்லது செய்யாது வாழ்வார், ஆற்றல் மிகப்பெற்றவராதல் வேண்டும். நல்லது செய்வதால் விளையும் நன்மையினும், அல்லது செய்யாமையால் விளையும் நன்மை மிகமிகப் பெரிதாம். அதைப்போலவே நல்லது செய்யாமையால் விளையும் கேட்டினும் அல்லது செய்வதால் விளையும் கேடும் மிகமிகப் பெரிதாம்.

இவ்வாறு நல்லன ஆற்றுவதினும் அல்லன ஆற்ருமை எளிதுபோல் தோன்றுவதையும், நிறைந்த பயனையும் குறைந்த கேட்டினையும் தருவதையும் உணர்ந்த நரிவெரூஉத் தலையார் நல்லது செய்ய இயலாதாயினும் அல்லது

செய்யாது வாழ்வீராக என்று கூறி வழிகாட்டினர். அறவழி இது என அறிவுறுத்திய புலவர், அறிவுறுத்தியதோடு நின்றாரல்லர். மக்கள் வாழ்நாள் நிலையற்றது; தம் வாழ் நாள் எப்போது முடியும் என்பதை எவரும் அறியார். ஆதலின் செய்யும் அறவினையினைச் செய்ய எண்ணிய அப் போதே செய்து முடித்தல் வேண்டும். "மற்றறிவாம் நல்வினை; யாம் இளையம்; என்னாது கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்ம்மின்" என்று கூறும் அறவுரைகளையும், அவை கூறுதற்காம் அக்காரணங்களை யும் அறிந்தவர் நம் புலவர் ஆதலின், தம் வாழ்நாள் வற்றிப் போகும் அந்நாளில், "அந்தோ! செய்யக்கடவ நல்வினை எதையும் செய்திலேன்; அதைச் செய்தற்காம் காலம் இனி வாய்த்தலுமின்றே; என்செய்வேன்," என்று இரங்குவதில் லாமல் வாய்த்தபோதெல்லாம் அறம் செய்து வாழ்வீராக! என்று வழியும் கூறியுள்ளார்.

தாம் கூறிய அறவுரை அறிந்து ஆற்றாது வாழ்ந்து அழிந்தார் தம்மை, அவர் நரையினையும் திரையினையும் எடுத்துக்காட்டி இழித்துரைத்துப் பழித்தும் உள்ளார்; உலக மக்கள் உயர்வில் அவர்க்குள்ள ஆர்வந்தான் என்னே!

"பல்சான் றீரே! பல்சான் றீரே!
கயல்முள் ளன்ன நரைமுதிர், திரைகவுள்
பயன்இல் மூப்பின் பல்சான் றீரே!
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை, இரங்குவிர் மாதோ!
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்,
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்,
எல்லாரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே." (புறம்:௧௯௫)

சிறுவர்கள் கலந்து ஆடுங்கால் அவரவர் கொணர்ந்த தின்பண்டங்களை ஒருவர்க்கொருவர் அளித்து ஆடி, பூசல் நேர்ந்தவழி 'நான் கொடுத்த தின்பண்டத்தைக் கொடு' என்று கேட்பதும், 'என் வயிற்றினுள் உளது, அறுத்து

எடுத்துக்கொள்' என விடையளிப்பதும், அச்சிறுவர்களின் விளையாட்டின் ஒரு பகுதியாம். இதை உணர்ந்து நம் புலவர், தலைவன், 'தலைவியைப் பிரிந்து சென்று பொருள் தேட எண்ணுகின்றேன்' என்று கூறுவதுகேட்ட தோழி, அவ்வாறாயின், "அவள்பால் நீ நுகர்ந்த அவள் நலத்தைத் தந்துவிட்டுச் செல்க," என்று கூறினாள் எனப் பாடி மகிழ்கின்றார்.

> "விட்டென விடுக்குநாள் வருக; அதுநீ
> நேர்ந்தனை யாயின், தந்தனை சென்மோ
> ..........................................
> தண்கடற் சேர்ப்ப! நீ உண்ட என் நலனே."
>
> (குறுந்: உ௩௬)

உலகில் உள்ள பொருள்களை உணர்தற்குத் துணை புரிவன கண், காது, வாய், மூக்கு, உடல் என்ற இவ் வைந்து உறுப்புக்களேயாம். இவ்வைந்தாலும் உணரலாகாப் பொருள்களும் உலகத்தில் உண்டு; அத்தகைய பொருள்களையும், உயர்ந்த பெரியார்கள், இப்புறக் கருவிகளுக்குப் புலனாக்குவர்; அன்பை இவ்வைந்தாலும் உணரல் இயலாது. அதைப்போலவே, காதல், காமம் என்பதையும் அறிதல் இயலாது; நம் புலவர் நரிவெரூஉத்தலையார், அக் காமத்தைக் கண்முன் கொணர்ந்து காட்டியுள்ளார்.

காதலன் பிரிந்தான்: இவன் பிரிவினை ஆற்றாத அவன் காதலி, கண் உறக்கமின்றிக் கலங்கிநிற்கின்றாள். அவ்வாறு கலங்கிநிற்கும் அந்நிலைதான் காதல் என்றுகூறி எவர்க்கும் எளிதில் புரியுமாறு காதலைக் காட்டிய அவர் கைவன்மையினைக் காணுங்கள் :

> "அதுகொல் தோழி! காம நோயே!
> ..........................................
> மெல்லம் புலம்பன் பிரிந்தெனப்
> பல்லிதழ் உண்கண் பாடொல் லாவே." (குறுந் : ரு)

---

# கக. நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனூர்

இவரது இயற்பெயர் புலப்படவில்லை; பழந்தமிழ் மக்கள், தங்கள் முதுமைப்பருவத்தில் கையில் தண்டு கொண்டு செல்வது வழக்கம். அறிவிற்சிறந்த பெரியோர்கள் தங்கள் பெருமைக்கறிகுறியாகவும் தண்டு கொண்டுசெல்வர். அத்தகைய தண்டுகள் வகையால் பலவாம். தொடித்தலை விழுத்தண்டு என்ற ஒரு தண்டினைப் புலவர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். நம் புலவர், கலைமான் கொம்பாலாகிய தண்டினைக் கொண்டிருந்தமையால் கலைக்கோட்டுத் தண்டனூர் எனப்பட்டார் என்ப. இவர் பெயர்க்குமுன் நிகண்டன் என்ற அடைமொழி உண்மையால், இவர் தமிழில் நிகண்டொன்று செய்தவராவர் என்று கொள்ளலாம். நூல்கள் பெயர்பெறு மாற்றினைக் கூறும், "முதல்நூல், கருத்தன்" என்ற நன்னூற் சூத்திரத்தில், "இடுகுறியாற் பெயர் பெற்றன, நிகண்டு, கலைக்கோட்டுத்தண்டு முதலியன" என விருத்தியுரைகாரர் கூறுவதை நோக்கின், கலைக்கோட்டுத் தண்டு என்பது கைத்தண்டினைக் குறிப்பது அன்று, அப்பெயருடையதொரு நிகண்டு நூலைக் குறிப்பதாம் என்று கொள்ளவேண்டியுளது. இதனால் நம்புலவர், கலைக்கோட்டுத் தண்டு என்ற பெயருடையதோர் நிகண்டு நூல் செய்த தமிழ்ப்பேராசிரியராவர் என்பது புலனாம்.

நற்குடி மகளிர், உயிரினும் சிறந்தது நாண் எனக் கொள்வர் ஆதலின், தலைவன் பிரிந்தான எனக் கலங்கும் தம் நிலைகண்டு ஊர்ப் பெண்கள் அலர் தூற்றுவர். அதனால் தம் நாண் அழியும் ஆதலின், அவர் தூற்றுமாறு வருந்துவதினும், தம் வருத்தத்தை மறைத்து வாழ்தலைக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு மறைப்பதால் தம் உயிர் போவதாயினும் கவலுதல் கூடாது என்றுரைக்கும் தலைமகள் ஒருத்தியின் உயர்ந்த பண்பாட்டினைப் பாடிப் பாராட்டியுள்ளார் புலவர்.

"ஆருயிர் அழிவது ஆயினும், நேரிழை!
காத்தல் வேண்டுமால் மற்றே; பரப்புநீர்த்
தண்ணம் துறைவன் நாண
நண்ணார் தூற்றம் பழிதான் உண்டே." (நற்: கஅஉ)

## கஉ. நெடும்பல்லியத்தனர்

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என, இசையினையும், நாடகத்தையும் மொழியோடு சேர்த்துப் போற்றி வளர்த்தனர் தமிழர்; இசை, வாய்ப்பாட்டோடு நிற்பது என்று கருதினாரல்லர்; வாய்ப்பாட்டிற்குத் துணையாகப் பல்வேறு இசைக்கருவிகளைக் கண்டு இசையினை வளர்த்தனர்; அவ்விசைக் கருவிகளின் பெயரையும், இயல்பையும் எடுத்துக் கூறுவது இயலாது; முழவு போன்ற தோற்கருவிகளும், குழல்போன்ற துளைக்கருவிகளும், யாழ்போன்ற நரப்புக்கருவிகளும், தமிழகத்தில் தோன்றி இசையெழுப்பி இன்பம் ஊட்டி வந்தன; புரவலர்களைத் தேடிச்செல்லும் பாணர்கள், பல்வேறு இசைக்கருவிகளையும் ஒரு பையில் இட்டுக்கட்டி எடுத்துச் செல்வர்; அவ்வாறு பாணன் ஒருவன் யாழ், சிறுபறை, ஒருகண் மாக்கிணையாய பல்வேறு இயங்களை எடுத்துச்சென்றான் எனப் பாடிய சிறப்பால், இப்புலவர் நெடும்பல்லியத்தனார் எனப் பெயர்பெற்றார்.

நெடும்பல்லியத்தனார், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடியுள்ளார். பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பஃறுளி யாறும், குமரிக்கோடும் கடலால் கொள்ளப்படுதற்கு முற்பட்ட காலத்தே வாழ்ந்தவனாதலின், அவனைப் பாடிய இவரும், அக்கடல்கோளுக்கு முற்பட்டவராவர். வறுமையின் கொடுமையால், மிக்க நீரிட்டு அட்ட புற்கை உணவுண்டு வாழ்ந்த புலவர்கள், முதுகுடுமிப் பெருவழுதியைக் கண்டு தம் வறுமை நீங்கி நல்லுணவு உண்டு மகிழ்வர், என்று கூறி வழுதியின் வண்மையினை விளக்கியுள்ளார் புலவர்:

> "நல்யாழ், ஆகுளி, பதலையொடு சுருக்கிச்
> செல்லா மோதில் சில்வளை விறலி
> ..................................
> குடுமிக் கோமாற் கண்டு
> நெடுநீர்ப் புற்கை நீத்தனம் வரற்கே." (புறம் : சுச)

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி போர்வெறிமிக்க பேரரசனவன்; அவனைப் பாடிய புலவர், அவனை அவன், பகைவர் நாட்டகத்தே நடந்த போர்க்களத்திலேயே கண்டு, ஆங்குப் போர்க்களத்தே வீழ்ந்து கிடக்கும் பிணங்களின் பசூனை உண்ணவேண்டிப் பறவைத் திரள் ஒன்று கூடுமாறு பகைவர்தம் யானைப்படைகளைப் பாழ்செய்த அவன் பேராண்மையினையே பாராட்டியுள்ளமையுணர்க.

"களிற்றுக் கணம் பொருத கண்ணகன் பறந்தலை
விசும்பாடு எருவை பசுந்தடி தடுப்பப்
பகைப்புலம் மரீஇய தகைப்பெரும் சிறப்பின்
குடுமிக் கோமான்" (புறம்: ௬௪.)

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனுக்குத் தூதாய் வந்த தோழியை நோக்கி, "தலைவர், மலைகள் பலவற்றை இடையிலே கொண்ட மிகச் சேயநாட்டில் வாழ்பவரும் அல்லர்; தம்மூர் மரங்கள் நமக்குத் தோன்றமாட்டாத சேய்மைக்கண் உள்ள ஊரில் வாழ்பவரும் அல்லர்; நாம் நாள்தோறும் காணுமாறு, அழைத்தால் உடனே வரலாகும் அண்மையிடத்தே இருந்தும், முனிவர் பெருமக்களைக் கண்டார் அவர் தூய்மையினையும், தம் தூய்மையின்மையினையும் எண்ணி அஞ்சி விலகி ஒழுகுவதைப்போல், என்னை அணுகி வாழ அஞ்சி விலகி வாழுகின்றார்; இத்தகையாராய தலைவரிடத்தில், பண்டொருகால் யானும் அன்புகொண்டிருந்தேன்; ஆனால், அது இப்போது இல்லாமற் போய்விட்டது," என்று தலைமகளொருத்தி கூறினாளாகப் பாடியுள்ளார்:

"மலையிடை யிட்ட நாட்டரும் அல்லர்;
மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்;
கண்ணிற் காண நண்ணுவழி இருந்தும்,
கடவுள் நண்ணிய பாலோர் போல
ஒரீஇ ஒழுகும் என்னைக்குப்
பரியலென் மன்யான்; பண்டொரு காலே."
(குறுந்: ௨0௩.)

நாடுகள் மலையிடை யிட்டுக்கிடக்கும் என்றும், ஊர்கள், மரங்களை இடையிட்டுக் கிடக்கும் என்றும் கூறியது, புலவர் தம் நிலநூல் அறிவினைப் புலப்படுத்துவதாம். தலைவன், முனிவரைக் கண்டாரைப்போல் விலகி வாழ்கிறான் என்று கூறிய உவமையால், தலைமகள் ஒழுக்கத்தால் தூய்மையுற்று வாழ்கிறாள்; தலைவன் ஒழுக்கத்தின் இழுக்கித் தவறுடையனாய் வாழ்கிறான் என்று கூறியது அவர் புலமை நலத்தினைப் புலப்படுத்தி நிற்றல் காண்க.

களவுக்காலத்தில், மலையிடையிட்ட நாட்டினின்றும் மரந்தலை தோன்றா ஊர்களினின்றும், மிகச்சேய வழி கடந்துவந்து அன்புகாட்டிய தலைவன், மணந்து ஒரு மனையில் வாழ்கின்ற இக்காலத்தில் மலையிடையிட்ட நாட்டினர் போலவும், மரந்தலை தோன்றா ஊரினர்போலவும் விலகி வாழ்கின்றான் எனில், அவனுக்கு என்மாட்டு அன்பில்லையென்றன்றோ கொள்ளுதல் வேண்டும்? அத்தகையான்மாட்டு யான்மட்டும் அன்புகொண்டிருத்தல் வேண்டும் என்பது அறிவுடைமையாமோ? என்று கூறும் தலைமகளின் அறிவுடைமையினை என்னென்பது!

இத்துணைப் பரந்த பொருள்கள் எல்லாம் ஒருங்கே தோன்றச் சுருங்கிய வாய்பாட்டான் பாடிய பல்லியத்தனாரின் புலமையின் சிறப்பைப் போற்றுவோமாக.

இவர் பாக்களில் காணப்படும், "தொழுது காண் பிறை," "கடவுள் நண்ணிய பாலோர்" போன்ற சொற்றொடர்கள், இவர் கடவுளன்பைப் புலப்படுத்தி நிற்றலும் காண்க.

## கங. நெட்டிமையார்

மக்கள் உறுப்புக்களுள் அவர்க்குச் சிறப்பளித்து நிற்பன கண்கள்; அக்கண்களுக்கு அழகும், பாதுகாப்பும் அளித்து நிற்பன அக்கண்களின் இமைகள்; அத்தகைய இமைகள் எல்லோர்க்கும் அமைவதேபோல் அமையாது, சற்று நீண்டு அமைந்துவிட்டமையால் இவர் நெட்டிமையார் என அழைக்கப்பெற்றார்.

கண்ணிமை நீண்டிருத்தல் அழகன்மையின், அதனால் ஒருவர் பெயர் படைத்துக்கொள்வர் என்பது மக்கள் இயல்பன்று என்று மேற்கூறிய காரணத்தை மறுத்து விட்டு, "நெடுந்தொலைவிலுள்ள பொருளைக் கூர்ந்து நோக்கி யறியும் கண்ணை, நெட்டிமையெனச் சிறப்பித்துரைத்த நயங் கருதி, இவர்க்கு இப்பெயர் உண்டாயிற்று; இவர் பஃறுளியாறு கடல்கோட்படு முன்பு இருந்தவராதலின், கடல்கோட்குப் பின்னர்த் தோன்றிய சங்ககாலத்தில் அப் பாட்டு இறந்துபோயிற்றுதல் வேண்டும்," என்று கூறி, இவர் பெயர்க்கு வேறு காரணம் காட்டுவாரும் உளர். ஐயூர் முடவனார், நரிவெரூஉத்தலையார், பரூஉமோவாய்ப்பதுமன், பெருந்தோள் சாத்தன் என இயற்கையொடு முரணிய உறுப்புநலன் பெற்றாரை, அவற்றால் பெயரிட்டு அழைத் தலை இகழ்ச்சிக்குரியதாகக் கொள்ளாது, அப்பெயரிட்டே அழைத்துள்ளனர் ஆதலாலும், அவர் பாடிய பாக்களுள் பல அழிந்திருத்தலும் கூடும்; அவ்வாறு அழிந்துபோன பாக்களுள், நெடுந்தொலைவிலுள்ள பொருளைக் கூர்ந்து நோக்கியறியும் கண்ணை நெட்டிமையெனச் சிறப்பித்து உரைத்திருத்தலும் கூடும்; அதனால், அவர்க்கு இப்பெயர் உண்டாயிருத்தலும் கூடும் என்றெல்லாம் கூறுவது ஏற் புடைய வாதங்களாகா ஆதலாலும், அவர் கூறும் காரணம் அத்துணைப் பொருத்தம் உடையதன்று;

புலவர் நெட்டிமையார், தாம் பாராட்டிய பாண்டிய வேந்தனைப் பஃறுளியாற்று மணலினும் பல்லாண்டு வாழ்க என வாழ்த்தியுள்ளமையால், இவரும், இவர் பாராட்டிய பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியும், 'பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்' வதற்கு முற்பட்டதாய மிகப் பழைய காலத்தே வாழ்ந்தவராவர் என்பது புலனும்.

புலவர் நெட்டிமையார், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனுக்கு முற்பட்டோனும், 'பொலந் தார் மார்பின் நெடியோன்' என மாங்குடி மருதனுரால் மதுரைக்காஞ்சியுட் கூறப்பட்ட பாண்டியன் வழிவந் தோனுமாய பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய வேந்தனைப் பாராட்டிப் பாடியுள்ளார்.

போர் நிகழ் இடம் இது; போர் நிகழா இடம் இது என்ற வரையறையோ, எப்போது போர் தொடங்கப் பெறும்? போர் தொடங்குவார் யாவர்? என்ற விளக்கங் களோ இல்லாமல், தாம் விரும்பிய இடங்களிலெல்லாம் தாம் விரும்பியபோதெல்லாம் குண்டுகளை மழையெனப் பொழிந்து' போர்வீரர்களையேயன்றி, போர்க்களத்தைப் பார்த்தும் அறியாப் பச்சிளங் குழந்தைகள், பாவையர், தளர்நடைப் பெரியோர் ஆகியோரையும், வாயில்லா உயிர் களாம் அஃறிணைப் பொருள்களையும் ஒருங்கே கொன்று குவிக்கும் கொடுமை நிறைந்ததன்று பழங்காலப் போர்.

பண்டைத் தமிழரசர்கள், தாம் எந்த நாட்டின்மீது போர்தொடுக்க விரும்புகின்றனரோ, அந்நாட்டு மக்க ளுக்கு, "போர் தொடுக்கப்போகும் நாள் இது; அதற்குள் போர்க்களம் போதற்கியலா அனைவரும் போக்கிடம் தேடிப் போய்விடுங்கள்," என, முன்கூட்டியே அறிவிப்பர். போரில் அழித்தலாகா உயிர்களாக ஆக்களையும், அவ் ஆக்களின் இயல்பினராய பார்ப்பனரையும், பெண்களையும் பிணியுற்ருரையும், ஆண் மக்களைப் பெருதார், களம் புகுந்து அழிந்துவிடின், அவர் வந்தகுடி வழியற்றுப்

போகும் ஆதலின், அவ்வாறு ஆண்மக்களைப் பெறாத ஆட வர்களையும் கருதினர் அக்கால அரசர்கள். இவர்களுள் ஆக்கள் ஒழிந்த ஏனையோர், அரசர் அறிவிப்பன அறிந்து அகன்று வாழ்வர். ஆக்கள் அவ்வாறு அகன்று வாழும் அறிவுடையன அன்று என அறிந்து அவற்றைத் தம் வீரரைவிட்டு வளைத்துக் கொணர்ந்து, காப்பமைந்த இடத்தே வைத்துக் காத்தலைச் செய்வர்.

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, மறனிழுக்கா மானம் உடையவன்; அறநெறி பிழையா மறம் உடையவன் என்பதை உணர்த்தவந்த புலவர், அக்கால அரசர்க ளிடையே காணப்பட்ட இப்போர்ப் பண்பினைத் தானும் அற நெறியாகக் கொண்டவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதி என்று கூறிப் பாராட்டினர். அவனைப் பாராட்டிய தோடு, பண்டைத் தமிழர் போர்நெறி இதுஎன இக்காலத் தார்க்கு உணர்த்தி, இவரிடையே இன்று காணப்பெறும் பழியொடு மிலைந்த போர்முறையினைப் பழித்துரைப்பதும் செய்துள்ளார்.

“ஆவும், ஆன்இயல் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும்; பிணியுடை யீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்அம்பு கடிவிடுதும்; நும்அரண் சேர்மின்! என
அறத்தாறு நுவலும் பூட்கை.” (புறம்: ௯)

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் போர்ப் பண்பினைப் பாராட்டிய புலவர் நெட்டிமையார், “வேந்தே! நின்னொடு பகைத்த மன்னர், நெடுந்துயர் உறுமாறு அவர் நாட்டைக் கவர்ந்தும், நின்னைப் பாடிய பாணரும், புலவரும் மகிழுமாறு அவர்க்குப் பொற்றாமரைப் பூவையும், யானை யொடு தேரையும் முறையே அளித்தும், இவ்வாறு ஒரு வர்க்குத் துன்பமும், ஒருவர்க்கு இன்பமும் அளித்தல் அறநெறி நிற்கும் நின்னொத்த அரசர்க்கு அறமாமோ?”

என அவனை இகழ்வார்போல் பாடி அவன் கொடையினையும் கொற்றத்தினையும் ஒருங்கே புகழ்வாராயினர்:

"பாணர் தாமரை மலையவும், புலவர்
பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்,
அறனோ? மற்றிது? விறன்மாண் குடுமி!
இன்னா வாகப் பிறர்மண் கொண்டு
இனிய செய்தி நின்ஆர்வலர் முகத்தே." (புறம்: கஉ)

வழுதியின் வீரமும், கொடையும் விளங்கப் பாடிய புலவர், "வேந்தே! பகைவர் தேயம் பாழ்படச் செய்யும் நின் பேராற்றலை அறிந்தும் கூரிய படைக்கலம் பல கொண்ட நின் தூசிப்படையினை அழித்துப் பெறும் வெற்றியிற்கொண்ட ஆசையுடையராய் வந்து, அவ்வாசை நிறைவேறப்பெறாமல் அழிந்து மானம் இழந்து வாழ்ந்த நின் பகைவர்களின் எண்ணிக்கை அதிகமோ? அல்லது வேத நெறி பிறழாது நின்று, நீ ஆற்றிய வேள்விகளின் எண்ணிக்கை அதிகமோ? இவற்றுள் எதுவோ அதிகம்?" என்று வினவி, அவன் வெற்றிச்சிறப்பும், வேதநெறி நின்று வேள்வி போற்றும் ஒழுக்கவுயர்வும் ஒருங்கே தோன்றப் பாராட்டினார்:

"ஒண்படைக் கடுந்தார் முன்புதலைக் கொண்மார்,
நசைதர வந்தோர், நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல்? புரையில்,
நற்பனுவல் நால்வே தத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண் ணுறை
நெய்ம்மலி ஆவுதி பொங்கப், பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்?
யாபல கொல்லோ? பெரும." (புறம்: கரு)

## கச. நெய்தல் தத்தனார்

இவர் தந்தையார் கொடியூரில் பிறந்து, அந்நாட்டு அரசரால், "கிழார்" எனச் சிறப்பிக்கப் பெற்றவராதலின், இவர் கொடியூர் கிழார் மகனார் நெய்தல் தத்தனார் எனவும் அழைக்கப் பெறுவர்.

பெருங் கடுங்கோ, பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடியதைப் போலவும், இளங் கடுங்கோ, மருதத் திணையைச் சிறப்பித்துப் பாடியதுபோலவும், தத்தனார் என்ற இயற்பெயருடைய நம் புலவர் நெய்தல் திணையைப் பாடியுள்ளார். நெய்தல் திணையாவது, தலைவன் பிரிந்தவழித், துயர் தாங்கமாட்டாத் தலைமகள், கழியும் கானலும் கண்டு இரங்குதலாகும்.

கடல்திரை கொணர்ந்து கொழித்த, பால்போலும் தூய மணல்மேட்டில், பகற்காலத்தே, கூடியிருந்து ஆடி மகிழ்ந்த பரதவர் மகளிரெல்லாம், தம் ஆடல்தொழில் மறந்து, வீட்டகத்தே உறங்கிக் கிடப்பதால், கடற்றுறை அழகிழந்து காணப்படுகிறது; தம் வலைகளால் வாரிக் கொணர்ந்த பாவைபோன்ற இறு மீன்களைக், காயவிட்டுப் பறவைகளை ஓட்டி வாழ்ந்தவரும், பகல் கழிந்துவிட்டமையால் தம் தொழில் ஒழிந்தமையால், அவ் விடங்களும் அழகிழந்துவிட்டன; பெரிய கொம்புகளை உடைய சுறு மீன்களைப் பிடித்துவிட்ட மகிழ்ச்சியால், பின்னும் வேட்டைமேல் செல்லும் விருப்பமின்றிப், பரதவர்கள் வீட்டிலேயே தங்கி விட்டமையால், அவரைக் காணலாகாக் கடற்கரையும் கவினிழந்துவிட்டது என இராக்காலத்துக் கடற்கரைக் காட்சியினைப் புலவர் நன்கு விளக்கிக் கூறியுள்ளார்:

"படுதிரை கொழீஇய பால்நிற எக்கர்த்
தொடியோர் மடிந்தெனத் துறைபுலம் பின்றே;
முடிவலை முகந்த முடங்கிறாப் பாவைப்
படுபுள் ஓப்பலின் பகன்மாய்ந் தன்றே;
கோட்டுமீன் எறிந்த உவகையர், வேட்டம் மடிந்து
எமரும் அல்கினர்." (நற்: சுக)

# ௧௫. நோய் பாடியார்

பாலையைப் பாடி, பாலை பாடிய பெருங் கடுங்கோ எனவும், மருதத்தைப் பாடி, மருதம் பாடிய இளங் கடுங்கோ எனவும், வெறியயர்தலைப் பாடி, வெறிபாடிய காமக்கணி எனவும், காக்கைவரப் பாடி, காக்கை பாடினி நச்செள்ளையார் எனவும் பெயர் பெற்றாரைப்போன்று, இவரும், நோயைப் பாடி, நோய் பாடியார் எனப் பெயர் பெற்றார்; நோயைப் பாடிய இவர், யாருடைய நோயைப் பாடினார்? அவர் பாடிய நோய் எது என்பன அறிதற் கில்லை.

நோய் பாடியார், நடுகல்நிலையினை நன்கு பாடியுள்ளார். நிரைமீட்கச் செல்லும் வீரர், அரத்தினால் அராவப் பட்டுக் கூரிய முனையினையுடைய அம்புகளையும், குறி பார்த்துப் பழகியதாலாய இடுக்கிய பார்வையினையும் உடையராய், இராக்காலத்தே விரைந்துசென்று, வெட்சி யாருடன் போரிட்டு வென்று, வீரப்புண் பெற்று இறந்தா ராக, அவ்வாறு இறந்த வீரர்களின் பெயரினையும், பெரு மையினையும் பொறித்த கற்களை நெறிதோறும் நட்டு, மயிர்ப்பீலி சூட்டி, வழிபடும் பழந்தமிழர் முறையினை எடுத் துக் கூறியுள்ளார்:

"அரம் போழ் நுதிய வாளி அம்பின்
நிரம்பா நோக்கின், நிரையங் கொண்மார்
நெல்லி நீளிடை எல்லி மண்டி
நல்லயர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்." (அகம்: ௬௭)

## கசு. பரூஉமோவாய்ப் பதுமன்

பதுமன் என்ற இயற்பெயருடைய இப் புலவர், வேண்டிய அளவிற்கு மேலும் பருத்துக் காணப்படும் மோவாய் உடைமையால், பரூஉமோவாய்ப் பதுமன் என்று பெயர் பெற்றுள்ளார். மனைத் தக்க மாண்புடையாள் ஒருத்தியை மனைவியாகப் பெறும் பேறு பெற்றுளொருவன், இவ்வுலகில் பெறாத பேறேயில்லை; அவனைப்போல் சிந்தை நிறைந்த செல்வத்தைப் பெற்றோன் வேறு ஒருவனும் இரான்; அத்தகையாளை மனைவியாகப் பெற்றவனுக்கு, இந் நிலவுலகமே யன்றி, எல்லை யில்லதோர் இன்பம் நிறைந்த இடம் எனப் போற்றப்பெறும் தேவருலகமும் இன்பம் தருவனவாகத் தோன்றாது. பெரிய கடலால் சூழப்பெற்று, அரிய செல்வத்தால் நிறைந்த இம் மண்ணுலக இன்பமும், தெவிட்டாத தெள்ளமுதம் அளிக்கும் விண்ணுலக இன்பமும், அவன் அவளோடு வாழ்ந்து ஒருநாள் பெறும் இன்பத்திற்கு ஈடாகா. இதனாலன்றோ, "இல்லது என்? இல்லவள் மாண்பானால்," என்று கேட்கிறார் வள்ளுவப் பெருந்தகையார். இந்த அரிய உண்மைகளை உணர்ந்த நம் புலவர், பரூஉமோவாய்ப் பதுமனார், பொருள் வேண்டிப் பிரிய எண்ணும் தம் நெஞ்சை நோக்கி, "நெஞ்சே! நம் மனைவியோடிருந்து மகிழ்ந்து பெறும் இன்பத்திற்கு, இவ்வுலக இன்பமோ, அவ்வுலக இன்பமோ ஈடாகாது என்றால், இவ்வுலகத்தில் எங்கோவுள்ள சிறு பொருளுக்காக இவளைப் பிரிந்துசெல்ல எண்ணுகின்றனையே; என்னே நின் பேதைமை," என்று ஒரு தலைவன் கூறுவதாகப் பாடியுள்ளார்:

"விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்,
அரிதுபெறு சிறப்பின் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கின் சீர்சா லாவே;
..............................குறு மகள்
தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே."

(குறுந்: கoக)

## கஎ. பாரதம் பாடிய பெருந்தேவனார்

தேவனார் என்ற தெய்வப் பெயருடையராய இவர் தாம் பெற்றுள்ள அறிவின் பெருமைகண்டு, அக்காலமக்கள் பாராட்டி அளித்த பெருமை என்ற சிறப்பினையும் ஏற்றுக்கொண்டு பெருந் தேவனார் எனப்பட்டார். சங்க காலத்தே பெருந்தேவனார் என்ற பெயருடையார் பலர் இருத்தலின் அவரின் பிரித்து வேறுபாடு காண்டற்குப் பாரதம் பாடிய என அவர் செய்த அருஞ்செயலை, அவர் பெயரோடு கூட்டி, பாரதம் பாடிய பெருந் தேவனார் என அழைத்தனர். வடமொழி வியாச பாரதத்தை வெண்பாவும், அகவலும், உரைநடையும் விரவிவரத் தமிழில் பாடியுள்ளார். இவர் பாடிய பாரதம், முழு நூலாக இப்போது கிடைத்திலது; தொல்காப்பியத்தில், ஆசிரியர் நச்சினார்க்கினியர் எடுத்தாளும் ஒரு சில செய்யுட்கள் தவிர, நூல் முழுதும் அழிந்துவிட்டது என அறிஞர்கள் கூறுகின்றனர். இவர் தொண்டைநாட்டைச் சேர்ந்தவர் என, "பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம் பதி காண், மாருதம் பூவின் மணம் வீசிடும் தொண்டைமண்டலமே," என்று வரும் தொண்டை மண்டல சதகச் செய்யுள் கூறுகிறது. இனி, பாரதக் கதையினை முழுதும் வெண்பாவினால் பாடிக் காட்டும் பாரத வெண்பா என்ற நூல் ஒன்று அச்சாகி வெளிவந்துளது; இப் பாரத வெண்பாவின் ஆசிரியர், சங்ககாலப் பாரதம் பாடிய பெருந் தேவனாரே என்று கூறுவர் சிலர். பாரத வெண்பாவில், விநாயக வணக்கமும், தெள்ளாற்றில் வெற்றிகொண்ட நந்திவர்ம பல்லவனும் குறிப்பிடப்பட்டுள்ளனர் ஆதலின், இந்நூல் பல்லவர் காலத்திற்குப் பிற்பட்ட நூல் எனப் புலப்படுவதால், சங்ககாலப் புலவராகிய பாரதம் பாடிய பெருந் தேவனார், இந் நூலின் ஆசிரியர் ஆகார் என்று கொள்க.

பாரதம் பாடிய பெருந்தேவனார், ஆண்டவன்பால் நிறைந்த அன்புடையவராவர்; இவர், அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை ஆகிய ஐந்து நூல்களுக்கும் கடவுள் வாழ்த்துச் செய்யுள் பாடிச் சேர்த்துள்ளார்; இக் கடவுள்வாழ்த்துச் செய்யுட்கள் ஐந்திலும், அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு ஆகிய மூன்றிலும் வந்துள்ள செய்யுட்கள் சிவபெருமானைக் குறித்த வாழ்த்துக்களாகவும், நற்றிணையில் வந்துளது திருமாலைக் குறித்த வாழ்த்தாகவும், குறுந்தொகைக்கண் வந்திருப்பது முருகன் வாழ்த்தாகவும் உளது.

சிவனைப்பற்றிக் கூறுங்கால், அவன் அணியும் பூ கொன்றை; ஊர்தியும், கொடியும் ஏறு; கண்டம் நீலம்; ஒருபாதி பெண்; மார்பில் பூணூல்; நெற்றியில் இமையா நாட்டம்; கையில் கணிச்சியும், மழுவும் முத்தலைச்சூலமும்; செந்நிறச் சடையில் வெண்ணிறத் திங்கள்; ஆடை புலித்தோல் என இன்று சிவனுக்குக் கூறும் வைதீக வடிவங்களை விடாது கொடுத்துக் கூறியுள்ளார்.

திருமாலைப்பற்றிக் கூறுங்கால், அவன் திகிரி உடையான்; அவனுக்கு நிலமே அடிகள்; கடலே ஆடை; விசும்பே மெய்; திசைகளே கைகள்; ஞாயிறும் திங்களும் கண்கள் என்று கூறியுள்ளார்.

முருகனைப்பற்றிக் கூறுங்கால், தாமரைபோலும் அடியுடையான்; பவழம்போலும் நிறமுடையான்; குன்றிமணியின் நிறங்கொண்ட ஆடையுடையான்; மலைபிளந்த வேலுடையான்; கோழிக் கொடியுடையான் என்று கூறியுள்ளார்.

அவற்றுள் வகைக்கு ஒன்றைக் கண்டு வழிபடுவோமாக!

"கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன், மாலையன், மலைந்த கண்ணியன்;
மார்பி னஃதே மையில் நுண்ஞாண்;
நுதலது இமையா நாட்டம்; இகல்அட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே; மூவாய்
வேலும் உண்டுஅத் தோலா தோற்கே;
ஊர்ந்தது ஏறே; சேர்ந்தோள் உமையே;
செவ்வான் அன்ன மேனி; அவ்வான்
இலங்குபிறை யன்ன விலங்குவால் வைஎயிற்று;
எரியகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை;
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி;
மூவா அமரரும், முனிவரும், பிறரும்
யாவரும் அறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமான் உரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற்று அந்தணன்
தாவில் தாள்நிழல் தவிர்ந்தன்றால் உலகே."

(அகநானூறு க. வா.)

"மாநிலம் சேவடி யாகத், தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக,
விசும்பு மெய்யாகத், திசைகை யாகப்,
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக,
இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப,
தீதற விளங்கிய திகிரி யோனே."

(நற்றிணை க)

"தாமரை புரையும் காமர் சேவடிப்,
பவழத் தன்ன மேனித், திகழ்ஒளிக்

குன்றி ஏய்க்கும் உடுக்கைக், குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்,
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே.'' (குறுந் : க)

## கஅ. பாலைக்கோதமனார்

இவர் பெயர் கௌதமனார் எனவும், பாலைக்கௌதம னார் எனவும் கோதமனார் எனவும் வழங்கப்பெறும். இவர், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தம்பி பல்யானைச் செல் கெழுகுட்டுவனைப் பதிற்றுப்பத்து மூன்றாம் பத்தால் பாடி, அவனால் வீடுபேறடைந்தார் என்ப. இதனைப் "பாடிப் பெற்ற பரிசில்; 'நீர் வேண்டியது கொண்மின்' என, 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல்வேண்டும்' என, பார்ப் பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி வேட் பிக்க, பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும் பார்ப்பனி யையும் காணாராயினார்" எனக் கூறும் அப்பத்தின் பதிகத் தாலும், "தொடுத்த பெரும்புலவன் சொற்குறை தீர, அடுத்துத்தா என்றற்கு வாழியரோ" என்ற முன்றுறை யரையனார் பாடிய பழமொழிச் செய்யுளாலும் (316), "சேரன்குட்டுவன் புகழைச் செய்யுளாகத் தொடுத்த கௌதமன் என்னும் பெரிய புலவன், 'யானும் என் சுற்ற மும் துறக்கம் புகும்படி பொருந்திய அறங்களை முடித்துத் துறக்கத்தைத் தா' என்றாற்கு, அவன் சொற்குறை தீர்ப்பான்பொருட்டு உவந்து யாகங்களை நடத்தி, 'நீ வேண் டிய துறக்கத்தின்கண் நீடுவாழ்வாயக' என்றான்; ஆதலால் புனைந்து இப்பெற்றியார் என்று புகழவேண்டுவதில்லை; இயற்கையாகக் கொடுக்கும் சீலத்தார் தம் அளவினாற் கொடுக்கவல்லதனைத் தாமே அறிந்து கொடுப்பார்" என வரும் அப்பழமொழிச் செய்யுளின் பழைய உரையாலும், "பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே" என்ற தொல்காப் பியப் புறத்திணையியல் சூத்திரத்தில் (25) "இமயவரம்பன் தம்பி பல்யானைச்செல்கெழு குட்டுவனைப் பாலைக்கௌதம னார் துறக்கம் வேண்டினாரென்பது குறிப்பு வகையாற் கொள்ள வைத்தலின், இது வஞ்சிப் பொருள்வந்த பாடா ணாயிற்று" என எழுதும் நச்சினார்க்கினியர் உரையாலும், "நான்மறையாளன் செய்யுட்கொண்டு, மேனிலை உலகம் விடுத்தோனாயினும்" எனவரும் சிலப்பதிகார அடிகளாலும்

(28 : 137 - 8) உணரலாகும். பாலைக்கோதமனார் சுவர்க்கம் பெற்ற வரலாறு, மலைநாட்டில் இக்காலத்திலும் கர்ண பரம்பரையில் வழங்குகிறது என்று கூறுகின்றனர்.

பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தைப் பாடி, இமய வரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாடிய பாலைக்கோதமனார் வேறு; புறநானூற்றில், "விழுக்கடிப் பறைந்த" என்ற செய்யுளைப் பாடிய கோதமனார் வேறு; புறநானூற்றுப்பாட்டால் பாராட்டப்பெற்றோன், பாண்டவர் தலைவனாகிய தருமபுத்திரனாவன் என்று கூறுவர் சிலர். புறநானூற்றுச் செய்யுளில் பாட்டுடைத்தலைவனை "அறவோன் மகனே" என விளித்துப் பாராட்டியிருக்கும் தொடர், அறக்கடவுள் மகன் எனக் கருதப்படும் தருமபுத்திரனைக் குறிக்கும் எனல் பின்வந்தோர் செய்த பிழையேயன்றி, அஃது உண்மையன்று ஆதலாலும், பல ஏடுகளில், அச் செய்யுளின் ஈற்றில் "கோதமனார் பாடியது" என்றுளதேயன்றி, "தருமபுத்திரனைக் கோதமனார் பாடியது" என்று இல்லை யாதலாலும், மற்றும் சில ஏடுகளில், பாட்டைப் பாடியவர் பெயர், "கௌதமனார்" என்று இராமல், "பாலைக் கௌதமனார்" என்றே உளது ஆதலாலும், புறநானூற்றுச் செய்யுளால் பாராட்டப்பெறுவோனும், பல்யானைச் செல்கெழுகுட்டுவனே; பாண்டவர் தலைவன் தருமபுத்திரன் அல்லன் என்றும், பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தைப் பாடிய பாலைக்கோதமனாரும்; புறநானூற்றுச் செய்யுளைப் பாடிய கௌதமனாரும் வேறு வேறு அல்லர்; ஒருவரே என்றும் கொள்க.

பாலைக்கோதமனார் பாராட்டைப் பெற்றோன் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் ஒருவனே. பாரதப்போரில் இருபெரும் படைக்கும் போர் முடியுங்காறும் உணவளித்துப் புகழ்பெற்ற பெருஞ்சோற்றுதியன் சேரலாதன் இவன் தந்தை; இவன் தாய், வெளியன் வேண்மாள் மகள் நல்லினி என்பவளாவள்; இமயத்தே விற்பொறித்து, இமயவரம்பன் எனப் புகழ்பெற்ற நெடுஞ்சேரலாதனைத் தன் முன்னோனாகப் பெற்ற பெறற்கரும் பேறுடையவன்.

பல்யானைச் செல்கெழு குட்டுவன் போர்க்களம் பல வென்றவனாவன்; கடன்மலை நாட்டில் உம்பற்காடு என்றொரு சிறு நாடு இருந்தது; அது வேழக்காடு எனவும் வழங்கப் பெறும்; யானைகளை மிகுதியாகக் கொண்டது; ஐந்நூறு சிற்றூர்களைக் கொண்டதொரு சிறுநாடு; தன்னைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார்க்கு இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனால் பிரமதாயமாக வழங்கப்பெற்ற வளம் நிறைந்தது; செங்குட்டுவனிடம் இவ்வும்பற்காட்டின் வருவாயினைப் பாணர் பரிசிலாகப் பின்னொரு காலத்தே பெற்றார். உம்பற்காடு வேழம்மிகுந்து வளம் கொழிக்கும் நாடாதல் அறிந்து, அங்கே தன் அரசு நிலவச் செய்தான் பல்யானைச் செல்கெழு குட்டுவன்.

தன் பகைவர்க்கு அரண் அளிக்கும் அகப்பா என்றோர் அரண் இருப்பதை அறிந்தான் குட்டுவன்; அகப்பா அரிய அரண் பல அமைந்தது; இருதிறப் படைகளும் எதிர்த்துப் போரிடுதற்கு வேண்டிய பரந்தகன்ற சென்டு வெளியினைக் கொண்டது; கணையமரம் செறிக்கப்பெற்ற வாயில்களையுடையது; ஐயவித்துலாம்போன்ற அரிய இயந்திரப் படைகளைக் கொண்டது; காவற்காட்டினையும், ஆழ்ந்த கிடங்கினையும், நெடிய மதில்களையும் உடையது, இதனால் பகைவர் அணுகுதற்கியலா அருமையினையுடையது; அகப்பா அரணின் அருமையினையும், அது பகைவர்க்குப் பாதுகாப்பளித்தலையும் அறிந்த பல்யானைச் செல்கெழு குட்டுவன் நாற்படையுடன் சென்று அழித்துக் கைக்கொண்டான். இவ்வெற்றிச்சிறப்பினைப் பாலைக்கோதமனாரும் பாராட்டியுள்ளார்:

> "துஞ்சுமரம் துவன்றிய மலரகன் பறந்தலை,
> ஓங்குநிலை வாயில், தூங்குபு தகைத்த
> வில்விசை மாட்டிய விழுச்சீர் ஐயவிக்,
> கடிமிளைக், குண்டு கிடங்கின்,
> நெடுமதில், நிரைப்பதணத்து
> அண்ணலம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த
> பொன்புனை உழிஞை வெல்போர்க் குட்டுவ!"
>
> (பதிற்று: உ௨)

பழைய தமிழகத்தில், பூழியர், மழவர், கொங்கர் என்ற போர்வீர மரபினர் பலர் வாழ்ந்திருந்தனர்; பகைவர் நாடுகளை வென்று அழிப்பதே தொழிலாக விளங்கிய பல்யானைச் செல்கெழு குட்டுவன், தன்படையின் வன்மையை மிகுத்தற்பொருட்டு, அவ்வீரர்களை வென்று தன்படையில் தொழிலாற்றுமாறு செய்தான்; பூழியர் என்பார் பூழிநாட்டில் வாழ்ந்திருந்த ஆயர் ஆவர்; இவர்கள் மிகப் பெரிய ஆனிரைகளையும், பலப்பல யானைகளையும் கொண்டிருந்தனர்; செருப்பு என்ற பெயருடையதொரு மலையினையும் உரிமையுடையதாகப் பெற்றிருந்தனர்; இவர்கள் முல்லைப்பூவாலாய கண்ணியணிந்துகொண்டு, தம் ஆனிரைகளைப் புல்நிறைந்த பரந்த வெளிகளில் மேய விட்டுவிட்டுக் காட்டில் வீழ்ந்து கிடக்கும் மணிகளைப் பொறுக்கிக்கொண்டு வருவர்;

"முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்லா பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்
மிதியல் செருப்பின் பூழியர் கோவே!" (பதிற்று : உக)

பூழியர், மழவர், கொங்கர் ஆகிய மூவருள்ளும், மிகப் பேராற்றல் வாய்ந்தவர் மழவராவர்; மழவர் சிறந்த குதிரைப்படை யுடையவர்; விற்போரில் வல்லவர்; எத்துணை நெடிய நாடுகளுக்கும் விரைவில் சென்று வென்று மீளும் இயல்பினர்; அருள் உள்ளம் சிறிதும் இன்றி ஆறலைத்துத் துயர்விளைப்பர்; இம்மழவர்களால் அழிவுற்ற நாடுகள் பல. இதனால் இவர்களை வென்று இவர்கள் ஆற்றலை அடக்கிய அரசரும் பலராவர். மழவர் இன்னராதல் அறிந்த பல்யானைச் செல்கெழுகுட்டுவன், அவர்களைத் தன் துணைவராய்க் கொண்டான். அவர்கள் அவனுக்கு அவன் உடலைக்காக்கத் துணைபுரியும் கவசம்போலிருந்து துணை புரிந்தனர் என்று கூறுகிறார் புலவர் பாலைக்கோதமனார்:

"குவியற் கண்ணி மழவர் மெய்ம்மறை." (பதிற்று : உக)

கொங்கர் என்பவர் கொங்குநாட்டில் வாழ்ந்தவர்; கொங்கர் படைவன்மை வாய்ந்தவர்; "ஒளிறுவாட் கொங்கர்," "ஈர்ம்படைக் கொங்கர்," என இவர் படைவன்மை, புலவர் பாடும் புகழ்பெற்று விளங்குவது காண்க. கொங்கரும் பூழிநாட்டாரைப் போன்றே ஆனிரை வளர்ப்பவராவர். கொங்குநாடு சேரநாட்டைச் சேர்ந்துவிளங்கிய நாடாதலின், சேர வேந்தர் பலரும் அந்நாட்டில் தம் அரசு நிலவுவதைப் பெரிதும் விரும்பியுள்ளனர். கொங்கு நாட்டின் சிறப்பறிந்த சோழரும், பாண்டியரும் அந் நாட்டைக் கைப்பற்றப் பலமுறை முயன்றுள்ளனர். கொங்கு நாடு மேட்டுநிலமாதலின், ஆங்கு ஆனிரைகளுக்கு வேண்டும் நீர் கிடைத்தல் அரிது. கொங்கர்கள் கூரிய இரும்புக் கோடரிகளைக்கொண்டு நிலத்தை உடைத்து மிக ஆழமாய கிணறுகளைத் தோண்டி, அவற்றுள் நீண்ட கயிறுகளில் சிறிய நீர் முகவைகளைக் கட்டிவிட்டு முகந்த நீரைத் தம் ஆனிரைகளுக்கு அளிப்பர். ஆக்கள் மிக்கு ஆப்பயனால் சிறந்த கொங்குநாட்டைப் பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் கைக்கொண்டு ஆண்டிருந்தான்.

"பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
சிரறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தல்
கயிறுகுறு முகவை மூயின மொய்க்கும்
ஆகெழு கொங்கர் நாடகப் படுத்த
வேல்கெழு தானை வெருவரு தோன்றல்!" (பதிற்று: உஉ)

தமிழ் வேந்தர் மூவரும் தம்முள் ஒற்றுமைகொண்டு ஊராண்டு வாழ்வதற்கு மாருக, ஒருவரோடொருவர் பகை கொண்டு வாழ்ந்திருந்தனர். தம்மினும் ஆற்றல் மிக்க அரசன் ஒருவன் தோன்றிவிட்டால் அவனை அழிக்கச் செய்யும் போரில் மட்டும் ஏனைய இரு அரசர்களும் ஒன்று கூடுவதையும், தமக்குத் துணையாகப் பிற குறுநில மன்னர்களையும் இணைத்துக்கொள்வதையும் வழக்கமாகக்கொண்டு விளங்கினர். பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆற்றலும் ஆண்மையும் அறிந்து, அக்காலத்தே சோழநாட்டையும்

பாண்டிநாட்டையும் ஆண்டிருந்த இரு பெருவேந்தரும், சில வேளிர்களைத் துணை கொண்டுவந்து எதிர்த்தனர். குட்டுவன், அவர்களையும் வென்று அவர்களுக்கு அரணாக அமைந்திருந்த கடலரணையும், காட்டரணையும் மதியாது சென்று அழித்தான். அழிக்கலாகா அவன் ஆற்றலறிந்த அரசர்கள் அவனுக்கு அஞ்சி வாழலாயினர்.

"பணைகெழு வேந்தரும், வேளிரும் ஒன்றுமொழிந்து
கடலவும் காட்டவும் அரண்வலியார் நடுங்க."

(பதிற்று: ௩0)

சேரநாட்டில் அயிரை என்றோர் அழகிய மலையுண்டு. அம்மலைமீது கொற்றவை என்ற பெயருடைய வெற்றிக் கடவுள் உண்டு. சேரநாட்டுச் சிறந்த வீரர்கள் தம் விழுப் புண்ணிற் சொரியும் குருதிகலந்த சோற்றைப் படைத்து, இக் கொற்றவையை வழிபடுவதை வழக்கமாகக்கொண் டிருந்தனர். "குருதி விதிர்த்த குவவுச் சோற்றுக் குன்றோடு உருகெழு மரபின் அயிரை பரைஇ" என்றும், "சிறப்புடை குருதி புறப்படி னல்லது மடையெதிர் கொள்ளா அஞ்சுவரு மரபின் கடவுள் அயிரை" எனவும் புலவர்கள் இவ் அயிரைக் கடவுளைப் பாராட்டுவர். பல்யானைச் செல்கெழுகுட்டுவன் தானுமொரு பெருவீரனாதலின், அயிரை மலைசென்று ஆண்டுறை கொற்றவையைப் பணிந்து மகிழ்ந்தான். இம்மலையைப் பெயர்கூறிப் பாராட்டும் புலவர் பாலைக்கோதமனார், அயிரை என்ற பெயருடைய மீனும் இருப்பதை அறிந்து, இந்த அயிரை, நீர் ஓடும் இடங்களில் மேல்நோக்கிச் செல்லா அயிரை என்றும், செய்மைக்கண் இருந்தே நீருள் கிடக்கும் மீன்களை நுனித்து நோக்கும் ஆற்றல் வாய்ந்த கொக்கின் பார்வைகண்டு அஞ்சா அயிரை என்றும் கூறிய புலமைநலம் போற்றுதற்குரியதாம்:

"பல்பயம் தழீஇய பயங்கெழு நெடுங்கோட்டு
நீரறல் மருங்கு வழிப்படாஅப், பாகுடிப்
பார்வல் கொக்கின் பரிவேட்பு அஞ்சாச்
சீருடை தேஎத்த முனைகெட விலங்கிய
நேருயர் நெடுவரை அயிரைப் பொருந!" (பதிற்று: உக)

இறந்து வீடுபேறடைந்த தம் முன்னோர்க்குத் தாம் ஆற்றவேண்டிய தென்புலக் கடனாற்றிப் பிண்டம் ஈந்து பெருஞ்சோறு அளித்தலைச் சேரவேந்தர்கள் விடாது மேற்கொண்டிருந்தனர். பல்யானைச் செல்கெழுகுட்டுவன் தந்தையாகிய உதியஞ் சேரல் ஆற்றிய அவ் அருங்கடனைப் புலவர்களும் பாராட்டியுள்ளனர்:

"துறக்கம் எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு." (அகம்:உ௩௩)

தன் தந்தை உதியஞ்சேரலாதனைப் போன்றே பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் தன் முன்னோர் கடனாற்றிச் சோறளித்துச் சிறப்புற்றான்.

இவ்வாறு வாழ்வாங்கு வாழ்ந்து, புலவர் தம் பாராட்டுரையும் பெற்றுச் சிறப்புற்ற சேரவேந்தன் இறுதியில் நிறைந்த புகழும், உயர்ந்த கேள்வியும் உடைய நெடும்பாரதாயனார் என்ற பெயருடைய ஆசிரியன் அறிவுறுத்தத் துறவுள்ளம் மேற்கொண்டு நாட்டைவிட்டுக் காட்டுச் சென்று நோற்று வீடுபெற்றான். பல்யானைச் செல்கெழு குட்டுவன் இருபத்தைந்து ஆண்டுகள் ஆட்சியிலிருந்தான். அவனுடைய இவ்வரலாறுகளையெல்லாம் பதிற்றுப்பத்தின் ஈற்றில் உள்ள பதிகம் தொகுத்துக் கூறியுள்ளது.

"இமைய வரம்பன் தம்பி, அமைவர
உம்பற் காட்டைத் தன்கோல் நிறீஇ
அகப்பா எறிந்து பகல்தீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்,
கண்ணகன் வைப்பின் மண்வகுத்து ஈத்துக்
கருங்களிற்று யானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரும் ஒருபகல் ஆடி
அயிரை பரைஇ, ஆற்றல்சால் முன்போடு
ஒடுங்கா நல்லிசை, உயர்ந்த கேள்வி
நெடும்பாரதாயனார் முந்துறக், காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவன்." (பதிற்று : ௩ : பதி)

பாலைக் கோதமனார், தாம் பாடிய பல் யானைச் செல்கெழுகுட்டுவன் நாட்டு வளம் கண்டு மகிழ்கிறார்; அவனாலே அவன் பகைவர் நாட்டுவளம் பாழாதல் கண்டு கண்ணீர் விட்டுக் கலங்குகிறார். தேர் பல பரந்து ஓடுவதினாலேயே நிலங்கள் சேறாகிவிடுவதால், அந் நாட்டு உழவர் தம் நன்செய் நிலங்களை ஏர்கொண்டு உழுதலைச் செய்வதிலர்; கோரைக்கிழங்கு போன்றனவற்றைத் தேடி உண்பதற்காகப் பன்றிகள் கூட்டமாகச் சென்று புன்செய் நிலங்களை ஆழத்தோண்டி விடுவதால், அவ்விடங்களையும் அவர்கள் உழுவதிலர்; வீடுகளில், தயிர் கடையுங்கால் எழுப்பும் மத்து ஒலியே, செவிக்கினிமை பயந்து நிற்பதால், அந்நாட்டு மக்கள், தங்கள் மனைகளில் காலையில் பாணர் வந்து எழுப்பும் இசையினை விரும்புவதிலர்; சேர நாட்டின் கண்கொள்ளா இக் காட்சியினைக் கண்டு கண்டு மகிழ்கிறார் நம் புலவர்:

"தேஎர் பரந்த புலம் ஏஎர் பரவா;
களிறு ஆடிய புலம் நாஞ்சில் ஆடா;
மத்து உரறிய மனை இன்னியம் இமிழா." (பதிற்று: உ௬)

நீர்த் துறைக்கண் ஓங்கி வளர்ந்திருக்கும் மருதமரத்தின்மீது ஏறிநின்று, நெற்கதிர்களை உண்ணவரும் பறவை இனங்களை ஓட்டுவதற்காக, மகளிர் எழுப்பும் குரலிசைக்கு ஏற்ப, அவ் வயலருகே உள்ள சோலைகளில் வாழும் மயிலினங்கள் மகிழ்ந்து ஆடும் ஆட்டத்தை அகமகிழ்ந்து கண்டு களிக்கின்றார்:

"துறை நணி மருதம் ஏறித், தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி இசைப்பின்
பழனக் காவில் பசுமயில் ஆலும்." (பதிற்று: உ௭)

தலையில் காந்தட்பூவாலாய கண்ணியினையும், கையில் கொலைத்தொழில்வல்ல வில்லையும் உடைய வேட்டுவர், ஆமாவின் இறைச்சியும், யானையின் வெள்ளிய தந்தமும் கொணர்ந்து கொடுக்கக்கொண்டு, அவர்க்கு அவர் விரும்பி

யுண்ணும் கள்ளைக் கொடுத்துச்செய்யும் வாணிபத்தால், பொன் மலிந்துகிடக்கும் பேரூர்க் கடை வீதிகளைக் கண்டு களிக்கிறார் புலவர்:

"காந்தளம் கண்ணிக், கொலைவில் வேட்டுவர்,
செங்கோட்டு ஆமான் ஊனொடு, காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்."
(பதிற்று : ௩௦)

நாட்டு வளமும், செல்வமும் கண்டு மகிழ்ந்த புலவர் பாலைக் கோதமனார், பல்யானைச் செல்கெழு குட்டுவனால் பாழான பேரூர்களைக் கண்டு கண்ணீர்விட்டுக் கலங்கி வருந்துகிறார்: சேரன் படைஆற்றலின் சிறப்பறியாது வந்து போர் ஆற்றி, அவன் தூசிப் படையினையும் தாங்கி நிற்றற்கு ஆற்றாது தோற்றோடிய பகைவேந்தர்களின் ஊர்கள், இவன் படையால் பாழாயின; ஆங்கு மக்கள் போக்கு வரவு அற்றுப் போனதால், அவ்வூரில் மக்கள் பண்டு பயில வழங்கியதால் பரவிக்கிடந்த வழிகள் எல்லாம், புல்லாலும், முட்செடிகளாலும் நிறைந்து மறைந்து போயின; வானளாவ உயர்ந்த மாடங்களையுடைய, ஊர் கள் எல்லாம், காட்டுப் பசுக்கள், ஏறுகளோடு கலந்து கூட்டமாகத் திரியும் காடுகளாய் மாறிவிட்டன. கண்கலங் கும் இக் காட்சிகளைக் கண்டு வருந்துகிறார் புலவர்:

"நின்நயந்து வருவேம் கண்டனம்; புல்மிக்கு
வழங்குநர் அற்றென, மருங்குகெடத் தூர்ந்து
பெருங்கவின் அழிந்த ஆற்ற; ஏறுபுணர்ந்து
அண்ணல் மரையா அமர்ந்தினிது உறையும்
விண்ணுயர் வைப்பின காடாயின; நின்
மைந்துமலி பெரும்புகழ் அறியார், மலைந் த
போரெதிர் வேந்தர் தார் அழிந்து ஒராலின்,
..................................................
அருஅ யாணர் அவர் அகன்தலை நாடே."
(பதிற்று : ௨௩ )

பல்யானைச் செல்கெழு குட்டுவன் வெற்றியும், அவன் நாட்டு வளமும் விளங்கப் பாடிய புலவர், அவன் நல்லோர் போற்றும் பண்புடையனாய் வாழவேண்டும் என்ற உயர் பேரெண்ண முடையராயினார். அவன் முன்னோர் நாடாண்ட முறையினை நன்கு எடுத்துக்காட்டினார்; அவர் உயர்ந்தோர் போற்றும் உயர்வினரானமைக்கு அவர்பால் அமைந்திருந்த அருங்குணங்கள் இவையென எடுத்துக் காட்டினார். நல்லரசைப் பல்லோர் பழிக்கும் வல்லரசாக ஆக்குதல், அவ் வரசுடையான் கொள்ளும் சினமும், காமமும், கையிகந்த கண்ணோட்டமும், அச்சமும், பொய்யும, அளவிற்கு மீறிய அன்புடைமையும், கையிகந்த தண்டமும் ஆம். இந்த உண்மையை முதற்கண் எடுத்துரைத்தார்; தீச் செயலை நின் மனத்தாலும் நினையற்க! நல்லற முடைய செயல்களை நாடோறும் செய்க! நாட்டு மக்கள், ஒருவரையொருவர் துன்புறுத்தாமலும், பிறர் பொருளைக் கவர விரும்பாமலும் வாழுமாறு, கடலும், கானலும் பயன் பல ஈனுமாறு நல்லாட்சி புரிவாயாக! குற்றமறக் கற்றுத் துறைபோய அறிவினையுடையாய், அறநெறி நிற்பாயாக! நின்னால் அன்பு செய்யப்பட்ட நின் மனைவியரோடு மகிழ்ந்து பிரிவின்றி வாழ்வாயாக! உள்ள பொருளை ஊரா ரோடு இருந்து உண்டு மகிழ்வாயாக! என்று இன்ன பல அறவுரைகளை அவன் அகம் கொள்ளுமாறு எடுத்துக் கூறி வாழ்த்தினார்:

"சினனே, காமம், கழிகண் ணோட்டம்,
அச்சம், பொய்ச்சொல், அன்புமிக வுடைமை,
தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகும்;
தீது சேண் இகந்து, நன்று மிகப் புரிந்து
கடலும், கானமும் பலபயம் உதவப்,
பிறர் பிறர் நலியாது, வேற்றுப் பொருள் வெஃகாது,
மையில் அறிவினர் செவ்விதின் நடந்து, தம்
அமர் துணைப் பிரியாது, பாத்துண்டு, மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்று கழிய
ஊழி உய்த்த உரவோர் உம்பல்!" (பதிற்று : உஉ)

பல் யானைச் செல்கெழு குட்டுவனுக்கு இவ்வாறு அறவுரைகள் பல கூறியும், அவன் மறக்குணம் மாறுமையினைக் கண்டார் புலவர்; ஒருவர் எவ்வளவு நூல் கற்று, எத்துணை அறிவு பெற்றவராயினும், அவர் இவ்வுலகம் நிலையற்றது; வாழ்வு நிலையற்றது; இவ்வுலக இன்பம் அழியும் இயல்பினது என்ற இந்த அறிவினைப் பெறாராயின், அவர் நல்வழிப் படுதல் இல்லை; இந்த உண்மையினை உணர்ந்த பாலைக் கோதமனார், சேரன் உள்ளத்தில், இந் நிலையாமை எண்ணம் தோன்றச்செய்தல் தம் கடன் எனக் கொண்டார்; அரண்மனை புகுந்து அவன்முன் நின்று, "அறவோன் மகனே!" என அவன் உள்ளத்தே அறவுணர்வு தோன்ற விளித்து "நின் ஆற்றற் பெருமையைப் பகைவர் அறியின், அதனால் அவர் ஆக்கம் மிகுமாதலின், அதை அவர் அறியா வண்ணம் மறைத்தும், நின்பால் வந்து குறைவேண்டியும், முறைவேண்டியும் கூறுவார் கூற்றுக்களின் உண்மைகளை உள்ளவாறுணர்ந்தும், பகற்காலத்தே, பகைப்புலம் சென்று போரிடும் நின் படையாளர்க்குத் துணைபுரிந்தும், இரவுக்காலத்தே, அமைச்சர், சான்றோர் உள்ளிட்டாரோடிருந்து மேல்செய்யக் கடவனவற்றை ஆராய்ந்து நோக்கியும் வாழும் அரசியல் பூண்டிருக்கும் நினக்கு ஒன்று கூறுகின்றேன்; அருள்கூர்ந்து கேட்பாயாக! உலகமுழுதையும் ஆள்வோர் தாம் ஒருவரே; தம்மையொத்த அரசர் உலகில் யாண்டும் இலர் என்ற பெருமைதோன்றப் பேரரசு மேற்கொண்டு வாழ்ந்த அரசர்களும், இவ் வுலகத்தில் அவர் புகழ் ஒன்றுமட்டும் நிற்க, இறந்து மறைந்தே போயினர்; நின் நாட்டில் உள்ள சோலைகள்தோறும், நிகழும் வெறியாட்டயர் களத்தில், அக்களத்தில் இனி இடமில்லை என்று கூறுமாறு நெருங்க நிற்கும் ஆடுகள் அனைத்தும் அழிந்துபோவது உறுதியாதலைப்போல், உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் ஒருநாள் அழிந்துபோவதும் உறுதியாம்; ஆதலின் அரசே! நிலையாமை யுணர்ந்து நல்லது ஆற்றி நெடிது வாழ்வாயாக!" என்று வாழ்த்தினார்:

"ஒருதா மாகிய பெருமை யோரும்
தம்புகழ் நிறீஇச் சென்றுமாய்ந் தனரே;
அதனால், அறவோர் மகனே! மறவோர் செம்மால்!
நின்னொன்று உரைப்பக் கேண்மதி!
நின்னூற்றம் பிறர் அறியாது.
பிறர் கூறிய மொழி தெரியாது,
ஞாயிற்று எல்லை ஆள்வினைக்கு உதவி
இரவின் எல்லை வருவது நாடி,
உரைத்திசின் பெரும!
..............................
காவுதோ றிழைத்த வெறியயர் களத்தின்
இடங்கெடத் தொகுத்த விடையின்
மடங்கல் உண்மை மாயமோ அன்றே." (புறம் : ௩௬௬)

பார்ப்பனர் குடிவந்த பாலைக்கோதமனார், தாம் பிறந்த குடிப்பெருமையினைப் பாராட்டும் பண்பு குடிசெய்வல் என்னும்' ஒவ்வொருவர்க்கும் உவகை தருவதாகும்; அந்தணர் அறுதொழில் உடையவர்; அவர்கள் அறம்புரி உள்ளத்தவராவர்; ஆதலின் அவர் அடிபணிந்து அவர் மொழிவழி அரசாளின் உலகெலாம், பரவும் ஒரு பெரு அரசும், உயர்ந்த புகழும் உண்டாம் என்று கூறும் அவர் குடிப்பற்றினைப் போற்றுவோமாக!

"ஓதல், வேட்டல், அவைபிறர்ச் செய்தல்,
ஈதல், ஏற்றல்என்று ஆறுபுரிந் தொழுகும்
அறம்புரி அந்தணர் வழிமொழிந்து ஒழுகி
ஞாலம் நின்வழி ஒழுகப் பாடல்சான்று
நாடுடன் விளங்கும் நாடா நல்லிசைத்
திருந்திய வியன்மொழித் திருந்திழை கணவ!"
(பதிற்று : ௨௪)

## கக. பெருஞ்சித்திரனர்

பெருஞ்சித்திரனர் ஒரு காவியப்புலவர் மட்டும் அல்லர்; அவரோர் ஓவியப் புலவருமாவர்; அவர் காட்டும் சொல்லோவியங்கள் சுவைக்குந்தொறும் சுவைமிக்குத் தோன்றும். அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியம் அவர் சொல்லோவியம், எனில், அது மிகையாகாது; பெருஞ்சித்திரனரின் செய்யுட் சிறப்புணர்ந்தன்றோ, அக்கால மக்கள் அவர் இயற்பெயரையும் மறந்து பெருஞ்சித்திரனர் என்ற சிறப்புப் பெயரிட்டு வழங்கினர்; தன் தலைதர வாள்கொடுத்த வள்ளல் குமணனும் வெளிமானும் பெருஞ்சித்திரனரின் பாராட்டைப்பெற்ற பெரியார்களாவர்; இவர் அன்பைப்பெறும் நற்பேறில்லார், ஆதியமானும், வெளிமான் தம்பி இளவெளிமானுமாவர்.

கொடைவள்ளல் குமணனைப் பாராட்டிப் பரிசில்பெற வந்த புலவர் பெருஞ்சித்திரனர், குமணனுக்கு முன்வாழ்ந்த கொடைவள்ளல்கள் எழுவரையும் வரிசையாக முன்னிறுத்தி வீரவணக்கம் புரியும் திறம்கண்டு வியவாதார் இரார்; அவர்கள் எழுவரும் வள்ளல்களாவர் என்பதை எவரும் அறிவராதலின், அவர்களைக் கூறுங்கால், அவர் தம் கொடைத்தொழிலை எடுத்துக் கூருமல், அவர்க்குச் சிறப்பளிக்கும் அவர் வெற்றிச் செயல்களையும் வேறுபிற சிறப்புக்களையும் எடுத்துக் கூறியுள்ளார்.

> "முரசுகடிப்பு இகுப்பவும். வால்வளை துவைப்பவும,
> அரசுடன் பொருத அண்ணல் நெடுவரைக்
> கறங்குவெள் ளருவி கல்லலைத் தொழுகும்
> பறம்பிற் கோமான் பாரி."
>
> "பிறங்கு மிசைக்
> கொல்லி ஆண்ட வல்வில் ஓரி."
>
> "காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த
> மாரி ஈகை மறப்போர் மலையன்."

"ஊராது ஏந்திய குதிரைக் கூர்வேல்
கூவிளங் கண்ணிக் கொடும்பூண் எழினி."

"ஈர்ந்தண் சிலம்பின் இருள்தூங்கு நளிமுழை
அருந்திறல் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கல் நாடன் பேகன்."

"திருந்து மொழி
மோசி பாடிய ஆய்."

"ஆர்வ முற்று
உள்ளி வருநர் உலைவுநனி தீரத்
தள்ளா தீயும் தகைசால் வண்மைக்
கொள்ளார் ஓட்டிய நள்ளி." (புறம் : கருஅ)

குமணனைப் பாடிப் பரிசில் பெறவேண்டி வரும் புலவர் "குமண! பெற்ற பெரும் பொருளைத் தனித்து நுகர நினையாது, நின்னை அடுத்து வாழ்வோர்க்கும் வழங்கி உண்பாயாக," என்று அவனுக்கு அறிவுரை கூற விரும்பினார்; ஆனால், அதை அவனுக்கு விளங்க உரைக்காது, "வளம்செறிந்த முதிரமலைத் தலைவ! வானோங்கி வளர்ந்த மூங்கில்கள் நிறைந்த நின்மலையில், சுரபுன்னையோடும், ஆசினியோடும் வளர்ந்து வனப்புற்றிருக்கும் பலாமரத்தின் முள்நிறைந்த பழத்தைப்பெற்ற கடுவன், அதைத் தான் மட்டும் உண்ண விரும்பாது, மந்தியையும் அழைத்து உண்ணும் வளம்நிறைந்த நாடுடையாய் நீ," என்று அவன் நாட்டு வளத்தினை வாழ்த்துவார்போல் பாடி, "நின்நாட்டு விலங்குகளிடையே காணலாம் இப்பண்பு, நின்பாலும் அமைந்திருத்தலன்றோ நினக்கு அழகு," என்று அறிவுரை கூறிய அவர் அறிவின் திறத்தை அறிந்து மகிழ்வோமாக!

"விசும்புறக்
கழைவளர் சிலம்பின் வழையொடு நீடி
ஆசினிக் கவினிய பலவின் ஆர்வுற்று
முட்புற முதுகனி பெற்ற கடுவன்
துய்த்தலை மந்தியைக் கையிடூஉப் பயிரும்
அதிரா யாணர் முதிரத்துக் கிழவ!" (புறம் : கருஅ)

வறுமையின் வாழ்விடமாய்க் காட்சி அளித்தது புலவர் பெருஞ்சித்திரனரின் இல்லம்; வறுமையால் வாடும் தம்தாய், தம்மனைவி, தம்மக்கள், தம்சுற்றம் ஆகியோரின் வறுமைநிலையினை விளக்கிக்கூறும் புலவர் பாக்கள் படித்தார் உள்ளத்தைப் பாகென உருக்கும் பண்புடையவாம்.

வெள்ளை நூலை விரித்தாற்போன்று நரைத்து முதிர்ந்தவள் என் தாய்; அவள் தன் கையிற்கொண்ட கோலையே காலாகக்கொண்டு, அடிமேல் அடிவைத்து நடக்கும் தளர்ச்சியுடையவள்; கண்கள் மாசடைந்து பார்வை இழந்தமையால், வீட்டின் முன்புறம் செல்வதும் அவளால் இயலாது; இவ்வாறு உடலும் உள்ளமும் தளர்ந்த அவள், 'இத்தனை ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தேனே; இன்னும் என் உயிர் போகவில்லை!' என்று தன் வாழ்நாளை வெறுத்துரை வழங்கிக் கொண்டே வாழ்கிறாள்; என்னைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய என் தாயின் நிலை இது.

"வாழும் நாளோடு யாண்டுபல உண்மையின்,
'தீர்தல் செல்லாது என்உயிர்' எனப் பலபுலந்து,
கோல் காலாகக், குறும்பல ஒதுங்கி
நூல்விரித் தன்ன கதுப்பினள்; கண்துயின்று
முன்றிற் போகா முதிர்வினள் யாய்." (புறம் : கஙக)

துன்பத்தால் வருந்தி வாடிய மேனியும், தன் இளைய மக்கள் விடாது உண்ணுவதால் உலர்ந்துபோன முலையும் உடையவள்; குப்பையில் தானே முளைத்திருக்கும் கீரைத் தண்டுகளில், முன்பு கொய்தவிடத்தே துளிர்த்த புதிய இளம் தளிர்களைக், கொய்துகொணர்ந்து உப்பிடாமலே நீர் உலையில் இட்டு ஆக்கிப்பெற்ற கீரை உணவன்றி, சோறும் மோரும் உண்டறியாதவள். அழுக்கேறியதும் அளவின்றிக் கிழிந்ததுமான ஆடையினை உடையவள்; தன்னையும் தன் குடும்பத்தினரையும் வறுமையில் வாடவிட்ட தெய்வத்தை இகழ்ந்து வாழ்பவள்; அவள் தான் இத்துணை வறுமையுற்ற காலத்தும் என்மாட்டு வற்றாத அன்புடையவள்; அவள் என் இல்லாள்;

"பசந்த மேனியொடு படரட வருந்தி,
மருங்கிற் கொண்ட பல்குறு மாக்கள்,
பிசைந்து தின வாடிய முலையள்; பெரிதழிந்து
குப்பைக் கீரை கொய்கண் அகைத்த
முற்ரு இளந்தளிர் கொய்துகொண்டு உப்பின்று
நீருலை யாக ஏற்றி, மோரின்று,
அவிழ்பதம் மறந்து, பாசடகு மிசைந்து,
மாசொடு குறைந்த உடுக்கையள்; அறம்பழியாத்
துவ்வா ளாகிய என்வெய் யோள்." (புறம் : கடுக)

வீட்டில் உண்ணுதற்குரிய பொருள் ஒன்றும் இல்லாமையால், வீட்டை மறந்து வெளியிடங்களிலேயே சுற்றித் திரிதலால் மயிர் உதிர்ந்து காய்ந்துபோன தலையினையுடைய என் மகன், ஒரோருகால் வீட்டிற்கு வந்து தன் தாயிடத்தே பால் உண்ணச்சென்று, பால் கிடைக்கப்பெருது வருந்தி, சோறும் கூழும் வேண்டும் என அடம் பிடித்து, வீட்டினுள் நுழைந்து, ஆங்கே அடுக்கி வைத்திருக்கும் கலங்களை ஒவ்வொன்ருகத் திறந்து பார்த்து, அவற்றுள் ஒன்றும் இல்லாமைகண்டு, கலங்கிக் கண்ணீர் விட்டுக் கதறி அழ, அவன் அழுகையினைப் போக்கவேண்டி "புலி வருகிறது: புலி வருகிறது," என்று அச்சம் காட்டவும், அழகிய திங்களைக் காட்டி அன்புரை கூறவும் அவன் அடங்காமை தல் அறிந்து வருந்தி, "வருந்திய நின் முகத்தை நின் தந்தைக்குக் காட்டு," என்று வெறுத்துக்கூறி வருந்தி வாழ்வாள் என் மனைவி. வறுமையால்வாடும் என் வீட்டின் வளம் இது;

"இல்உணுத் துறத்தலின் இல்மறந்து உறையும்
புல்உளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெருஅன்,
கூழும், சோறும் கடைஇ, ஊழின்
உள்ளில் வறுங்கலம் திறந்தழக் கண்டு
மறப்புலி உரைத்தும், மதியம் காட்டியும்
நொந்தன ளாகி, நுந்தையை உள்ளிப்
பொடிந்தநின் செவ்வி காட்டெனப் பலவும்
வினவலாஞ ளாகி, நனவின்
அல்லல் உழப் போள்." (புறம் : கசுO)

"வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி பண்பில் தலைப்பிரிதல் இன்று," என்றும், "அடுக்கிய கோடிபெறினும் குடிப்பிறந்தார், குன்றுவ செய்தல் இலர்" என்றும் வள்ளுவர் கூறும் குடிமையின் இயல்பினை உணர்ந்தவர் பெருஞ்சித்திரனுர். தாமும், தம் சுற்றமும் வறுமையால் வாடியக்காலும் தம் பெருமைக்கு இழுக்குத்தரும் செயலைச்செய்ய எண்ணுவாரல்லர் அவர். பெருஞ்சித்திரனர்பால் அமைந்திருந்த வறுமையிற் செம்மையாம் பண்பு, அவர் வெளிமான், இளவெளிமான், குமணன், அதியமான் ஆகியோரைப் பாராட்டிய பாக்களால் நன்கு புலனுகும்.

வெளிமான் என்ற பெயருடைய குறுநிலத் தலைவன் ஒருவன் இருந்தான். அவன் மிக்க அருள் உள்ளமும், கொடைக்குணமும் உடையவன். வறுமையால் வாடிய புலவர் பெருஞ்சித்திரனர், வெளிமானைப் பாடிப் பொருள் பெற்றுவர விரும்பினர். அவனூர் சென்று அவனைப் பாடினர். புலவர் பாவின் பெருமையுணர்ந்த வெளிமானும் அவர் வேண்டுவன அளித்து விடைதர எண்ணினன். ஆனல் அந்தோ! அதற்குள் அவன் உயிர்போகும் துயர் நிலை எவ்வாறே வந்துற்றது; அந்நிலையிலும் அவன் புலவரை மறந்தானல்லன். தன் அருகிருக்கும் தன் தம்பியின்பால், புலவர்க்கு வேண்டுவன அளித்துப் பணிந்து விடைகொடுப்பாயாக என்று கூறி உயிர்விட்டான். வெளிமான் பிரிவு புலவர்க்கு ஆருத்துயர் அளித்தது. "கோடை கொளுத்த, கால் கொப்புளிக்க, வெந்து வியர்த்து வருவார் தமக்குப் பெருநிழல் அளித்துப் பேணும் பழுமரம் போன்று வறுமையால் வாடி வருவார் தமக்கு மருது அளிக்கும் மாண்புடையானைப் பாடிய பாட்டு பயனளிக்கும் என்று எண்ணி, அவன் தரும் பொருள்மேற் சென்ற என் ஆசை அந்தோ! அழிந்தது; மறைந்து மண்ணுயினன் மன்னவன்; என்னைப்போலும் இரவல் மாக்கள், அந்தோ! இனிஎன்னுவர்?" என்றெல்லாம் கூறி அழுதார், அரற்றினர்.

"நீடுவாழ் கென்றுயான் நெடுங்கடை குறுகிப்
பாடிநின்ற பசிநாட் கண்ணே
கோடைக் காலத்துக் கொழுநிழ லாகிப்
பொய்த்த லறியா உரவோன் செவிமுதல்
வித்திய பனுவல் விளைந்தன்று நன்றெனா
நச்சி யிருந்த நசைபழு தாக
....................................
வெள்வேல் விடலை சென்றுமாய்ந் தனனே."
(புறம் : உ௩எ)

பின்னர் ஒருவாறு உளம்தேறி, வெளிமான் தம்பி இளவெளிமான்பால் சென்றார். அவன் அண்ணனைப் போலும் அருள் உள்ளமும், புலவர் பெருமையறியும் அறிவுத்திறனும் உடையானல்லன். ஆதலின், அவன் அண்ணன் கூறிய அளவு கொடாது, சிறிது கொடுப்பா னாயினன். அவன் கொடுக்க முன்வந்த பொருளின் சிறுமை, புலவர் உள்ளத்தே ஊறியிருந்த மான உணர்ச்சியினை உறுத்திற்று. அப்பொருளை வாங்க மறுத்தன அவர் கைகள். "நெஞ்சே! தம் அருகே இருப்ப இரு கண்களால் பார்த்தும் பாராதவர்போல் நடித்து, உள்ளத்தே ஆர்வம் இன்றி, மனத்தே மகிழ்ச்சி குறைய, முகத்தே வெறுப்பு நிற்க, அளிக்கும் பரிசில் அளவால் பெரிதேயாயினும் உள்ளத்தே ஊக்கமுடையார் அதனை விரும்பார்; 'வருக' என விரும்பி வரவேற்று அளிக்கும் பொருளை ஏற்றலே தக்கது; அதுவே நம் வரிசைக்கும் தகும்; வரிசை விரும்பும் நம்மனோர்க்கு உலகம் பெரிது; நம்மை விரும்பி ஏற்றுப் பேணுவோர் பலர் உளர்; ஆளி போலும் மறம் நிறைந்த என் நெஞ்சே! நீ உள்ளம் உடையற்க! கனியாத பழம் வேண்டி வருந்தி உழல்பவர் உலகத்தில் ஒருவரும் இரார்; எழுக! இனி வேறிடம் செல்வோம்," என்றும்,

"எழுஇனி நெஞ்சம்! செல்கம்; யாரோ
பருகு வன்ன வேட்கை இல்வழி
அருகிற் கண்டும் அறியார் போல
அகன்நக வாரா, முகன்அழி பரிசில்

தாளி லாளர் வேளா ரல்லர்;
வருகெனல் வேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே உலகம்; பேணுநர் பலரே;
மீளி முன்பின் ஆளி போல
உள்ளம் உள்ளவிந் தடங்காது வெள்ளென
நோவா தோன் வயின் திரங்கி,
வாயா வன்கனிக்கு உலமரு வோரே. (புறம் : உ0எ)

"நெஞ்சே! புலி, தான் கொல்லக்கருதிய களிறுகிய இரை தவறுமாயின் தன் வயிற்றுப் பசியைத் தணித்தற்காக எலியைப்பற்றிக் கொல்ல எண்ணுது; அதுபோல், இவன் அளிக்கும் இச்சிறிய பரிசிலை ஏற்றுச் செல்லுதல் நமக்கு முறையன்று. கடல் நோக்கிப் பாய்ந்தோடும் ஆற்றுப் புனல்போல் விரைந்து வேற்றிடம் சென்று விழுப்பொருள் பெற்றுவருவோமாக!" என்றும் வன்சொல் வழங்கி வெகுண்டது அவர் வாய்.

"புலிபார்த்து ஒற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த்து ஒற்ருதாகும்; மலிதிரைக்
கடல்மண்டு புனலின் இழுமெனச் சென்று
நனியுடைப் பரிசில் தருகம்;
எழுமதி நெஞ்சே! துணிபு முந்துறுத்தே." (புறம்: உ0ஏ)

சினந்து புறப்பட்ட சித்திரனார், தாம் விரும்பும் பரிசில் அளிப்பான் யாவன் என எண்ணுவாராயினர். அதியமான் நெடுமானஞ்சி, ஔவைக்கு அரிய நெல்லிக்கனி அளித்த அரிய செயல், அவர் நினைவிற்கு வந்தது: தாம் விரும்பும் பரிசில் நல்கும் பண்புடையான் அதியன் எனக் கருதினர். உடனே அதியன் அரசியலிருக்கையாம் தகடூர் சென்று தம் தகுதி வழுவாது பாடிப் பரிசில் வேண்டி நின்றார்.

புலவர் வருகையறிந்த அதியமான் அவரை அழைத்து அவர் அறிவின் திறம் கண்டு அகமகிழ்ந்து பரிசில் அளிக்கத் தவறிவிட்டான். அரசியல் அலுவல் மிகுதியாலோ,

அல்லது உடல்நலக் குறைவாலோ எதனாலோ அதியமான் புலவரை நேரில்கண்டு பாராட்ட இயலாதாயினன்; என்றாலும் தன் தகுதிக்கும் புலவர் பெருமைக்கும் ஏற்ற பரிசிலை ஏவலாளர்வழி அனுப்பி, "இதனை அவர் கொண்டுசெல்க" என விடுத்தான். பெருஞ்சித்திரனார் மானமும், மறமும் செறிந்த உள்ளமுடையவராவர். "அதியமான் அழைத்துத் தாராது, பிறர்பால் அளித்துத்தந்த பொருள் காண வருந்திற்று அவர் உள்ளம். "குன்றும் மலையும் கடந்து நெடுவழி நடந்துவந்த யான் பரிசில் ஒன்றே கருதி வந்துளேன் என்பதை இவன் யாங்ஙனம் அறிந்தான்; வருக எனல் வேண்டும் வரிசை விரும்பும் யான், என்னைக் கண்டுற்றுக் காணவும் செய்யாது அளித்த இப்பரிசிலை ஏற்றுக்கொள்ளேன்; நான் ஒரு வாணிகப் பரிசிலன் அல்லன்; விரும்பி வருக என அழைத்து, என் அறிவின் திறனும், புலமையின் பெருமையும் உணர்ந்து பாராட்டிப் பின்னர் அளிக்கும் பரிசில் அளவாற் சிறிதேயாயினும் அதுவே எனக்குப் பெருமகிழ்ச்சி தருவதாம்," என்று வாய்விட்டுக் கூறி அவர் அளித்த அப்பரிசிலை ஏற்காது வறிதே திரும்பினார்:

"குன்றும் மலையும் பலபின் ஒழிய,
வந்தனென்; பரிசில் கொண்டனென் செலற்கென
நின்ற என்னயந்தருளி, 'ஈதுகொண்டு
ஈங்கனம் செல்க தான்' என என்னை
யாங்கறிந் தனனோ தாங்கரும் காவலன்?
காணாது ஈத்த இப்பொருட்கு யானோர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணித்
தினையனைத் தாயினும் இனிது அவர்
துணையளவு அறிந்து நல்கினர் விடினே." (புறம்: உ0அ)

அருந்தமிழ் மூதாட்டி ஔவையாரின் அருள்தொடர்புடையானாகிய அதியமான் தம் அருமை அறியாதுதல் அறிந்த புலவர் பெருஞ்சித்திரனார் பெரிதும் வருந்தினார். தம் புலமைநலம் அறிந்து போற்றும் பண்புடையான் யாவனோ என எண்ணி ஏங்கினின்றார். அந்நிலையில் பாணரும், கூத்

தரும், பொருநரும், புலவரும் ஆய இரவலர் சிலர் அவர்பால் வந்து அவர் உளம் அறிந்து, "புலவ! நின் உளம் விரும்பும் பரிசில் அளிப்போன் ஒருவன் உளன்; அவன் பெயர் குமணன் என்பது; அவன் முதிரமலையிடத்தே வாழ்கின்றான். அவன் தன்னுடைய நட்டோர்பால் காட்டும் அன்பினும், பாடிவரும் இரவலர்பால் காட்டும் அன்பு பெரிதுடையான்; திங்களைச் சூழஉள்ள நாள் மீன்களைப்போல, பெரிய கலத்தைச் சூழப் பல சிறு பொற்கலங்களை வைத்து நெய்யுடை அடிசில் இட்டு, அக மகிழ்ந்து ஊட்டி, அவ்விரவலர் விரும்பும் அணிபல அளித்து அனுப்பும் அருள் உள்ளம் உடையவன்," என்று குமணன் கொடைச் சிறப்பும் கொள்கைச்சிறப்பும் விளங்க உரைத்தனர்:

"நெய்யுடை அடிசில்,
மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொன் நன்கலம் சுற்ற இரீஇக்
கேடின் றாக, பாடுநர் கடும்பு என
அரிதுபெறு பொலங்கலம் எளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத் தோனே
செல்குவை யாயின் நல்குவன் பெரிதெனப்
பல்புகழ் நுவலுநர் கூற." (புறம்: கசுO)

குமணன் குணச்சிறப்புக் கேட்ட பெருஞ்சித்திரனார் அவன் முதிரமலை நோக்கிப் புறப்பட்டார்; குமணனைக் கண்டார். குமணனும் அதியமானுகிவிடுவனே என்றஞ்சினார்; 'முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம் இன்சொல் கூறி' அளிக்கும் பொருளன்றிப் பிறிது பொருள் பெறாத் தம் இயல்பினை எடுத்துக் கூறிவிடுதல் இருவர்க்கும் நன்றாம் என்று எண்ணினார். உடனே குமணனை நோக்கி "யான் வறியனே ஆயினும், அளிக்கும் பரிசில் களிறுபோன்ற பெரும் பரிசிலேயாயினும் அப் பரிசில் அளிப்போர் அகமகிழ்ந்து அளிக்காது, முகஞ் சுளித்து அளிப்பராயின் அப்பரிசிலை ஏற்றுக்கொள்ளேன்

யான்; என் உள்ளம் மகிழுமாறு, நீ நின் உளம் விரும்பித் தருவையாயின் சிறிய குன்றியளவு பொருளையும் மகிழ்ந்து ஏற்றுக்கொள்வன்; ஆதலின் இவ்வியல்புணர்ந்து என் உளம் உவக்கும்வகை அளித்தனுப்புவாயாக," என்று கூறினார்:

"உயர்ந்தேந்து மருப்பின் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென்; உவந்துநீ
இன்புற விடுதி யாயின், சிறிது
குன்றியும் கொள்வல்; கூர்வேல் குமண!
அதற்பட அருளல் வேண்டுவல்." (புறம்: கருகூ)

உரைத்த தம் கருத்தினை உணர்ந்தான் குமணன் என்பது தெளிந்த புலவர் பெருஞ்சித்திரனார், வெளிமானுழைச்சென்று மீண்டு தம் செயலையும் உணர்த்திவிட்டு, "வேந்தே! யான் மலைபோலும் யானைமேல் ஏறிச் செம்மாந்து செல்ல விரும்புகின்றேன்; என் வறுமை பின்னின்று துரத்த நின்புகழ் முன்னின்று ஈர்த்துக்கொணர வந்து பாடிய என்பால், அக் களிறுபெறு தகுதி உளதாயினும், இலதாயினும் நீ என் தகுதியை நோக்காது, நின் தகுதியை நோக்கி அதற்கேற்ப அளிப்பாயாக! பாடல் கேட்டுப் பரிசில் அளிக்காத வேந்தர்கள் வெட்கித் தலை குனியுமாறு களிறூர்ந்து செல்லும் விருப்பமுடையேன்; என் வேண்டுகோளை மறுது ஏற்றருள்வாயாக," என்று வேண்டிநின்றார்:

"பனைமருள் தடக்கையொடு முத்துப்பட முற்றிய
உயர்மருப்பு ஏந்திய வரைமருள் நோன்பகடு
ஒளிதிகழ் ஓடை பொலிய, மருங்கில்
படுமணி இரட்ட, ஏறிச் செம்மாந்து
செலல் நசைஇ உற்றனன்; விறல்மிகு குருசில்!
இன்மை துரப்ப, இசைதர வந்து, நின்
வண்மையிற் றொடுத்தஎன் நயந்தனை கேண்மதி!
வல்லினும், வல்லே னாயினும், வல்லே
என்னளந் தறிந்தனை நோக்காது, சிறந்த
நின்னளந் தறிமதி! பெரும! என்றும்
வேந்தர் நாணப் பெயர்வேன்." (புறம்: கசுக)

புலவர் குறிப்பறிந்து கொடுக்கும் குணமுடையரா கிய குமணன், சித்திரனார், தம் சிந்தை நொந்து உரைத் தனவற்றைக் கேட்டபின்னரும், அவர் வேண்டுவனவற்றை அளியாதிரான் அன்றே! பெருஞ்சித்திரனார் அவன் அளித்த களிற்றின்மீது ஏறி அமர்ந்தார்; வறுமையால் வாடும் தம் ஊர்செல்ல விரும்பாது, வெளிமானூர்க்கு விரைந்து சென்றார்; அவன் காவல் மரத்தில் தாம் ஏறி வந்த களிற்றைப் பிணித்தார்; அரண்மனையுள்ளே சென்றார்; இளவெளிமானை, அரண்மனை வெளியே அழைத்து வந்தார்; ஆங்கே அவன் காவல்மரத்தில் கட்டுண்டு நிற்கும் களிற்றினைக் காட்டினார்; "வேந்தே! இதோ, நின் காவல் மரத்தில் யாம் கட்டியிருக்கும் இக் களிறு, எம் முடைய பரிசிற் பொருளாகும்; எம்போலும் இரவலரைப் பேணிக் காக்கும் புரவலன், நீ யொருவனே போலவும், இரவலரைப் புரப்போர், உலகில் நின்னையன்றி வேறு எவரும் இல்லைபோலவும் எண்ணி இகழ்ந்தனை யன்றே? இதோ நிற்கும் இக்களிற்றினைக் கண்டாவது அறிவு கொள்; இரவலரைப் புரக்கும் பண்பாடு பெற்றவன் நீயும் அல்லன்; உலகில் இரவலரைப் புரக்கும் புரவலர் இல்லாது போகவும் இல்லை; உலகில் இரவலரும் உளர்: அவ் விரவலரைப் புரக்கும் புரவலரும் உளர்; என்பதை அறிந்து அறிவுகொள்! யான் வருகின்றேன்," என்று சினந்து கூறி வீடு சென்றார்:

"இரவலர் புரவலை நீயும் அல்லை;
புரவலர் இரவலர்க்கு இல்லையு மல்லர்;
இரவலர் உண்மையும் காண்; இனி இரவலர்க்கு
ஈவோர் உண்மையும் காண்; இனி, நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்துயாம் பிணித்த
நெடுநல் யானை எம் பரிசில்!
கடுமான் தோன்றல்! செல்வல் யானே!" (புறம்: ௧௬௨)

தம் பெருமையும், தம்போலும் புலவர் பெருமையும் அறியானாகிய இளவெளிமானுக்கு, அவர்களின் அறிவும், புகழும் அறியக் காட்டிய புலவர் பெருஞ் சித்திரனார்,

தாம் பிறந்த புலவர் குடிக்குத் தாம் ஆற்றவேண்டிய அருங்கடனை ஆற்றினேம் என்ற உள்ள அமைதியோடும், குமணன் தந்த அருங்கொடைப் பொருள்களோடும், தம் மனை புகுந்தார். கணவர் கொணர்ந்த பெரும்பொருள் கண்டு, அகமும், முகமும் ஒருங்கே குளிர்ந்தாள் அவர் மனைவி; மனைவியின் மகிழ்ச்சியைக் கண்டார் புலவர்; தாமும் தம் குடும்பமும் மட்டும் வாழ்ந்தால் போதும், என எண்ணும் குறுகிய உள்ளம் உடையவரல்லர்; 'யாம் பெற்ற இவ் இன்பம், பெறுக இவ் வையகம்' என எண்ணும் பேருள்ளம் படைத்தவர் ஆதலின், தாம் கொணர்ந்த பொருள் தமக்குப் பயன்படுமாறுபோல், தம்போல் வறுமையால் வாடும் பிறர்க்கும் பயன்படுக என்ற பெருமை சால் எண்ணமுடையவராய்த் தம் மனைவியை நோக்கி, "இப் பொருள் குமணன் கொடுத்த கொடைப்பொருள்; வறுமையாளர் வாட்டம்தீர அளித்தான் இப் பெரும் பொருள், ஆதலின், இப் பொருளைக் கொண்டு யாம்மட்டும் பெருவாழ்வு வாழ நினைத்தல் தவறும்; நம்போலும் வறிய வர்கள் தம் வாட்டம் போக்க, இப் பொருள் பயனுறுதல் வேண்டும்; ஆதலின், நின்பால் அன்புகாட்டும் அருளுடையார்க்கும், நின்னால் அன்பு செய்யப்பெற்றார்க்கும், நம் உறவினராய், உயர் பெருங் குணமுடையார்க்கும், நம் சுற்றம் பண்டு கொண்டிருந்த பெரும்பசி தீர்க்கப் பொருள் கொடுத்து உதவியோர்க்கும், இவர் இத்தன்மையாளர், இவர் இத்தன்மையுடைய ரல்லர் என்று எண்ணிப் பாரா மலும், இவர்க்கு வழங்கலாகுமா; இவர்க்கு இவ்வளவு போதுமா? என்றெல்லாம் எம்மிடம் வந்து கேளாமலும், இப் பொருள் கொண்டு இறப்ப உயர்ந்த பெருவாழ்வு வாழ் வோம் என எண்ணாமலும், எல்லோர்க்கும் பகிர்ந்தளித்து வாழ்வாயாக!" என்று அறிவுரை கூறினார்; புலவர் தம் பேருள்ளம் இருந்தவாறு என்னே!

"நின்நயந் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்,
பன்மாண் கற்பின்நின் கிளைமுத லோர்க்கும்,
கடும்பின் கடும்பசி தீர, யாழநின்

நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது, என்னொடும் சூழாது,
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி; மனைகிழ வோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே." புறம் : (கசுங)

இதுகாறும் எடுத்துக்காட்டிய பாக்களின் பொருள் நயமும், சொல் நயமும், பெருஞ் சித்திரனார் என்ற பெயர் இவர்க்கு முழுதும் பொருத்தம் உடையதே என்பதற்குச் சான்று பகர்ந்து நிற்கின்றன. பெருஞ்சித்திரனார், 'வைத்த தொரு கல்வி மனப்பழக்கம்' என்பதற்கியைய, நூல் பல கற்றுத் தேர்ந்து தெளிந்த புலமை நலமுடையவராவர்; ஆதலின், அவர் பாக்கள் புலமை நலம் சான்று, பெருங் கவின் அளித்துப் படிப்பார் உளத்தே பெருமகிழ்ச்சி தோன்றச் செய்கின்றன; அவர்தம் பாக்களில் ஆங் காங்கே மேற்கொள்ளும் உவமைகள், ஒருபுடையே ஒப்புமை உடையவாம் என்பதோடு நில்லாது, முழுதும் ஒத்து நின்று, உயர்ந்த நலம் செறிந்து காணப்படுகின் றன; தாம் விரும்பிய பொருள் அளிப்பான் வெளி மான் என எண்ணி இருந்தக்கால், அவன் இறந்து விட்டான் என்ற செய்தி கேட்ட பெருஞ்சித்திரனார்,

"மாரி இரவின், மரம்கவிழ் பொழுதின்
ஆரஞர் உற்ற நெஞ்சமொடு ஓராங்குக்
கண்ணில் ஊமன் கடல்பட் டாங்கு
வரையளந் தறியாத் திரையரு நீத்தத்து
அவல மறுசுழி மறுகலின்
தவலே நன்றுமன்; தகுதியும் அதுவே" (புறம் : உ௩அ)

என்று வருந்தி அழுத இப் பாட்டில் காட்டியுள்ள உவமை, அவர் துயரத்தின் கொடுமையினைக் காட்டிப் படிப்பார் கண்களில் கண்ணீரையும், அவர் புலமை நலத்தை உணர்த்தி அவர்தம் உள்ளத்தே உவகைக் களிப்பினையும் ஒருங்கே தோற்றுவிக்கும் பெருமை யுடையதாகும்.

மழைக்காலத்து இரவு ஒன்றில், கடலிடையே சென்று கொண்டிருந்த கலம் கவிழ்ந்துவிட்டது; அக் கலத்தில் இருந்த, காணும் ஆற்றலையும் பேசும் ஆற்றலையும் ஒருங்கே இழந்த, கண்ணில் ஊமன் ஒருவனும் கடலில் வீழ்ந்துவிட்டான்; வீழ்ந்தவன், கடல்நீருள் ஆழ்ந்து இறந்துபோனானல்லன்; கடல் அலைகளாலும், கடல்நீர் ஓட்டங்களாலும், இங்கும், அங்கும் அலைப்புண்டு கிடக்கிறான்; அந்நிலையில், அவன் நிலை என்னாம்! வெளிமான் இறந்த செய்தி கேட்டுத் துயருறும் என்னிலையும் அவன் நிலையே என்று கூறுகின்றார் புலவர்.

கடலில் வீழ்ந்திருப்பினும், கவிழ்ந்த கலத்தினின்றும் சிதறிய மரத்துண்டு ஒன்றைப் பற்றிக்கொண்டு சில மணி நேரம் கழித்தால் இரவு போய்ப் பகல் வரும் என எண்ணினால், கலம் கவிழ்ந்த காலம் மாரிக்காலமாகும்; கடுங்குளிரும், பெருமழையும், கடல்நீர் தரும் குளிரினை மேலும் மிகுதியாக்கிப் பொறுக்கலாகாப் பெருந்துயர் விளைத்தலின் நெடிதுநேரம் கடல்நீரில் மிதப்பது இயலாதாயிற்று; கலங் கவிழினும், ஆங்கே வரும் பிற கலங்கள், கவிழ்ந்தது ஒரு கலம் எனக் கண்டு விரையவந்து துணைபுரிபவர் என எதிர் பார்த்தலும், கவிழ்ந்த நேரம், அருகே என்ன நிகழ்கிறது என்பதையும் அறிந்துகொள்ள மாட்டா இருள் செறிந்த இரவுக்காலமாதலின், இயலாதாயிற்று; பிற கலத்தில் வருவார், கலம் ஒன்று கவிழ்ந்துளது என்பதை அறியாராயினும், எங்கிருந்தேனும் ஒருகலம் வந்து என்னைக் காப்பாற்றாதா! என எதிர்நோக்கித் துயருறும் இவன், பிற கலன் வருவதை அறிந்து அழைத்தல் கூடும் என எதிர் பார்த்தலும், அவன் பார்வையற்ற பிறவிக் குருடனாதலால் இயலாதாயிற்று; கலம் வருவதைக் கண்ணால் பார்த்து அறிந்துகொள்ளானாயினும், அது வருங்கால் எழும் பேரொலி கேட்டுக் கலம் வருவதை அறிந்துகொள்ளினும், அவன் "ஐயோ! கலம் கவிழக் கடலில் வீழ்ந்து துன்புறுகின்றேன்; கலம் சேர்த்துக் காப்பாற்றுங்கள்;" என்று உரத்துக் கூறற்கில்லா ஊமையாதலின், கலம்

தன்னைக் கடந்து செல்வதை அறிந்து கண்ணீர் விடுவதல்லது, அதன் உதவி பெறுதல் இயலாது. இதனால், இறப்பது மாட்டாமல், கரைசேர்ந்து இன்புறுதற்கும் இன்றிக் கடல்நீரால் அலைப்புண்டு அலைப்புண்டு துயர் உற்றுக் கிடப்பதே அவன் நிலையாயது; இந்த அழகிய உவமையைக் கூறியமுகத்தான், வெளிமான் இறந்தமையால் தாம் உற்ற துயர் போக்கித் துணைபுரிவார் எவரையும் காணாது கண்ணீர் விட்டுக் கலங்கும் தம் கொடுமையினை விளங்க உரைத்த அவர் புலமை நலத்தினைப் போற்றுவோமாக.

"வெளிமானைக் கண்டோம்; பாடினோம்; அவனும் எம்மைக் கண்டான். எம் பாடல் கேட்டான்; நாம் பொருள் பெறுவது உறுதி" என்று எண்ணி மகிழ்ந்திருந்த போது, வெளிமான் இறந்தான் என வந்த செய்தி புலவர்க்கு எத்துணைக் கொடுமைதரும் செய்தியாக இருந்தது என்பதைச், "சோறுண்ணும் வேட்கையான் ஒருவன் அடுப்பேற்றி அரிதின் முயன்று சோறாக்கி முடித்து வைத்துவிட்டுச்சென்று குளித்துவந்து இலைமுன் அமர்ந்து இலையில் சோறிடவேண்டி அச்சோற்றுப் பானையினைத் திறந்து நோக்கியக்கால், அதனுள் சோறு காணப்பெறாது அதற்குரிய இடத்தில் அழல்விடும் பெருநெருப்பு இருப்பக் காணின் அவன் கொள்ளும் துயர்போன்றது, வெளிமான் இறந்தான் எனக்கேட்டு யான்கொள்ளும் துயர்" எனக் கூறும் புலவர் தம் பொன்னுரை விளக்கி நிற்றல் காண்க.

"அட்ட குழிசி அழல்பயந் தாங்கு

..........................

வென்வேல் விடலை சென்றுமாய்ந் தனனே."

(புறம் : உ௩எ)

'கூழுக்கும் பாடுவர் புலவர்' என்ற பழியுடையாரல்லர் புலவர்; அவர் பெருமித வாழ்வுடையார் என்று காட்டிப், புலவர் உலகிற்குப் பெருமை தேடித்தந்த புலவர் பெருஞ்சித்திரனார், அப் புலவர்மாட்டு அன்பும் மதிப்பும் உடையராய்க் காணப்படுகின்றார்; தம்மினும் சிறந்த

புலவர்தம் பெருமையைப் பாடிப் பாராட்டுகிறார்; புலவர் பெருஞ்சித்திரனார் வாழ்ந்த காலம், 'பொறுமை புலவர்க்கு அணிகலன்' என்ற அழிவுரை தோன்றாப் பொற்கால மாகும்; 'அவன் என்ன புலவன்? நான் பாடிய பாட்டின் பொருள் உணரமாட்டான் அவன்; நாலு பாட்டு நன்றாக மனப்பாடம் வராது; மேடைஏறி ஒரு வார்த்தை கூற வராது; இவனும் புலவனாய் வந்துவிட்டான்' என்பன போன்ற புல்லுரைகள் புகாத காலம். புலவரைப் புலவர் மதித்துப் பாராட்டும் பண்பு நிறைந்த காலம், பெருஞ் சித்திரனார் வாழ்ந்த காலம். பெருஞ்சித்திரனார் என்ற பெருமைக்குரிய பெயர்கொண்டு சிறந்த புலவர் சித்திரனார், தம்மைப்போலும் புலவர்களைப் போற்றுவது பாராட்டற் குரிய பண்பன்றோ? வள்ளல்களின் பெருமை கூறிவரும் புலவர், ஆய் அண்டிரனைக் கூறுங்கால், அவன் பெற்றுள்ள ஏனைப் பெருமைகளை எல்லாம் எடுத்துக் கூறாது, ஆய், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாராட்டிய பண் புடையவன் என்று பாடி, புலவராற் பாடப்பெறும் பெருமையினைக் கூறியதோடு அமையாது, முடமோசி யாரைக் குறிப்பிடுங்கால், அவர் புலமைநலம் தோன்ற, "திருந்துமொழி மோசி" என்றும் கூறிப் புலவர்மாட்டுத் தாம் கொண்டுள்ள பெருமதிப்பினை நன்கு புலப்படுத்தி யுள்ளார். "திருந்துமொழி மோசிபாடிய ஆய்." பாம்பின் கால் பாம்பன்றோ அறியும்! புலவர் பெருமையினைப் புலவரே அறிவர்!

## ௨0. பெருந்தலைச் சாத்தனார்

சாத்தனார் என்பது இவரது இயற்பெயர்; அது ஐயனாரைக் குறிக்க வழங்கும் ஒரு தெய்வப் பெயராம். ஒருவர்க்கு இயல்பாக இருக்கவேண்டும் அளவிற்கு மேலும் பருத்த தலையுடைமையால், சாத்தனார் பெருந்தலைச் சாத்தனார் என அழைக்கப்பட்டார். எத்தகைய இடர்வந்துறினும் சிறிதும் உளம் கலங்கா உறுதியுடையாரை இரும்புத் தலையர் என்பதும், பேரறிவும், பெருஞ்சூழ்ச்சியும் வல்லாரை இரட்டைத்தலையர் என்பதும் உலகவழக்கு. அதைப்போன்றே, சாத்தனார்பால் காணலாம் அறிவின் பெருமை கண்ட அக்காலத்தார், இவரைப் பெருந்தலையர் என வழங்கினர் எனலும் பொருந்தும். கொடைவள்ளல் குமணனுடைய தலையைக்காத்த பெருமையுடைமையால் பெருந்தலைகாத்த சாத்தனார் என அழைக்கப்பெற்ற இவர், காலம் செல்லச்செல்லப் பெருந்தலைச் சாத்தனார் என அழைக்கப்பெற்றார் என்று கொள்வதும் பொருந்தும். பெருந்தலை என்பது உறுப்பைக் குறிக்க வந்ததன்று; அவர் பிறந்த ஊரைக் குறிக்க வந்ததாம்; இவர் கொங்குநாட்டில் பெருந்தலையூர் என வழங்கப்பெறும் பெருந்தலை என்ற ஊரினராதலின், பெருந்தலைச்சாத்தனார் என அழைக்கப் பெற்றார் என்பர் சிலர்; ஆவூர் மூலங்கிழார் மகனாராகிய பெருந்தலைச்சாத்தனாரும், இவரும் ஒருவரே என்று சிலர் கொள்கின்றனர்.

பெருந்தலைச்சாத்தனார் மிகப் பழைய காலத்திலேயே தெய்வத் தமிழ்ப்புலவராவர் என்று மக்களால் பாராட்டப் பெற்றுள்ளார் என்பது, "பெருஞ் சித்திரனார் செய்யுளும் ஔவையார் செய்யுளும், பத்தினிச் செய்யுளும் முதலாக வுடையனவெல்லாம் எப்பாற்படுமெனின், ஆரிடப்போலியென்றும், ஆரிடவாசகம் என்றும் வழங்கப்படுமென்க. இவைகளெல்லாம், இருடிகளல்லா ஏனையோராகி மனத்தது பாடவும், ஆகவும், கெடவும் பாடல்தரும் கபிலர், பரணர், கல்லாடர், மாமூலர், பெருந்தலைச்சாத்தர் இத்தொடக்கத்தாராலும், பெருஞ்சித்திரனார் தொடக்கத்தாராலும்

வறுமையிற் செம்மையே வாழ்வில் உயர்வளிக்கும்" குமணன் நாடிழந்து, ஓடிவந்து காட்டுள் உறையும் அக் காலத்தும், தன்கொடைக்குணத்தில் குறைந்தானல்லன். காட்டுள் வாழும் குமணனைச் சென்று கண்டார் பெருந் தலைச்சாத்தனுர்; குமணன், இரவலர் இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தவனுதலின், அவன் யாண்டுறையினும் கொடுப் பன் எனக் கருதினர்; மேலும் புலவர்தம் வறுமையின் கொடுமை, குமணன் வாழ்வது காட்டில் என்பதை மறக்கச் செய்தது போலும். அவர் வீட்டில் அடுப்பில் தீமூட்டிப் பலநாள் ஆயின; அதனுல் காளான் பூத்து உயர்ந்து விளங் கிற்று அவ்வடுப்பு; அவர் குழந்தை பசியால் வாடி, பாலின்றி வறண்டுபோன தாயின் மார்பைச் சுவைத்து ஆண்டுப் பால்பெருமையால் அழுதழுது வாடும்; குழந்தை யின் அழுமுகம் காணுந்தொறும் கண்கலங்கிநிற்பாள் அவர் மனைவி. இது புலவரின் வீட்டுநிலை. அவர் குமணனுக்குத் தம் வாழ்வின் சிறுமையினையும், அவன் பெருமையினையும் விளங்க உரைத்தார்; "இந்நிலையில், என் நிலையறிந்து கொடுப் போன் நீ ஒருவனே ஆதலின், நீ கொடுத்தாலன்றிப் போகேன்," என்று கூறி நின்ருர். தன் வறுமையும், தன் னைப் புரக்கவேண்டிய அவன் கடமையும்பற்றிப் பாடினுர்.

"ஆடுநனி மறந்த, கோடுஉயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத், தேம்புபசி உழவாப்,
பாஅல் இன்மையின், தோலொடு திரங்கி,
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொறு அழூஉம்தன் மகத்துமுகம் நோக்கி,
நீரொடு நிறைந்த ஈர்இதழ் மழைக்கண்என்
மனையோள் எவ்வம் நோக்கி, நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண!
என்நிலை அறிந்தனை ஆயின், இந்நிலைத்
தொடுத்தும் கொள்ளாது அமையலென்; அடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே." (புறம் : கசுச)

பெருந்தலைச் சாத்தனாரின் புலமையின் பெருமையும், அவர் வறுமையின் கொடுமையும் உணர்ந்தான் குமணன்; நாடாள் காலத்தே வந்திருந்தால் தான் விரும்பியன எல்லாம் அளித்து அனுப்பியிருப்பன். ஆனால், அரசிழந்து காடே அரண் என வாழும் இந்நிலையில், புலவர்க்குக் கொடுத்தற்குரிய பொருள் ஒன்றும் இல்லாமையுணர்ந்து வருந்தினான். 'ஈதல் இரந்தார்க்கு ஒன்று ஆற்றாது வாழ்தலின் சாதலும் கூடும்' என்பர் புலவர். புலவர்க்குப் பொருள் கொடாது வாழ்தலினும், இறந்து புகழ்பெறுதல் நன்றாம் எனக்கொண்டான்; தன் தம்பி, தன்னைக் கொன்று தன் தலையினைக் கொணர்வார்க்குப் பெரும்பொருள் கொடுப்பதாகப் பறைசாற்றியுள்ளதை அறிவான் குமணன். தன் தலையைக் கொடுத்தாவது புலவர்க்கு வேண்டும் பொருளைக் கொடுப்பது எனத் துணிந்தான்; புலவரை அழைத்தான்; தன் கைவாளை அவர் கையிற் கொடுத்தான். "அந்த நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்! இந்நாள் வந்து நீ நொந்தனை; தலைதனைக் கொண்டுபோய்த் தம்பிகைக் கொடுத்து, விலைதனைப் பெற்று வறுமைதீர் கவியே!" என உரைத்து நின்றான்.

குமணன் கொடைக்குணம் கண்டு வியந்து நின்றார் புலவர். கையில் கிடந்த வாளை நோக்கினார்; இவ்வாளால் இவன் தலையினைக் கொய்வதா? அத்தலையைக் காட்டிப் பெறும் பொருளால் என் வறுமை தீர்வதா? என்ன கூறும் இவ்வுலகம் என்று எண்ணினார்; சிந்தித்தார் சிறிது நேரம்; குமணன் கொடுத்த வாள், அவனைக் கொற்றவனாக் கட்டும்; இவ்வாளைக் காட்டி, இவன் வண்மையினை விளங்க உரைத்து இவன் தம்பியின் தவறும் இவன் தாழ்நிலையும் ஒருங்கே போகச்செய்வேன் என்று உறுதிகொண்டார்; விரைந்துசென்றார் அவன் தம்பியிடம்; "தன்னைப் பாடிநிற்கும் பாணர்க்கும், கூத்தர்க்கும் யானை பல அளித்துப் புகழ்பெற்றவன் நின் அண்ணன்; அவனைக்கண்டு பாடினேன் நான்; பாடிய எனக்குப் பொருள் அளிக்கமாட்டாத் தன் வறுமையின் கொடுமையினை, நாடிழந்த கொடுமையி

ஆரிடச் செய்யுள்போல, மிகவும் குறையவும் பாடப்படுவன எனக்கொள்க," என வரும் யாப்பருங்கல விருத்தி உரையால் விளங்கி நிற்றல் காண்க.

பெருந்தலைச்சாத்தனார், கொடைத்தொழிலால் சிறப்புற்ற குமணன், இரவலர் புரக்கும் குடிவந்த இளவிச்சிக்கோ, கடியநெடு வேட்டுவன், மூவன் ஆகிய குறுநிலத் தலைவர்களைப் பாடிப் பரிசில் பெற்றும், பயன்தரும் நல்லுரை வழங்கியும் உள்ளார்; இவருடைய பாக்கள் அகம், புறம், நற்றிணை ஆகிய சங்க இலக்கியங்களுள் இடம் பெற்றுள்ளன.

குமணன், முதிரம் என்னும் மலையினையும், அதைச் சார்ந்த சிறு நாட்டையும் ஆண்டிருந்த குறுநில மன்னனவன்; இம் முதிரமலை, பழனிமலைத் தொடர்கள் பலவற்றுள் ஒன்று; இம்மலையின் அடிவாரத்தே குமணமங்கலம் என்ற இவன் பெயர்கொண்ட சிற்றூர் ஒன்றும் உளது; இந்நாடு உடுமலைப்பேட்டையைச்சூழ அமைந்திருந்த சிறுநாடாம் என்று கொள்வது பொருந்தும். குமணன் கடையெழுவள்ளல்கட்குக் காலத்தால் பிற்பட்டவன்; ஆனால், கொடைக்குணத்தில் அவர் அனைவரினும் சிறந்தோன். தன்னைப் பாடிவரும் புலவருக்கும், பிற இரவலர்க்கும் இல்லையெனக்கூறி இழிநிலை பெறாது, உவப்பக் கொடுத்து உயர்நிலைபெற்று விளங்கினான். இவ்வாறு பண்பட்ட குடியில் வந்த குமணனுக்கு இளங்குமணன் என்றோர் இளவல் இருந்தான்; அவன் முற்றிலும் அண்ணனுக்கு மாறுபட்ட குணம் உடையவன்; குமணன் புகழும், பெருமையும் கண்டு பொறாமை கொண்டான்; குமணனைக் கொன்று நாட்டைத் தானே ஆளவும் வழிதேடினான்; தம்பியின் தகாச் செயலறிந்த குமணன், நாட்டைவிட்டுக் காட்டுச் சென்று வாழ்ந்திருந்தான்.

"ஒருபுடை பாம்பு கொளினும், ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்—திங்கள்போல்
செல்லாமை செவ்வன்நேர் நிற்பினும், ஒப்புரவிற்கு
ஒல்கார் குடிப்பிறந் தார்." (நாலடியார் : கசஅ)

னும் பெரிதாகக் கருதி வருந்திஞன். என் வறுமையும் தன் வாட்டமும் ஒருங்கேதீர, இதோ இவ்வாளைத் தந்தான். புலவர்க்குப் பொருள் பெற்றுத்தரத் துணைபுரியும் தன் தலையினை வெட்டத் துணைபுரியும் இவ்வாளன்றி வேறு சிறந்த பொருள் அவன்பால் இன்மையறிந்து யானும் அவ் வாள் பெற்று மகிழ்ச்சியால் இவண் வந்து நிற்கிறேன்; வேந்தே! இவ்வாள் கொண்டுசென்று அவன் தலையினைக் கொணர்ந்தால் பெரும்பொருள் கொடுப்பது உறுதியோ?" என்று கூறியதோடு அமையாது, அவன் உள்ளம் உடைந்து உருகுமாறு, "வேந்தே! நிலையில்லாதது இவ் வுலகம்; நிலையில்லாத இவ்வுலகில் பிறந்த பெரியோர்கள், தம் புகழ் நிலைத்துநிற்கும் செயல் பல ஆற்றி, தம் உடல் கெட்டு மறைந்தனர். பெருஞ்செல்வம் பெற்றிருந்தாரும், தம்மிடம் வந்து இரப்பார்க்கு ஈந்து அறியாமையால் இறந்து இடமறியமாட்டாது மறைந்தனர்; இதுதான் உலகியல்," என்று அறிவுரை கூறுவார்போல், இடித்துக் கூறினர்:

'மன்னு உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம்மாய்ந் தனரே;
துன்னரும் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு ஈயா மையின்
தொன்மை மாக்களின் தொடர்புஅறி யலரே;
தாள்தாழ் படுமணி, இரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனெ ஞகக் 'கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல், என்
நாடுஇழந் ததனினும் நனிஇன் னுது' என
வாள்தந் தனனே தலையெனக்கு ஈய,
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்;
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் பூட்கைநின் கிழமையோன் கண்டே."

(புறம்: கசுரு)

புலவர் காட்டிய வாள் இளங்குமணன் ஆணவத்தை யும், அறியாமையினையும் வெட்டி வீழ்த்திற்று; தன் பிழை உணர்ந்தான்; அண்ணன் அடிபணிந்து அரசியலை ஏற்றுக் கொள்ள வேண்டினான்; புலவர் பொருள் பெற்றார்.

இனி, குமணன் வாள்பெற்ற பெருந்தலையார், அவ் வாளோடு அவன் தம்பியிடம் செல்லாமல் மாந்தை என்ற ஊரில் வாழும் ஒரு சிற்பியால் சென்று குமணன் தலை போன்ற ஒரு செயற்கைத் தலையினைச் செய்து பெற்றுக் கொண்டு, அவன் தம்பிபால் சென்று காட்டி அவன் உள்ளத்தை மாற்றி மகிழ்ந்தார் என்றும் கூறுவர்.

புலவர் பெருந்தலைச் சாத்தனார் பிழைசெய்தார் பேரரசர் என்றும் பாராது, அவர் செய்த தவற்றினைப் பலரும் அறியத் தூற்றிப் பழிப்பதோடு அவரை மதியாது சிறுமைப் படுத்தவும் அஞ்சாத நெஞ்சுடையவர்.

தோட்டி என்ற மலைக்கும், அதைச் சூழஉள்ள நாட் டிற்கும் உரிமைபூண்டு நள்ளி என்பான் ஒருவன் வாழ்ந் திருந்தான்; அவன் கண்டீரக் கோப்பெருநள்ளி எனவும் அழைக்கப் பெறுவான்; கடையெழுவள்ளல்களுள் ஒருவன் என்ற பாராட்டைப் பெற்றவன். தன் நாடு நோக்கி வரு வார்க்கு யானையும், தேரும், பொன்னும், பொருளும் அளித்துப் போற்றும் இயல்பினன். இவன் நாட்டில் இல்லாக் காலத்தில், இவன் நாடுநோக்கிச் செல்வார்க்கு இவன் பெண்டிரே பரிசில் அளிப்பர்; இவனுக்கு இளங் கண்டீரக்கோ என்னும் அரிய தம்பியொருவன் இருந் தான்; அவன் இளவிச்சிக்கோ என்பானோடு நட்புக்கொண் டிருந்தான். விச்சி என்றொரு மலையுண்டு; அதைச் சூழ இருந்த நாடு விச்சிநாடு எனப்படும். அம்மலையையும், அந் நாட்டையும் விச்சியர் என்ற ஓர் அரச இனத்தார் ஆண்டு வந்தனர். அக்குடியில் வந்தவனே இளவிச்சிக்கோ; பெண் கொலைபுரிந்த நன்னன் பிறந்ததும் இக்குடியே; இக்குடியில் வந்தானொருவன், புலவர் பாடி நிற்கவும் அவர்க்குப் பொருள் அளித்துப் போற்றுவதற்கு மாறாகக் கதவடைத் துப் பழிகொண்டிருந்தான்.

ஒருநாள், இளங் கண்டீரக்கோவும், இளவிச்சிக் கோவும் ஒன்றுகூடி யிருக்கையில், புலவர் பெருந்தலையார் கண்டார்; இருவரும் அவரை மனங்கனிந்து வரவேற்றனர்; ஆனால் புலவர், இளங்கண்டீரக்கோவை அன்பால் தழுவி அமர்ந்தார். இளங் கண்டீரக்கோவைப் புல்லிய புலவர், தன்னைத் தழுவாதுநின்ற செயல் இளவிச்சிக் கோவைப் பெரிதும் வருத்திற்று; தன் முன்னோர் இயல் பறியா இளைஞனாகிய அவன், புலவரைப் பணிந்து, "பெரியீர்! அவனைப் புல்லிய நீவிர், என்னைப் புல்லாதொழிந்ததேனோ?" என்று வினவினான். உடனே, புலவர் "இக்கண்டீரக்கோவின் குடிவந்தோர் வண்மையாற் புகழ் பெற்றோராவர்; இவன் நாட்டில் மனைக்கிழவர் வேற்றூர் சென்றிருப்பின், மனைக்கிழமை பூண்டிருக்கும் மகளிர், தம் கணவர் இல்லையே என்று கருதாது, தம் மனைநோக்கி வருவார்க்குத் தாமே பரிசளித்து அனுப்புவர்; இவ்வாறு புகழ்நிறைந்த குடிவந்தோன் ஆதலின், இளங்கண்டீரக் கோவைப் புல்லிப் பெருமை செய்தேன்; நீயோ, பெண் கொலைபுரிந்த நன்னன் வழிவந்தவன்; பாடி வந்தார்க்கு வாயில் அடைத்த பழியுடையது நின் குடி; அக் குடியில் வந்தோன் நீயாதலின், நின்னைப் புல்லேனாயினேன்," என்று கூறி, அவன் குடியின் குறையை எடுத்துக்காட்டினார் :

"பண்டும் பண்டும் பாடுநர் உவப்ப
விண்தோய் சிமைய விறல்வரைக் கவாஅன்
கிழவன் சேட்புலம் படரின், இழை யணிந்து
புன்தலை மடப்பிடி பரிசி லாகப்
பெண்டிரும் தம்பதம் கொடுக்கும் வண்புகழ்க்
கண்டீ ரக்கோன் ஆகலின், நன்றும்
முயங்க லான்றிசின் யானே; பொலந்தேர்
நன்னன் மருகன் அன்றியும், நீயும்
முயங்கற் கொத்தனை மன்னே! வயங்குமொழிப்
பாடுநர்க்கு அடைத்த கதவின், ஆடுமழை
அணங்குசால் அடுக்கம் பொழியும் நும்
மணங்கமழ் மால்வரை வரைந்தனர் எமரே."

(புறம் : ௧௫௧)

புலவர் வறுமையிற் செம்மை யுடையராவர்; தாம் வறுமையால் வாடிய காலத்திலும், பொருள் தருவார் விரும்பித் தாராதவழி, அப் பொருளைப்பெற்று வாழ நினைவாரல்லர்; அவ்வாறு அளிப்பார் அரசருள் அரசரே ஆயினும், அவர் பொருள்பெற நினையார். புலவர்தம் இப் பண்பு, பண்ணி எனவும், கடியநெடு வேட்டுவன் எனவும், வழங்கப்பெறும் கோடைப் பொருநன் என்பானைப் பாடிய பாட்டொன்றால் நன்கு விளங்குகிறது.

மதுரை மாவட்டத்தில் கோடைக்கானல் என இன்று அழைக்கப்பெறும் மலைக்குச் சங்க காலத்தில் கோடைமலை என்பது பெயர்; அம் மலை பண்ணி என்பானுக்கு உரியது; அவன் அம் மலைக்கு உரியனாதலறிந்து அவனைக் கோடைப் பொருநன் என்றும், அழைப்பர்: கோடை மலைக்கு அடிவாரத்தே உள்ள கடியம் என்ற சிற்றூரையும் உரிமை கொண்டிருந்ததாலும், வேட்டை யாடுவதில் வன்மைபெற்று விளங்கியதாலும் கடிய நெடு வேட்டுவன் என்றும் சிலர் அழைப்பர்; இவன் பாண்டிய வேந்தர்பால் படைத்தலைமைத் தொழில் மேற்கொண்டிருந்தான்; யானைகளைப் பிடித்துப் பழக்குவதில் பண்பட்டவன். பெரிய கொடையாளி; யானைகளுக்குப் போர்ப்பயிற்சி அளிக்கும் அச் சிறுகாலம் நீங்க, எஞ்சியுள்ள நாள்முழுதையும், இரவலர்க்கு ஈதல் தொழில் மேற்கொண்டே கழிக்கும் கழிபெரும் கைவண்மை யுடையவன். பண்ணன் இன்னனாதல் அறிந்து, புலவர் பெருந்தலைச் சாத்தனார், அவன்பாற் சென்று,

> "திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்
> குழியிற் கொண்ட மராஅ யானை
> மொழியின் உணர்த்தும் சிறுவரை யல்லது
> வரைநிலை யின்றி இரவலர்க்கு ஈயும்
> வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்
> பண்ணி." (அகம்: கஙு)

என்று அவன் புகழ்கூறிப் பாராட்டினார். கடியநெடு வேட்டுவன், யானைகளுக்குப் பயிற்சி அளிக்கும் வேலை மிகுதி

யாலோ அல்லது வேறு எக் காரணத்தாலோ, புலவர்க்குப் பரிசில் தந்து விடைதராது நீட்டிப்பாணுயிஞன்: சாத்த ஞர்க்கு வருத்தம் உண்டாயிற்று: "பேரரசர்கள் எப் போதும் புலவர்க்குப் பொருள் பல அளிப்பர் ஆயினும், அவர் அப்பொருளை உளம் மகிழ்ந்து அளிக்காமையால், புலவர்கள் அப்பொருளை வாங்காது வறிதே மீளுவர்; அப் பேரரசர் போன்றவனல்லன் நீ; நின்னைப் பாடிவரும், பாணரும், கூத்தரும், பொருநரும், புலவரும், மழைபெய்ய வேண்டிக் கடலில் படிந்த மேகங்கள், அக் கடல்நீரைக் குடித்தலின்றி மீளாதவாறுபோல் நின்பால் பொருள் பெற் றன்றி மீளார், என்ற நின் பண்புணர்ந்தே புலவர்கள் நின் னைப் பாடினர்; யானும் பாடினேன்: ஆனல், பொருள் பெறலின்றி வறிதே மீளுமாறு நீட்டித்தனை; அதனல் வருந்திச் செல்கின்றேன்," என் உளம்கொண்ட வருத்த மிகுதியால் வாய்வந்தன உரைத்து மீளத் தொடங்கினர்; அவ் வருத்தத்தோடு, தன் வருத்த மிகுதியால் அவனுக் குக் கேடுண்டாமோ என்ற அச்சமும் தோன்றிற்று; வரைநிலையின்றி இரவலர்க்கீயும் அவன் வருந்துதல் கூடாது என்று எண்ணினர்; உடனே, "அவன் நோயின்றி வாழ் வானுருக!" என்று வாழ்த்திக்கொண்டே வழிநடந்தார். புலவர்தம் பெருமையும், பிழைகண்டு பொறுக்கும் அரு மையும் என்னே!

"முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின் றீதல் யாம்வேண் டலமே;
.............................................
நோன்சிலை வேட்டுவ! நோயிலை ஆகுக!
ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்
கடல்வயின் குழீஇய அண்ணலங் கொண்மூ
நீரின்று பெயரா ஆங்குத் தேரொடு
ஒளிறுமருப் பேந்திய செம்மல்
களிறின்று பெயரல பரிசிலர் கடும்பே" (புறம்: உ0௫)

புலவர் பெருந்தலைச் சாத்தஞர், தம் பாடல் கேட்டு மகிழ்ந்து பரிசில் அளியாது நீட்டிப்பார் செயல் கண்டு

வருந்தும் இயல்பினர்; இவ்வாறு தமக்கு நேர்ந்த இழி வினைப் பிறர் அறிதற்கு அஞ்சும் அறிவுடையார் என்பது அவர் மூவன் என்பானைப் பாடிய பாட்டால் விளங்குகிறது. சேரமான் கணைக்கால் இரும்பொறையொடு பகைத்து இருந்தான் மூவன் என்பானொருவன்: இரும்பொறை, அம் மூவனை வென்று, அவன் பல்லைப் பிடுங்கிக்கொணர்ந்து தன் தொண்டிநகர் வாயிற்கதவில் வைத்து இழைத்து வெற்றிவிழாக் கொண்டாடினன். புலவர் பெருந்தலைச் சாத்தனார் பாராட்டியது இந்த மூவனோ அல்லது அவன் வழிவந்தவனோ, தெரிந்திலது; ஆயினும், இவர் பாராட்டிய மூவனும் நல்லுணர்வுடையனல்லன் என்பது மட்டும் உறுதி; மூவன், நெய்தல் நிலத்தைச் சார்ந்த மருதவளம் நிறைந்த நாட்டிற்கு உரிமை பூண்டிருந்தமையால் செல்வச் செருக்குற்றும், மகளிர் பலரை மணந்து அவர் உறவு அன்றி, அறிந்தோர் உறவினைப் பெறுமையால் பண்பிழந்தும் விளங்கினன்; மூவன் இன்னனாதல் அறியாத புலவர் அவனைச் சென்று பாராட்டினர்; பெருமலைச் சாரலிலே நிற்கும் மரம் பழுத்துநிற்கும்; உண்டு வாழலாம் என்ற வேட்கையால், வருத்தம் பாராது பறந்துவந்த பறவை யினம், வந்து நோக்கியவழி, அம் மரம் பழம் ஒழிந்து நிற்பதைக் கண்டு வருந்தி வாடுவதேபோல், மூவன், பரிசிலர்ப் போற்றும் பண்பினன் என எண்ணித் தம் வறுமையின் கொடுமையால் வழிவருத்தம் பாராது வந்து அவனைப் பாடியக்கால், அவன் பொருள் அளியாதுவிட்ட செயல் கண்டு வருந்தினார்; அவன் பொருள் அளிக்காப் புன்மை கண்டு வருந்துவதினும், தமக்கு நேர்ந்த இவ் இழி வினை ஏனைப் புலவர்களும், அரசர்களும் அறியின் என்னும் தம் புகழும் பெருமையும் என்பதற்கே, பெரிதும் வருந்தினார்; பாடிய தமக்குப் பொருள் தாரா அவனை மீண்டும் கண்டு "பொருள் அளித்தாயல்லை என்று யான் வருந்துகின்றேன் அல்லேன்; அதனால் கேடு வந்துறுமோ என்றும் அஞ்சற்க! நீ நோயின்றி வாழ்வாயாக! ஒன்றுமட்டும் கேட்டுக்கொள்கின்றேன்; இவ்வாறு பொருள் அளியாதுவிட்ட இச் செயல் நினக்கும், எனக்குமட்டுமே

தெரிவதாக; பிறர் உணரும்வண்ணம் உரையாதிருப்பாயாக,'' என்று வேண்டி மீண்டார்.

> ''மென்புல வைப்பின் நன்னாட்டுப் பொருந!
> பல்கனி நசைஇ அல்குவிசும்பு உகந்து
> பெருமலை விடரகம் சிலம்ப முன்னிப்
> பழனுடைப் பெருமரம் தீர்ந்தெனக் கையற்றுப்
> பெறாது பெயரும் புள்ளினம் போலநின்
> நசைதர வந்துநின் இசை நுவல் பரிசிலேன்
> வறுவியேன் பெயர்கோ? வாள்மேம் படுந
> ஈயாய் ஆயினும் இரங்குவேன் அல்லேன்;
> நோயிலை ஆகுமதி! பெரும! நம்முள்
> குறுநணி காண்குவ தாக,'' (புறம் : ௨0௯)

புலவர் பெருந்தலைச்சாத்தனார் காதலர் அன்புபற்றி விளக்கியுள்ள திறம் வியக்கத் தக்கதொன்றாம். தன் மனைவியோ பேரன்பினள்; பேரழகும்பெற்றவள். அவளைப் பிரிந்து தான் வாழ்வதோ, தன்னைப் பிரிந்து அவள் வாழ்வதோ இயலாது; காலமும் பிரிவின்றிக் கலந்து வாழ வேண்டிய காலமாம்; ஆனால் உடன் உறை வாழ்வு இயலாத ஒருநிலை வந்துநிற்கிறது. வறுமையால் வாடிய சிலர், தம் மனைநோக்கிவந்து இரந்து நிற்கின்றனர். வாழ்வின் பயன், அவர்க்கு வேண்டுவ அளித்துப் போற்றுவதே ஆகும். ஆனால் தன் மனையிலோ அவர்க்குக் கொடுத்தற்காம் பொருள் குறைந்துவிட்டதைக் காண்கின்றான்; அப்பொருள் இல்லாமையால், தன் வாழ்வின் பயன் குன்றுமே என அஞ்சுகின்றான்; அவ்வச்சம் அவர்கள் அன்பை மறக்கச்செய்கிறது; அப்பொருள்தேடிப் புறப்படுகின்றான். அந்நிலையில் அவன், ''இவளைப் பிரிந்துசென்று பொருள் தேடிக் கொணர்க என்று துரத்தும் இவ் வறுமையின் கொடுமையே கொடுமை! இவ்வறுமையின் கொடுமை அம்மம்ம! அரிது! அரிது!'' என்று கூறித் துயருற்றான் என்று பாடிய புலவரின் பொன்னுரைகளைப் போற்றுவாம்.

> ''இவளின் தீர்தும்ஆள் வினை வலிப்பப்
> பிரிவன் நெஞ்சு என்னும் ஆயின்
> அரிதுமன் றம்ம! இன்மையது இளிவே.'' (நற் : ௨௬௨)

## உக. பெருந்தோட் குறுஞ்சாத்தன்

ஐயனார்க்குரிய பெயராகிய சாத்தன் என்ற தெய்வப் பெயரைத் தம் இயற்பெயராகக்கொண்ட இப்புலவர், பெரிய தோளையும், குறுகிய வடிவினையும் பெற்றிருந்தமையால், அக்கால மக்களால் பெருந்தோட் குறுஞ்சாத்தன் என அழைக்கப்பெற்றார்.

இவர் குறிஞ்சிநில வளங்களைக் கண்டு, கண்டாங்கே வரைந்து காட்டியுள்ளார். மிக உயர்ந்த மரங்களைக் கொண்ட ஒரு பெரிய வாழைத்தோட்டத்தினுள் ஆண் யானை ஒன்றும், பெண் யானை ஒன்றும் நுழைந்து செல்லலாயின. வாழை மரத்தின் சுருண்டு தோன்றிய குருத்து ஒன்று, ஆண் யானையின் மத்தகத்தின்மீது அசைந்து வீழ்ந்து அதைத் தடவிக்கொடுத்துவிட்டது. வாழையால் யானையின் வலிகெடும் ஆதலின், வாழை தொடப்பெற்ற ஆண் யானை தன் ஆற்றல் குன்றி அறிவிழந்துபோய்விட்டது. ஆண்யானைக்குண்டான துயர்கண்ட பெண் யானை பெருமூச்செறிந்து வருந்தி, அதைப் பையப்பைய, அருவிநீர் வீழ்ந்தோடும் மலைச்சாரற்கண் அழைத்துச்சென்று, படுக்க வைத்து, அதன் முதுகைத் தன் கையால் மெல்லத் தடவிக் கொடுத்தது. பெண் யானையின் இவ் அன்பாலும் அருவிநீர் ஒலியாலும் ஒருவாறு துயர்நீங்கிய ஆண் யானை சிறிது துயில்கொள்ளத் தொடங்கிற்று. யானைகளின் இத்தகைய அன்பு வாழ்க்கையினை விளங்கக்காட்டும், புலவர் அறிவின் அழகினை அறிந்து மகிழ்வோமாக!

"சோலை வாழைச் சுரி நுகும்பு இனைய,
அணங்குடை அருந்தலை நீவலின், மதன் அழிந்து
மயங்கு துயர் உற்ற மையல் வேழம்,
உயங்கு உயிர் மடப்பிடி, உலைபுறம் தைவர
ஆம்இழி சிலம்பின் அரிதுகண் படுக்கும்."

(குறுந் : ௩0௮)

## உஉ. பேரெயில் முறுவலார்

பேரெயில், ஓர் ஊர்; முறுவல், புன்னகை; இவர் பேரெயிலிற் பிறந்து, புன்னகை தவழும் இன்முகம் கொண்டு வாழ்ந்தமையால், இவர் பேரெயில் முறுவலார் என அழைக்கப்பெற்றார். பேரெயில் என்ற பெயருடைய ஊர்கள் தமிழ்நாட்டில் பல உளவாம். கானப்பேரெயில் என்றோர் ஊர் இருப்பதையும் உணர்க. பாண்டிநாட்டில் வெண்புலநாட்டில் ஒரு பேரெயில் உளது. முறுவலார், நம்பி நெடுஞ்செழியன் என்ற பாண்டிநாட்டான் ஒருவனைப் பாராட்டியிருத்தலால், இவர் பாண்டிநாட்டுப் பேரெயிலைச் சேர்ந்தவராவர் என்று கூறுவர் சிலர். இவர் பாராட்டிய படைத்தலைவன் பெயர், நம்பி நெடுமொழியன் எனவும் ஏடுகளில் காணப்படுவதைக் கொண்டு, தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள நெடுமொழியன் என்ற ஊர்ப் பெயருடையானைப் பாராட்டியுள்ளமையால், முறுவலார் சோழநாட்டில் காவிரியின் தென்கரைக்கண் உள்ள தேவாரம் பெற்ற பேரெயிலில் பிறந்தவராவர் என்று கூறுவர் வேறு சிலர். பேரெயில் முறுவலார் என்ற பெயர் ஊராலும், உறுப்பாலும் வந்ததன்று; முப்புரங்களாகிய பேரெயில்களைத் தமது முறுவலால் எரித்துப் பேரெயில் முறுவலார் என்று பெயர் பூண்ட சிவபெருமான் பெயரையே தமக்கும் பூண்டவர் இவர் என்று கூறுவாரும் உளர்.

பேரெயில் முறுவலார் பாராட்டிய நம்பி நெடுஞ்செழியன் ஒரு குறுநிலத் தலைவனாவன்; முடியுடை மூவேந்தர்க்கு அறிவானும், ஆற்றலானும் துணைபுரிந்தார், அம் மூவேந்தர் பெயர்களையே தாமும் கொண்டு சிறப்படைதலும் உண்டு; அவ்வாறு பாண்டியருள் சிறந்தானாகிய நெடுஞ்செழியனுக்குத் துணைபுரிந்து சிறப்புற்றமையால், இத்தலைவனும் நெடுஞ்செழியன் எனப் பெயர்பெற்றான். ஆடவருட் சிறந்தாரை நம்பி என்றலும், பெண்டிருட்

சிறந்தாரை நம்பி என்றலும் பண்டையோர் வழக்கு. முறுவலார் பாராட்டிய நெடுஞ்செழியன், அக்கால ஆடவரும் போற்றும் அருங்குணமுடையானாதலின், நம்பி நெடுஞ்செழியன் எனச் சிறப்பிக்கப்பெற்றுள்ளான். நம்பி நெடுஞ்செழியன் ஆடவரிற் சிறந்தான் என்பதைப் புலவர் முறுவலார் மிகமிகத் தெளிவாக எடுத்துக்காட்டி உறுதி செய்துள்ளார்.

நம்பி நெடுஞ்செழியன், அழகிய மனைவியை மணந்து அவளால் பெறும் இன்பமும் கொண்டான்; காவற்காட்டு மலர் அணிந்தும், கடிமணம் நாறும் சந்தனம் பூசியும் காண்பார் களிக்கும் கவின்பெற்றான்; பகைவர் குடியைப் பாழ்செய்தான்; நண்பர் புகழை நாவாரப் பாராட்டினான்; என்னினும் வலியர் என் பகைவர் எனப் பயந்து பணிவதோ, என்னினும் எளியர் இவர் என இகழ்வதோ அவன்பால் இல்லை; பிறர்பால் சென்று பொருள்வேண்டி இரத்தலோ, தன்பால் வந்து இரந்து நிற்பார்க்கு மறுத்தலோ செய்தறியான் அவன். அரசர் கூடிய அவைக் களத்தே தன் ஆற்றலும், அறிவும் தோன்றக் காட்டிப் புகழ்பெற்றான். தன்னைத் தாக்கிய பகைவர் படையினைத் தடுத்து நிறுத்தி வெற்றிகொண்டான்; தோற்றுப் புறங் காட்டும் பகைவரைப் பார்த்து நிற்றலன்றிப் படை தொடாது நின்று வீறுகொண்டான். பாய்ந்து செல்லும் பல பரி ஊர்ந்தான்; தேர் பல ஏறித் தெருவில் உலா வந்தான். கடுமதக் களிறுகள் காலடிக் கீழ்ப் பணியுமாறு ஏவல்கொண்டான்; பாணர் பசிபோகப் பலப்பல வழங்கினான்; காய்தல் உவத்தல் அகற்றி ஆய்ந்து அறம் உரைத்தான். சுருங்கக்கூறின், நல்லோர்பால் காணலாம் நற்பண்புகளெல்லாம், நம்பி நெடுஞ்செழியன்பால் பொருந்தியிருந்தன.

இவ்வாறு, "நம்பி" "நல்லவன்" என்று நாட்டாரால் போற்றப்படும் புகழ் நிறைந்த நெடுஞ்செழியன் இறந்துவிட்டான் என்பதை அறிந்தார் முறுவலார்; அவன் பிரிவு ஒருபால் பெருந்துயர் தந்தது எனினும், அவன் செய்வன

வெல்லாம் செய்து நிறைந்த வாழ்வினன் ஆனவன் என்ற எண்ணம் அத்துயரைச் சிறிது குறைத்தது; அந்நிலையில், "நம்பி நெடுஞ்செழியன் வாழ்வாங்கு வாழ்ந்தவனவன்; அவன் உடலை வாள்கொண்டு வெட்டிப் புதைப்பதால் புகழோ, அவ்வாறின்றிச் சுடுவதால் பழியோ அவனுக்கு இல்லை; அவன் புகழால் நிறைந்துவிட்டான்; ஆதலின், வேண்டியவாறு செய்வீர்களாக," என்று கூறித் தம் ஆற்றுமையினைக் காட்டினார்.

நம்பி நெடுஞ்செழியனைப் பாராட்டுவார்போல், நாட்டில் நல்லவராய் வாழ விரும்புவோர்க்கு வழிகாட்டிய புலவர்க்கு நன்றிசெலுத்துவோமாக!

"தொடியுடைய தோள் மணந்தனன்;
கடிகாவின் பூச்சூடினன்;
தண்கமழும் சாந்து நீவினன்;
செற்றோரை வழிதபுத்தனன்;
நட்டோரை உயர்பு கூறினன்;
வலியர்என வழிமொழியலன்;
மெலியர் என மீக்கூறலன்;
பிறரைத்தான் இரப்பறியலன்;
இரந்தோர்க்கு மறுப்பறியலன்;
வேந்துடை அவையத்து ஓங்குபுகழ் தோற்றினன்;
வருபடை எதிர் தாங்கினன்;
பெயர்படை புறங் கண்டனன்;
கடும்பரிய மாக்கடவினன்;
நெடுந் தெருவில் தேர்வழங்கினன்;
ஓங்குஇயல களிறு ஊர்ந்தனன்;
தீஞ்செறி தசும்பு தொலைச்சினன்;
பாண்உவப்பப் பசி தீர்த்தனன்;
மயக்குடைய மொழி விடுத்தனன்; ஆங்குச்
செய்ப எல்லாம் செய்தனன்; ஆகலின்
இடுக ஒன்றோ; சுடுக ஒன்றோ;
படுவழிப் படுக! இப் புகழ் வெய்யோன் தலையே."

(புறம் : உகக)

தாம் விரும்பிய காதலரைப் பெறமாட்டாமல் காம நோய்மிக்க காலத்தில், மக்கள் தங்களுக்கு இயல்பான அறிவையும் ஒழுக்கத்தையும் இழந்து, சீலமல்லன செய்ய வும் துணிவர் என்ற உண்மையினைத் தான் காதலித்த பெண் ஒருத்தியைப் பெறமாட்டாமையால், மடல்ஊர்த லும், வரைபாய்தலும் ஆய பழிதரும் செயல்களை மேற் கொண்ட தலைவன்வழியாக உலகிற்கு உணர்த்தியுள்ளார். உணர்த்திய அப்பாட்டில், மடலூர் வகையினையும் விளக்கி யுள்ளார்.

"மாவென மடலும் ஊர்ப; பூவெனக்
குவிமுகிழ் எருக்கம் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப; காமம்காழ்க் கொளினே." (குறுந் : கஎ)

புலவர் பேரெயில் முறுவலார், தாம் சொல்லக்கருதும் செய்திகளைச் சிறு சிறு சொற்றொடர்களால் விளக்கும் திறம் வியக்கத்தக்கதாம்.

## உ௬. மடல் பாடிய மாதங்கீரனார்

மாதங்கீரனார் என்ற இயற்பெயரினராய இவர் மடலேறுதல் என்ற துறையை விளங்கப் பாடிய சிறப்பால் மடல்பாடிய மாதங்கீரனார் என்று அழைக்கப்பெற்றார்.

தான் விரும்பிய தலைவி யொருத்தியைப் பெறமாட்டாமையால் காமம் மிக்க தலைவன் பனைமடலால் குதிரையைப் போல ஓருருவம் அமைத்து, அதன் கழுத்தில் மணி, மாலை முதலியவற்றைப் பூட்டித், தன் உடல் முழுதும் நீறு பூசிக் கொண்டு, எருக்கமாலை, ஆவிரம்பூமாலை, வெள்ளென்பு ஆகியவற்றையும் அணிந்துகொண்டு, தன் உருவத்தையும் தலைவியின் உருவத்தையும் ஒரு படத்தில் எழுதிக் கையிலேந்திக்கொண்டு, தலைவியின் ஊரார் யாவரும் அறியுமாறு ஊர்ந்து வந்து மன்றம் சேர்வன். அங்ஙனம் அவன் வருவதைக்கண்ட ஊரினர் அவன் கையில் ஏந்திய படத்தால், 'இவளுக்கும், இவனுக்கும் நட்பு உண்டு' என அறிந்து பழி கூறுவர்; நாண் இழந்து மடலேறி மன்றம் புகுந்த தலைவனே, 'இன்னள் செய்தது இது' என வெளிப்படக் கூறுதலும் உண்டு; அதுகேட்ட சான்றோர், அவனுக்கு அவளை மணம்புரிவிக்கத் துணைபுரிவர்; ஊரார் கூறும் பழியுரைகேட்டுத் தம் மகளைத் தமரே முன்வந்து அவனுக்கு மணஞ்செய்து தருதலும் உண்டு. இந்நிகழ்ச்சியே மடலேறுதல் என நூல்களில் வழங்கப்பெறும்; தலைவன் மடலேறி மணம்புரிதல் அன்புடைக் காமமாகாது, பெருந்திணையின்பாற்படும் ஆதலின், அவன் 'மடலேறி மன்றம் புகுவேன்' என்று கூறுதலன்றி, மடலேறுதல் வழக்கமன்று; தலைவனாயின் 'மடலேறுவன்' என்பதுவது கூறுவன்; தலைவி அதையும் கூறாள்; கூறுதல் அவள் பெண்மைக்கு இழுக்காம் என்று கூறுவர் ஆசிரியர் தொல்காப்பியனார்.

மடல்பாடிய மாதங்கீரனார், தாம் பாடிய இரண்டு செய்யுட்களிலும், இம்மடலேறற் பொருளையே கொண்டு பாடியுள்ளார்.

"விழுத்தலைப் பெண்ணை விளையல் மாமடல்
மணியணி பெருந்தார் மரபிற் பூட்டி,
வெள்ளென்பு அணிந்து, பிறர்எள்ளத் தோன்றி,
ஒருநாள் மருங்கில், பெருநாண் நீக்கித்
தெருவின் இயலவும் தருவது கொல்லோ
கலிழ்ந்தவிர் அசைநடைப் பேதை
மெலிந்திலள் நாம்விடற்கு அமைந்த தூதே."

(குறுந் : ௧௮௨)

தலைவியின் ஒளிவீசும் சிறிய நெற்றி, கரிய கூந்தல் சூழ விளங்கும் காட்சி, ஆகாயத்தில் பாம்பினால் சிறிதே விழுங்கப்பெற்று விளங்கும் திங்களின் காட்சியை நினைப் பூட்டும் என்று கூறியிருப்பது அழகாக உளது.

"மடல்மா ஊர்ந்து மாலை சூடிக்
கண்ணகன் வைப்பின் நாடும் ஊரும்
ஒள்நுதல் அரிவை நலம்பா ராட்டிப்
பண்ணல் மேவலம் ஆகி அரிதுற்று
அதுபிணி ஆக விளியலம் கொல்லோ
அகல்இரு விசும்பின் அரவுக்குறை படுத்த
பசுங்கதிர் மதியத்து அகல்நிலாப் போல,
அளகம் சேர்ந்த சிறுநுதல்
கழறும் மெலிக்கும் நோயா கின்றே." (நற் : ௩௭௭)

## உச. மலையனார்

இவர் பெயரோ அல்லது ஊரோ ஒன்றும் தெரிந்திலது; தலைமகனுக்குரிய மலையைப்பற்றிக் கூறுங்கால், அம்மலையில் உள்ள மரக்கிளைகள்தோறும் தேனிறாலும் குலைகுலையாகப் பழங்களும் தொங்கும்; வரையிலிருந்து விழும் அருவி, மாலைபோல் தோன்றி அழகு தரும்; நெல்லு, புல்லு முதலாகிய பதினறுவகைக் கூலப்பயிர்களும் வளமாக வளர்ந்து விளங்கும்; இதனால், அம்மலை எக்காலமும் வளம்பல பெற்று விளங்கும் மாண்புடையதாம் என்று மலைவளம் தோன்றப் பாடிய சிறப்பால், இவர் மலையனார் என்று பெயர்பெற்றார் என்று கூறுப.

"பிரசம் தூங்கப், பெரும்பழம் துணர,
வரைவெள் அருவி, மாலையின் இழிதரக்,
கூலம் எல்லாம் புலம்புக, நாளும்
மல்லற்று அம்ம! இம்மலைகெழு வெற்பு." (நற் : கக)

தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள, பெண்ணையாற்றுப் பாய்ச்சலைக்கொண்ட, திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்ட மலாடு, மலையமானடு எனப் பெயர் கொண்ட நாட்டை ஆண்டுவந்தவர்கள் மலையமான்கள் எனப்படுவர்; அக்குடியிற் பிறந்தோன் மலையன் எனவும் அழைக்கப்பெறுவன்; அத்தகைய மலையன்களில் ஒருவரே நம் புலவர் என்று கூறுவாரும் உளர்.

வரையாது வந்தொழுகும் தலைமகன்பால், "தலைவ! யாங்கள் வீடு செல்கின்றோம்; ஆதலின் இனி, பகற்குறிக்கண் இவளைக் காண்டல் இயலாது; இவள் நின் மணமுரசு ஒலியினை விரைவில் கேட்டல் வேண்டும்; அதைக் கேளாது நெடிதுநாள் வாழாள்," என்று கூறி வரைவுகடாவும் துறையமைந்த செய்யுளைப் பாடியுள்ளார்.

## உரு. வண்ணப்புறக் கந்தரத்தனார்

"வண்ணப் புறவின் செங்கால் சேவல்," எனப் புறாவினை வண்ணப்புறா என்று பாராட்டிய சிறப்பு நோக்கி, அவ் வழகிய தொடரை, அவர் இயற்பெயராகிய கந்தரத்தனார் என்பதோடு கூட்டி வழங்கியுள்ளனர்.

தலைவன் ஒருவனோடு காதல் உறவுகொண்ட காரணத்தால், தலைமகள், தன் பண்டை இயல்பில் மாறுபடலாயினாள்; அவள்பால் முன்பு காணலாம் அருளையும், அன்பையும், சாயலையும், இயல்பையும் இப்போது காண்டற்கு இயலாது போயிற்று; அவள், கிளியிடத்தும், பந்தும் கழங்குமாய விளையாட்டிடத்தும் காட்டிய விருப்பத்திற்கு மாறாக, அவற்றை வெறுக்கத் தொடங்கினாள்; தலைமகள் பால் காணும் இம் மாற்றம், அவளை வளர்த்த செவிலிக்கு, உயிர்போகும் வருத்தத்தை அளித்தது; அதனால், அவள், கன்றீன்ற பசு, அக் கன்றினை விடாது சுற்றித் திரிவதே போல் தலைமகளைப் பலகாலும் சென்று சென்று தழுவிக் கொள்ளலாயினள்; தாயின் இச் செயலால், தன் களவொழுக்கத்தினை அவள் உணர்ந்துகொண்டாள்; இனி ஈண்டிருப்பின், தன் கற்பொழுக்கத்திற்குக் கேடு வரினும் வரும்; ஆதலின் தலைமகனோடு அவனூர்சென்று வரைந்து கொள்வதே நலம் எனத் துணிந்தாள் தலைமகள்.

ஒருநாள் காலையில் ஒருவரும் அறியாவண்ணம் அவளும் அவனும் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டனர்; காலையில் கண்விழித்துப் பார்த்த செவிலி, தலைமகளைக் காணாது கலங்கினாள்; அவள் செயலில் தான் கண்ட மாறுதலையும்,, அதுகண்டு தான் செய்த செயலையும் எண்ணி எண்ணி வருந்தியிருக்குங்கால், சிலர் வந்து "அம்மா! மழை பெய்யாமையால், வருந்தி, அம் மேகத்தை வெறுத்து வாழும் மானினங்கள், வற்றிய மரச்செடியினைக் கடித்துச் சுவைக்கும் கொடிய காட்டுவழியில், பெருமையும், உரனும் கொண்ட ஓர் ஆண்மகன், பல இன்னுரைகளைக் கூறிக் கொண்டே வர, வற்றிய மரங்களின் நிழல்தோறும் நின்று

*

நின்று செல்லும் நின் மகளைக் கண்டோம் என்று கூறினார்; தன் மகள், ஆண்மகன் ஒருவனுடன் சென்றாள் எனக் கேட்ட செவிலி "அந்தோ, அவள்பால் யான் கண்ட மாறுதலின் காரணம் இதுவென அறிந்திருந்தால், உண்ணும் பொருளாலும், உற்ற காவலாலும் குறையில்லாத என் வீட்டில், அவள் தன் தோழிமாரோடு ஆடிடம் தோறும், நிழல்போல் விடாதுசென்று அகலாது இருந்து காத்திருப்பேன்! இனி என் செய்வேன்?" என வருந்தும் செவிலித்தாயின் அன்புள்ளத்தை மிக மிக அழகாகப் படம் பிடித்துப் பாடியுள்ளார்; தன் மகள் மாறுபாடு கண்டு கவலைகொண்டு அவளைப் பலகாலும் சென்று சென்று பேணிய செவிலியின் செயலை விளக்க, தான் ஈன்ற கன்றைச் சிறிதுநேரமும் விட்டுப் பிரிந்திருக்கப் பொறாது சுற்றிச் சுற்றிவரும் பசுவின் செயலை உவமை காட்டியது மிக மிக நன்று:

"கிளியும், பந்தும், கழங்கும் வெய்யோள்,
அளியும், அன்பும், சாயலும், இயல்பும்
முன்னாள் போலாள்; இறீஇயர் என் உயிர் எனக்
கொடுந்தொடைக் குழலியொடு வயின்மரத்து யாத்த
கடுங்கட் கறவையின் சிறுபுறம் நோக்கிக்,
குறுக வந்து குவவுநுதல் நீவி
மெல்லெனத் தழீஇயினேனாக, என்மகள்,
நன்னர் ஆகத்து இடைமுலை வியர்ப்பப்
பல்கால் முயங்கினள் மன்னே; அன்னோ
விறன்மிகு நெடுந்தகை பலபாராட்டி
வறன்நிழல் அசைஇ வான்புலந்து வருந்திய
மடமான் அசாஇனம் திரங்குமரல் சுவைக்கும்
காடுடன் கழிதல் அறியின், தந்தை
அல்குபதம் மிகுத்த கலியுடை வியன்நகர்ச்
செல்வுழிச் செல்வுழி மெய்ந்நிழல் போலக்
கோதை ஆயமொடு ஓரை தழீஇத்
தோடமை அரிச்சிலம்பு ஒலிப்ப, அவள்
ஆடுவழி ஆடுவழி அகலேன் மன்னே." (அகம் : சக)

தலைவன் பொருள் தேடிவர எண்ணித், தான் பிரிந்து போவதைத் தலைமகளுக்கு உரைத்து, அதை வருந்தாது ஏற்குமாறு செய்வாயாக எனத் தன்னிடம் கூறியது கேட்ட தோழி, அவன் பிரியின் தலைமகள் ஆற்றாள்; இறந்துபடலும் கூடும் என அஞ்சி, அவன் பொருள்வயின் செல்வதைத் தடுக்க எண்ணினாள்; எண்ணியவள் தலைவன்பால் சென்று, "ஐயா! நிலையில்லாத பொருள் தேடிவரச் செல்கின்றேன்; இதை நின் தலைமகளுக்கு உரை எனக் கூறுகின்றனை; நான் கூறுகின்றேன், அவள் நின்னைப் போகற்க எனத் தடை செய்யாள்; போவென்றே விடை யளிப்பாள்; ஆனால் அவள் விடை யளிப்பினும், பிரிந்தால் தனித்திருந்து வாழ்தலைப் பொறுது வருந்தும் இவளின், நெற்றியையும், முகத்தையும் அன்பால் தடவிக் கொடுத்து ஆறுதல் உரைகூறிப் பிரியும் அத்துணைத் துணிவு நினக்கு உண்டாகுமா என்றே ஐயுறுகின்றேன்," என்று கூறி, "தலைமகள் பிரிந்தால் தாங்கொணாத் துயர் கொள்வாள்; அவள் துயரை நின்னாலும் போக்குதல் இயலாது எனின், யான் எவ்வாறு போக்கி அவளைக் காப்பேன்," என்று கூறும் அறிவுநுட்பம் வாய்ந்த தோழியின் தொண்டினைப் பாடிப் பாராட்டியுள்ளார் புலவர்.

"மன்னாப் பொருட்பிணி முன்னி, இன்னதை
வளையணி முன்கைநின் இகுளைக்கு உணர்த்தெனப்
பன்மாண் இரத்தி ராயின், சென்மென,
விடுந ளாதலும் உரியள்; விடினே,
கண்ணும், நுதலும் நீவி, முன்நின்று
பிரிதல் வல்லிரோ? ஐய! செல்வர்,
வகையமர் நல்லில் அகஇறை உறையும்
வண்ணப் புறவின் செங்கால் சேவல்
வீழ்துணைப் பயிரும் கையறு முரல்குரல்
நும்மிலள் புலம்பக் கேட்டொறும்
பொம்மல் ஓதி பெருவிதுப் புறவே."

## உகா. விழிக்கண் பேதைப் பெருங்கண்ணனார்

கண்ணனார், பெருங்கண்ணனார் என்ற பெயருடைய புலவர்கள் சங்ககாலத்தே பலர் இருந்தனர்; மகளிர் கண்களுக்கு உவமை கூறும் சிறப்பு வாய்ந்த கண்களை உடைய மான் குட்டியை, விழிக்கட் பேதை என்று பெயரிட்டு அழைத்த சிறப்பால், பெருங்கண்ணனார் விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார் என்று பெயர் பெறுவாராயினர்.

பிடவமும், தளவமும் கொன்றையும், காயாவும் தளிர்த்து, மலர்ந்து மணங் கமழுமாறு மழை பெய்துவிட்ட கார்காலத்தே, மான் பிணையானது மருண்டு விழிக்கும் தன் குட்டியோடு, மான் கூட்டத்தினின்றும் பிரிந்து ஓடுவதைக் கண்ட கலைமான், அப் பிணையிடத்தே கொண்ட விருப்பால் அவற்றின் பின்னே தேடிச்செல்லும் அழகிய காட்சியைத் தலைமகன் முன்னே காட்டி, அவன் காதலியையும், அவளை விடாது உடனுறையும் அவள் புதல்வனையும் விரும்பி, விரைந்து வீடு செல்லுமாறு செய்துள்ளார் புலவர். மானின் அன்பு வாழ்க்கையினைக் கண்ட தலைமகன், தேரை விரைந்து செலுத்துமாறு பாகனை வேண்டிக்கொள்வதைக் காணுங்கள் :

"கார்தொடங் கின்றே காலை;வல் விரைந்து
செல்க; பாக! நின் தேரே; உவக்காண்
கழிப்பெயர் களரில் போகிய மடமான்
விழிக்கண் பேதையொடு இனன்இரிந்து ஓடக்
காமர் நெஞ்சமொடு அகலாத்
தேடூஉ நின்ற இரலை ஏறே." (நற் : உசஉ)

ரிப்பாளர் :

வலித் தென்னிந்திய
ற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
, சென்னை - 1.

லைமை நிலையம் :

ர்த்தெரு, திருநெல்வேலி.

விலை ரூ. 1-8.

ன்னை-1.